# நெத்திக்காசு



பாலரஞ்சனி ஜெயபால்

# நெத்திக்காசு

# ஆசிரியரின் பிற நூல்

மனசின் பிடிக்குள்

-ஹைக்கூக் கவிதைத் தொகுதி-

(மல்லிகைப் பந்தல்-2001)

# நெத்திக்காசு

பாலரஞ்சனி ஜெயபால்

எஸ்.கொடகே சகோத்தரர்கள் பிரைவைட் லிமிட்டட்

First Print - 2021

Neththik kaasu

© Balaranjanee Jeyapal

ISBN 978-624-00-1212-6

Page setting & Cover Design by
Memonkavi, Kalaranjani Varatharajasarma

Published by
S. Godage & Brothers (Pvt) Ltd.
661/665/675, P. de S. Kularatne Mawatha, Colombo 10, Sri Lanka.

Printed by
Chathura Printers
69, Kumaradasa Place, Wellampitiya, Sri Lanka.

23349/7431/250

முதற் பதிப்பு: 2021

நெத்திக்காசு

© திருமதி பாலரஞ்சனி ஜெயபால்

ISBN 978-624-00-1212-6

கணனிப் பதிவு மற்றும் அட்டை வடிவமைப்பு

மேமன்கவி, கலாரஞ்சனி வரதராஜசர்மா

**வெளியீடு**

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்

675- பி. டீ. எஸ். குலரத்ன மாவத, கொழும்பு - 10.

அச்சகம்

சதுர அச்சகம்

69- மொரதாஸ் பிளேஸ், வெல்லம்பிடிய.

23349/7431/250

## *சமர்ப்பணம்*

இவ்வுலகுக்கு எனை தந்த

என் அன்னைக்கும்

என் குடும்பத்தின் அறிவுக் கண்ணைத்திறந்திட்ட

என் மூத்த சகோதரிக்கும்

என் தன்னம்பிக்கையுணர்விற்கு

வித்திட்ட என் தமிழாசிரியை

திருமதி ராஜரட்ணம் அம்மையாருக்கும்

# முன்னுரை

-மலரன்பன் -

இலங்கையின் படைப்பிலக்கிய வரலாற்றில் பெண் எழுத்தாளர்களில் குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம், அன்னலெட்சுமிராஜதுரை, ந.பாலேஸ்வரி, பத்மாசோமகாந்தன், குந்தவை ஆகியோர் முன்னோடிகளாகத் திகழ்வதோடு, புதியவர்கள் பலர் சிறப்பாக பங்களிப்பு செய்துவரும் நிலையில், மலையகத்தில் கோகிலம் சுப்பையா, பூரணி, நயீமா ஏ.சித்திக், புசல்லாவ இஸ்மாலிகா முன்னோடிகளாகவும் சிறுகதை கவிதை என பன்முக ஆற்றல் கொண்டவராக லறினா ஹக், சிறுகதை நாவல் என ஈடுபாட்டுடன் இயங்கி வரும் பிரமீளா பிரதீபன், மற்றும் லுணுகலை ஸ்ரீ,ஜஸீமா ஹமீட், இளையநிலா பஸ்மினா அன்சார் என இளைய பரம்பரையின் படைப்புகள் நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தை சொந்த ஊராகவும் மாத்தளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டுள்ள பாலரஞ்சனி ஜெயபால் கவிதை, சிறுகதை, மெல்லிசைப்பாடல்கள் என தன்னுடைய பங்களிப்பை நல்குபவர். இலங்கை வானொலியில் இவரது மெல்லிசைப் பாடல்கள் ஒலிபரப்பாகியுள்ளன. 2001ஆம் ஆண்டு வெளிவந்த இவரது 'மனசின் பிடிக்குள்' ஹைக்கூ கவிதைத் தொகுதி சிலாகித்து பேசப்பட்டதோடு பரவலானதொரு அறிமுகத்தையும் தந்தது.

பாலரஞ்சனிக்கு நல்லதொரு இலக்கிய சூழல் அமைந்ததும் இவர் எழுதுவதற்கு தூண்டுகோலாய் இருந்திருக்கலாம்

அறுபதுகளுக்குப் பின் தமிழக இலக்கிய சிற்றேடுகளை நம் நாட்டுக்கு கொண்டு வந்து அறிமுகம் செய்து அர்ப்பணிப்போடு செயற்பட்டதோடு தற்போது இலண்டன் வாசியாகி அங்கும் தன் மேலான பணியை சிறப்பாக நல்கிவரும் இ.பத்மநாபஐயர் இவரது மூத்த சகோதரியின் கணவராவார்.

வீட்டிலிருந்தவாறே திரைப்படம் ஒன்றினைப் பார்த்து இரசிப்பதற்கு இன்றுபோல நவீன வசதிகள் எதுவுமற்ற திரைப்பட மாளிகைகளையே நம்பியிருந்ததொரு அன்றைய சூழலில்– ஏழாந்தர திரைப்படங்களைத் தவிர்த்து வாழ்வினை யதார்த்த பூர்வமாகவும் அர்த்தமுள்ளதுமாக சித்திரிக்கும் சர்வதேச தரத்திலான திரைக்காவியங்களை சிறிய புரஜக்டர் மூலம் காண்பிக்கும் முயற்சியினையும் பத்மநாபஐயர் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

கலை இலக்கிய வெளியீடுகளுக்கான அவரின் பங்களிப்பு பற்றி குறிப்பிட எவ்வளவோ இருந்தும் அதற்கான தளம் இதுவல்ல. மலையகத்தில் கல்வி இன்றுள்ள ஆர்வமும் முன்னேற்றமும் இல்லாதொரு காலகட்டத்தில் அன்றைய மலையகத்துறையை ஆராயும் சிறப்பானதொரு ஆவணமாக பாலரஞ்சனியின் மூத்த சகோதரியும் ஐயரின் மனைவியுமான காலஞ்சென்ற திருமதி. சொர்ணவல்லி பத்மநாப ஐயர் அவர்கள் “இலங்கையில் தோட்டப் பள்ளிக்கூடங்களின் கல்வியமைப்பும் பிரச்சினைகளும்” என்ற தலைப்பில் எழுதி ஆண்டில் வெளியிட்ட நூல் பற்றி இங்கே குறிப்பிடுவது மலையக மக்களின் கல்வி வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அக்கறையை மதிப்பதற்கேயாகும்

இ.பத்மநாப ஐயர் மாத்தளையில் வாழ்ந்த நாட்கள் மறக்கமுடியாதவை. திருச்செந்தூரன், பண்ணாமத்துக்

கவிராயர் ஆகியோரோடு இலக்கிய உரையாடல்களில் எனக்கும் பங்கேற்கும் பாக்கியம் நிறைந்த இந்த நாட்கள் இனி வரப்போவதில்லை.

தனது சகோதரி மலையகக் கல்வி வளர்ச்சியில் கொண்டிருந்த அக்கறை போலவே பாலரஞ்சனியின் சிறுகதைகள் மலையக இளம் சந்ததியினரின் எதிர்கால சுபீட்சமான வாழ்வுக்கு கல்வியொன்றே பிரதானம் என்பதை பேசுகின்றன.

மலையக தோட்டத் தொழிலாளர்களின் அறியாமையையும் மதுப்பழக்கத்தினால் வரும் சீரழிவையும் மலையக ஏனைய எழுத்தாளர்கள் எழுதியுள்ளது போல இவரும் எழுதுகின்றார்.

மலையக மக்கள் வாழ்வே பெரும்பாலான இவரது கதைகளுக்கு கருப்பொருளாக அமைந்துள்ளமைக்குக் காரணம் பல வருடங்களாக இவர் ஆசிரிய பணியை தோட்டப் பாடசாலைகளில் கொண்டிருப்பது மட்டுமல்ல மலையக மக்கள் மீது கொண்டுள்ள சமூக உணர்வும் தான்.

யாழ்ப்பாணத்தைப் பகைப்புலமாகக் கொண்ட ‘ரெண்டு லட்சம்’ என்ற சிறுகதை தன்னுடைய காரியத்தை சாதித்துக் கொள்ள வாக்குறுதியை மீறி நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களுக்கு என்றோ ஒரு நாள் தண்டனைக் கிடைக்கலாம் என்கிறது. ‘தங்க வளையல்’ என்ற கதையின் முடிவு ஓ. ஹென்றியின் ‘த நெக்லஸ்’ கதையை ஞாபகப்படுத்துகிறது.

காசு சேர்க்கவேண்டும் என்ற ஆர்வத்தில் சிறுவன் குமரேசு பிளாஸ்டிக் உண்டியலில் சில்லறைகளை சேமிக்க தாயாரின் மரணத்துக்குப் பின்னர் அவனுக்குத் தெரியாமலேயே எட்டுக்கும்பிடுவதற்காக உண்டியல் உடைக்கப்பட்டதையறிந்து திகைப்படையும் குமரேசுவின் மனநிலையை சொல்லும்

கதையான 'நெத்திக்காசு' 1998ல் இ.பத்மநாப ஐயர் லண்டனில் வெளியிட்ட 'இன்னுமொரு காலடி' மலரில் பிரசுரமானது.

மீரா என்ற மாணவி கல்வி கற்று சமூகத்தில் நல்ல நிலைக்கு வருவாள் என்பதையும் விட அவள் மீது பாச உணர்வுடன் பழகும் ஆசிரியை தான் எதிர்பார்க்காத 'மாற்றத்தினால்' மன அதிர்ச்சிக்குள்ளாகும் நிலையைக் கூறும் 'மாற்றம்' சிறுகதை, குடிகார தந்தை, ஊதாரியான அண்ணன், தோட்டத்தில் கூலிவேலை செய்து கல்வி கற்பிக்கும் தாய், தான் கற்ற கல்வியை புகட்டி தனது சமூகத்தை முன்னேற்ற விரும்பும் செல்வியின் சமூகப்பற்றும் தோட்டமக்களின் அவல வாழ்வும் என இவரது கதைகள் தொடர்கின்றன.

இலக்கியம் எந்த ரூபத்தில் இருந்தாலும் அகம் புறம் என்னும் இரண்டுக்குள்ளும் போராடிக்கொண்டிருக்கும் மனிதனையே அது பிரதிபலிக்கின்றது. மனிதன் இல்லாமல் இலக்கியம் இல்லை. எல்லா காலங்களிலும் எழுத்து மனிதம் சார்ந்த தர்மங்களை போதித்து வந்திருக்கிறது. அந்த போதனை என்பது அறிவியல் அல்லது மதம் சார்ந்த கட்டளையல்ல. அன்புடன் கூடிய உணர்வு.

அற உணர்வு சமூகத்தில் புரளும் போது மனித பண்புகள் மதிக்கப்படாத போது ஒழுக்கக்கேட்டையும் இலக்கியங்கள் எழுதுகின்றன. எழுத்தாளர்கள் இயங்குகின்றனர். மனித குலத்தின் மேல் அவர்களுக்குள்ள அக்கறை அது என அல் அஸூமத்தின் 'வெள்ளைமரம்' சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் 'சாகித்ய ரத்னா' தெளிவத்தை ஜோசப் குறிப்பிடுகின்றார். பாலரஞ்சனியின் கதைகளுக்கும் இது பொருந்தும. சிறுகதைப் போட்டிகளில் ஆர்வத்தோடு பங்குபற்றும் பெண்கள் ஒரிருவரும் பின்னர் காணாமல் போய் விடுகின்ற

யதார்த்தத்தில் தொடர்ந்தும் மாத்தளை மாவட்ட இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி பரிசுகள் பெற்றுவரும் பாலரஞ்சனிக்கு பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்..

**சாந்தி நிலையம்,**
**நோர்த் மாத்தளை,**
**கவுடுபெலல்ல.**

"சிறுவர்கள் முதல் சிறிய பூச்சி புழுக்கள் வரையிலான எளிய ஜீவராசிகளின் உயிரினங்களில் இவர் கொள்ளும் லயிப்பு இவரை இயல்பாகவே ஓர் ஹைக்கூ கவிஞராக பரிணமிக்க செய்துள்ளது. காத்திரமான தொகுதியில் ஆற்றில் பாதமுதைத்து விளையாடும் சிறுவன் முதல் ஆடுகள் தினவெடுக்கக் கல்லறை ஈந்த இறந்த மனிதன் வரை அடுக்கடுக்காய் மின்னலை அதிர்வலைகளை உண்டு பண்ணும் சித்திர வாரப்புகளால் வாழ்வில் பன்முக தரிசனங்கள். அவரின் உபுரிதலுக்கும் அனுபவத்துக்கும் ஏற்ப அர்த்த வியாபகமே கொண்டிருக்கக்கூடிய சின்ன சின்ன ஆச்சரியங்களால் மலர்ந்துள்ள சித்திரங்கள் "

**- பண்ணாமத்துக் கவிராயர்-**

**" மனசின் பிடிக்குள் " ஹைக்கூக் கவிதைத் தொகுதியிலிருந்து**

## உள்ளக் கிடக்கையிலிருந்து......

**திருமதி. பாலரஞ்சனி ஜெயபால்**

***மீ***ண்டோர் தடவை உங்கள் முன் சிறுகதைத் தொகுப்புடன் நான்.

எனது கவிதைகளாகட்டும், சிறுகதைகளாகட்டும் அறிமுகமானதும், புடம்போடப்பட்டதும், பாராட்டப்பட்டதும், விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டதும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடு தான். தொடர்ந்து பத்திரிகைகள், சிறுசஞ்சிகைகள், தொகுப்புக்கள் என்பன என் வளர்ச்சிக்கு வித்திட்டன.

அந்த வகையில் சிறுகதைத்துறையினுள் நான் நுழைவதற்குக் காரணமாய் அமைந்தது வானொலியில் ஒலிபரப்பப்படும் 'இசையும் கதையும்' நிகழ்ச்சிக்காக நானும் என் சகோதரி கலாரஞ்சனியும் இணைந்து எழுதி ஒலிபரப்பப்பட்ட பல்லவி இல்லாத சரணம் எனும் ஆக்கமேயாகும்.

நான் ஏலவே என் முதல் தொகுப்பில் கூறியதுபோல எனது ஆற்றல் கட்டுக்கோப்பான ஓர் ஒழுங்கமைப்பினுள் அமைவதற்கு முழுமுதற் காரணமாக மட்டுமல்ல முழு காரணமாகவும் அமைந்தது எனது மூத்த சகோதரியின் கணவரும் என் இலக்கியதந்தையுமான திரு. இ. பத்மநாபஐயரின் இலக்கிய பெட்டக பொக்கிஷமேயாகும். ஆனாலும் என் சிறுகதைகளுக்கான ஆடுகளம் என் தொழில் நிமித்தமே உருவானது. மலையக சமூகப் பின்னணி என் மனதில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

இயற்கை அழகு கொஞ்சும் குறிஞ்சி நில சாரலில் ஆசிரியப் பணியை ஆரம்பித்தபோது இருந்த மனமகிழ்வு, அந்த மக்களின் அவலங்களையும், பாதிப்புக்களையும், பின்தங்கிய நிலைமைக்கான அறியாமையையும், சோகங்களையும், ஏமாற்றங்களையும் உள்வாங்கிக் கொண்டபோது கண்காணா தேசத்தில் சென்று ஒளிந்து கொண்டது. உடனே அவற்றை கவிதை வடிவத்துள் பதித்து கொண்டாலும் மனதினுள் உறைந்து போன பற்பல நிகழ்வுகளையும் சம்பவங்களையும் அதே உணர்வுக் கொந்தளிப்புடன் வெளிப்படுத்த கவிதையை விடவும் பழு மிக்க வடிவமாக சிறுகதை அமைந்தமையே என் சிறுகதைப் பிரவேசத்துக்கான அடிப்படை.

மலையக மக்களின் சமூக அமைப்பு என் ஆசிரியப்பணியின் ஆரம்ப காலக் கட்டத்தில் இருந்ததைப் போன்று இன்று இல்லை. கிட்டத்தட்ட மூன்று தசாப்த கால இடைவெளியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டதன் பின் ஏற்பட்ட தொழிற்றுறை மாற்றங்கள் பெருந்தோட்ட பயிர் செய்கை முறையில் ஏற்பட்ட அறிவு சார்ந்த முன்னேற்றங்கள் அல்லது பின்னடைவுகள் கல்வியறிவு பெற்ற சமூக உருவாக்கம் போன்ற இன்னோரன்ன காரணங்களால் ஆரம்ப கால மலையக மக்களின் வாழ்க்கை முறையை விட இன்றைய மலையகம் பாரிய வேறுபாட்டைக் கண்டுள்ளது என்பது மறுதலிக்கமுடியாத நிஜம்.

இது இன்றைய யுகத்தின் தொழிநுட்பத்துறையின் முன்னேற்றத்தின் காரணமாக ஏற்பட்டது என்பதும் உண்மை.

இன்னுமொரு தசாப்த காலத்தின் பின் இந்நிலை முற்றிலும் வேறுபடலாம். ஒன்று முன்னோக்கியதாக அல்லது

பின்னோக்கியதாக. எது எப்படியிருந்தாலும் இந்த காலத்தினை நிலைநிறுத்தக்கூடிய வழிவகைகளில் ஒன்றாக இந்த சிறுகதைத் தொகுப்பு. எனவே ஒரு வரலாற்று ஏடாக என் இறந்தகால பதிவுகளை எப்பொழுதும் பசுமையாக அதே சந்தோஷத்தோடு அதே வேதனையோடு தக்கவைக்கும் கைங்கர்யமே இந்த தொகுப்பு.

என் முதல் படைப்பான 'மனசின் பிடிக்குள்' ஹைக்கூ தொகுதியை என் ஐயாவுக்கு சமர்ப்பித்திருந்தேன்.

ஐயா முற்போக்கு சிந்தனைகளை கொண்ட மிக சிறந்த ஒரு மனிதர். மானுட நேயமிக்க யதார்த்தவாதி. எங்கள் திறமைகளை சரிவர அடையாளம் கண்டு எம்மை வழிநடத்திய குரு. எனவேதான் என் முதல்படைப்பின் சமர்ப்பணம் என் குருவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதேபோன்று என் இரண்டாவது படைப்பினை எமை ஈன்றெடுத்த அன்னைக்கும் எங்கள் குடும்பத்தின் அறிவுக்கண்ணைத் திறந்து வைத்த என் மூத்த சகோதரிக்கும் அதே போன்று பள்ளிக்காலத்தில் என் எழுத்துத்திறனை அடையாளம் கண்டு காலைக்கூட்ட மேடையில் அதனை வெளிப்படுத்த வைத்து எனக்குள் தன்னம்பிக்கையை விதைத்த என் தமிழ் ஆசிரியை திருமதி ராஜரட்னம் அவர்களுக்கும் சமர்ப்பிக்கிறேன்.

என் சிறுகதைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தவை தினகரன் வாரப்பத்திரிகை, குன்றின்குரல், மல்லிகை, தொகுப்பு நூல்களான ஒரு கூடைக் கொழுந்து, மலையகப்பரிசுக் கதைகள், உழைக்கப்பிறந்தவர்கள் மற்றும் சுவிஸிலிருந்து வெளிவருகின்ற ஊடறு, இலண்டனிலிருந்து திரு. ஐயர் அவர்களால் தொகுக்கப்பட்ட இன்னுமொரு காலடி என்பனவாகும். இவற்றின் நூலாசிரியர்களை என்றென்றும் நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

அதேவேளை என் நெத்திக்காசு சிறுகதை ஜேர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டமையை பெருமையாக கருதுகிறேன்.

என்னை ஒரு பொருட்டாக கருதி என் இந்த சிறுகதைத் தொகுப்புக்கு முன்னுரை வழங்கி எனை கௌரவித்த மதிப்பிற்குரிய திரு.மலரன்பன் அவர்களுக்கு என் விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன். சிறந்த அரிய பல சிறுகதைகளை எழுத்துலகிற்கு வழங்கியது மட்டுமன்றி சிறந்த நாவலையும் படைத்து சாகித்ய விருது உள்ளடங்கியதாக பற்பல விருதுகளுக்கும் சொந்தகாரரான திரு.மலரன்பன் அவர்களால் முன்னுரை வழங்கப்பட்டமை என்னைப் பொறுத்தளவில் 'மோதிரக் கையால் குட்டு வாங்கிய மாதிரிதான்.

எத்தனையோ படைப்பாளிகள் இலைமறைகாயாய் எங்கும் வியாபித்து இருந்தாலும் தமது படைப்புகளை வெளிக்கொணர்வதில் உள்ள பொருளாதார சிக்கல்கள் காரணமாக 'இலக்கியத்தேக்கம்' அடைந்த நிலையில் காணப்படுகிறார்கள். அந்தவகையில் சகோதரமொழியை சார்ந்த கொடகே நிறுவனம் தமிழ்மொழியின் படைப்புகளை வெளியிட்டு சாதனைப் படைத்துக் கொண்டிருப்பது வார்த்தைகளால் வடிக்கமுடியாத அரியதொரு செயற்பாடாகும். அவ்வாறான சிறப்பான கொடகே நிறுவனத்தின் மூலம் என் சிறுகதைத் தொகுப்பு வெளிவருவதை எண்ணி பெருமையடைகிறேன்.

அதேவேளை கொடகே நிறுவனத்துடன் இணைந்து இப்பணியை செவ்வனே ஆற்றி வருகின்ற நண்பர் மேமன்கவியின் பங்களிப்பு மிக அளப்பரியது. எனவே என் இலக்கிய பயணத்தின் இறுதிவரை ஏன் அதன் பின்னாலும்கூட இந்த இலக்கிய தொடர்பு நிலைத்திருக்கும்.

அதேபோன்று அட்டைப்படத்தை வரைந்து என் தொகுப்பை முழுமையாக்கிய கைங்கர்யம் சகோதரி கலாரஞ்சனிக்குரியது. கருவறை தொடங்கி என்னுடன் இணைந்து, உயிரோடும் உணர்வோடும் கலந்து எனக்குள் அவளாகவும் அவளுக்குள் நானாகவும் இயங்கிக் கொண்டிருக்கின்ற என் உடன்பிறந்த சகோதரி திருமதி. கலாரஞ்சனி. வரதராஜசர்மாவுக்கு நான் நன்றி சொல்வது என்பது எனக்கு நானே நன்றி கூறிக் கொள்வது போன்றதேயாகும். சிறந்த ஓவியத்திறனை தன்னகத்தே கொண்டு தற்போது கனடாவிலும் ஓர் மாணவர்குழாத்தை உருவாக்கி தனக்கென ஓரிடத்தை தக்க வைத்து கொண்டிருக்கும் என் தங்கை மாற்கு மாஸ்டரின் மாணவி என்பது குறிப்பிடத் தக்க விடயமாகும். அவருடைய நவீன ஓவியத்திறனை வெளிச்சத்திற்கு கொண்டுவர என் சிறுகதைத் தொகுப்பு பங்களிப்பு செய்யும் என்பது என் நம்பிக்கை.

மேலும் எப்பொழுதும் எனது இலக்கியப் பயணத்தில் நான் சுதந்திரமாய் இயங்கிட எனக்கு உறுதுணையாக நின்று என்னை வழிநடத்தி செல்லும் எனது கணவர் திரு ஜெயபால் அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

என் சிறுகதைத் தொகுப்பை வெளிக்கொணர்வதில் முன்னின்றும் பின்னின்றும் உழைத்த அனைவருக்கும் என் விசேட நன்றியறிதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்

765/ 5c
சோமசுந்தரம் வீதி,
திருக்கோணமலை வீதி,
மாத்தளை.

## கலாரஞ்சனி வரதராஜசர்மா

பாலரஞ்சனியும் நானும் தாயின் கருவறையை ஒரே வேளையில் பகிர்ந்து கொண்டவர்கள். சிறுவயது முதலே கல்வி, இசை, நடனம் என ஒன்றாகவே, ஒரே பாதையிலேயே நடந்தோம்.. எனினும் எம்மையறியாமலே ஒரு காலகட்டத்தில், எனது கலையார்வம் ஓவியம் சார்ந்தும், பாலரஞ்சனியின் தடம் கவிதை, சிறுகதை, கட்டுரை என எழுத்துத்துறை பக்கமாகவும் மாறிப்போனது. ஆயினும் இருவரும் இருதுறைகளையும் இரசித்தோம்,…இரசிக்கிறோம்.. சேர்ந்து பயின்ற இசை காரணமாக, ஒரு காலகட்டத்தில் இருவருமே இலங்கை வானொலி நிகழ்ச்சிகளில் அதீதமான ஈடுபாட்டுடன் பங்களிப்பு செய்துள்ளோம். பாலரஞ்சனியின் புதுக் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் இவற்றுக்கு இலங்கை வானொலியோடு சேர்ந்து இலங்கையில் வெளியான பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் களம் அமைத்தமையை மறுக்க முடியாது. அப்படி வெளிவந்த சிறுகதைகளை ஒரு தொகுப்பாக வெளியிடும் சிறந்த முயற்சி இது. இதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைவதுடன். ஒரு சிறந்த "ஆவணமாக"வும் இதை கருதுகிறேன். ஆசிரியர்களாக எமது பயணம் மலையகப் பக்கங்களில் ஆரம்பிக்க, அந்த சூழல், சமூகம், அனுபவங்கள், பயணங்கள் என்பனவே அவளது எழுத்துக்களில் பெரும்பாலும் புதுக் கவிதைகளாக, ஹைக்கூ கவிதைகளாக, சிறுகதைகளாக பரிணமித்தது என்பது எனது கருத்து. சகோதரியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் இந்த தொகுப்பை வெளியிடும் பதிப்பகத்தார் உட்பட பின்னின்றுழைத்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இதயம் நிறைந்த வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கிறேன்.

# *உள்ளே.....*


பபியோவ்........................................................ 21

மாற்றம்........................................................ 32

மனமாற்றம்........................................................ 42

நெத்திக்காசு........................................................ 56

பசி........................................................ 70

ரெண்டு லட்சம் ........................................................ 82

சாஸ்த்திரம் மீறிய கீர்த்தனம்........................................ 95

ஸ்டிரைக்........................................................ 106

சுமைதாங்கி........................................................ 116

சுந்தரம்........................................................ 125

தங்க வளையல்........................................................ 134

தீக்குள் விரலை வைத்தால்........................................ 146

## "பபியோவ்"

"**ப**பியோவ்"

அந்த மலை முகடுகளிலெல்லாம் முட்டி மோதி எதிரொலித்தது அந்தக் குரல்.

மலையின் சரிவுகளில் வேகமாய் இறங்கிக் கொண்டிருந்தவள், நின்று முன்னால் விழுந்த முடிக்கற்றையை லாவகமாய் ஒதுக்கியபடி திரும்பிப் பார்த்தாள். அவன்–அதுதான் அவள் அண்ணன் ராசு மேலே நின்றிருந்தான். கோபமாய் முறைத்துப் பார்த்தவள் திரும்பவும் கீழிறங்கத் தொடங்கினாள்.

"பபி யோ....வ்" மீண்டும் முகடுகள் அந்தப் பெயரை உச்சரித்தன. பதிலுக்கு இவள் கத்தினாள். இடுப்பில் ஒரு கையை ஊன்றியபடி மற்றைய கையை ஆட்டி ஆட்டி கத்தனாள். "ஒனக்கு எத்தின வாட்டி சொல்லிப்புட்டேன், இப்படிக் கூப்புடாதன்னு. ஒழுங்கா எம்பேரச் சொல்லி கூப்புடு. இல்லாட்டி நா போறேன் போ...."

ராசுவின் முகத்தில் வெற்றிக் களிப்பு

"பபியோவ்.... ஏங்கையில என்னா இருக்குன்னு பாத்தியா?"

அவன் தன்னை 'ஏய்க்க' வென்று ஏதேனும் சொல்கிறானோ என்ற சந்தேகத்தோடு மெல்லமாய் திரும்பிப் பார்த்தவள் சட்டென முகமலர்ந்தாள். "அண்ணே, அண்ணே, எனக்கு தாண்ணே" கெஞ்சியபடியே விறுவிறுவென்று வேகமாய் மேலே ஏறிவந்தாள் பபி.

அவள் கெஞ்ச கெஞ்ச அந்த அழகான கறுப்பு நாய்க் குட்டியை தலைக்கு மேலே தூக்கியபடி கும்மாளமிட்டான் ராசு. "என்னா சொன்னே! பபியோவ்னு கூப்புடக்கூடாது. நா அப்புடியே தான் கூப்புடுவேன். ப...பி...யோவ்..., பபியோ...வ்.., பபியோவ்......" அவன் நீட்டி இழுத்து முழக்கி விதவிதமாய் கூவினான்.

"அண்ணே, நாய்க்குட்டிய தா. நல்ல அண்ணனில்ல" தன் பெயரை அவன் நீட்டி முழக்குவது பிடிக்காவிட்டாலும் பபிக்கு நாய்க்குட்டி மேலிருந்த ஆசை அதை மறைத்து விட்டது.

"பபியோவ்...." அடங்கிய குரலில் பபியின் அருகில் வந்து கூப்பிட்டான் ராசு. சிம்னி விளக்கின் ஒளியில் நிலத்தில் புத்தகத்தை விரித்து வைத்தபடி படித்துக் கொண்டிருந்த பபி ஏறிட்டுப் பார்த்தாள்.

"பபியோவ் ஓங்கிட்ட ஒரு சாமான் கேட்பேன் கட்டாயமா தரோணும். தருவியா?"

"மொதல்ல நீ என்ன பபின்னு கூப்புடு"

"ஐய்யோ! நா கேட்டத குடுப்பியா.... அத விட்டுட்டு...."

"இஞ்ச பாருண்ணே.. எம்பேரு பபி! ஒனக்கு ஏன் அப்புடிக் கூப்பிட முடியல?"

இப்போ கீழிறங்கி பேச வேண்டிய நிலை ராசுவுக்கு

"அதென்னமோ தெரியல. ஒன்ன பபியோவ்னு கூப்புடுறது தான் எனக்கு புடிச்சிருக்கு"

பெரிய மனுஷியாய் அவனை சிறிது நேரம் உற்று நோக்கிய பபி,"ம் என்னமோ கேக்க வந்தியே என்ன? என்றாள்.

"அது.. வந்து.... ஏங்கணக்கு கொப்பி முடிஞ்சு போச்சு. வாங்க மறந்து போச்சு, நாளைக்கு கொப்பியில்லாம போனா

மாஸ்டரு அடிப்பாரு. ஓங்கிட்ட புதுசா கொப்பி ஒன்னு இருக்கில்ல, அத தாறீயா…. நா நாளைக்கே புதுசு வாங்கி தந்திடுவேன்”

அவன் கெஞ்சிய தொனியில் கேட்டதை பார்க்க பாவமாக இருந்தது பபிக்கு. மறு பேச்சில்லாமல் கொப்பியை கொணர்ந்து நீட்டியவளிடம் சந்தோஷமாய் வாங்கிக் கொண்ட ராசு போகிறப் போக்கில் “பபியோவ்னா பபியோவ் தான்” என விஷமமாய் கூறிச் சென்றான்.

பபியையும் ராசுவையும் தவிர இராமையா குடும்பத்தில் லட்சுமியும் ஒருத்தி. அவள் தான் மூத்தவள். அவளுக்குப் பிறகு ஏழெட்டு வருடங்களின் பின் பிறந்தவன் ராசு. பபிக்கும் ராசுவுக்கும் ஓரிரு வருஷ இடைவெளிதான். அதனால், ராசுவுக்கும் பபிக்கும் லட்சுமியிடம் மதிப்பு, பயம், பாசம் எல்லாமே உண்டு. வீட்டுக்கு மூத்தவளாக அவள் அதட்டி உருட்டும் போது இருவருமே “கப்சிப்” ஆகி விடுவார்கள். ஆனால் ராசு பபி இருவரும் அண்ணன் தங்கை என்பதை விடுத்து கூட்டாளிகளாய் கொட்டமடிப்பார்கள். சின்ன வயதில், இருவரிடையேயும் சண்டையும் அடிதடியும் ஏற்பட்டிருந்தாலும் கூட வளர வளர அவர்களிடையே பாசமும் அன்பும் பிணைந்து கொண்டன.

ராசு படிப்பில் அத்தனைக் கெட்டிக்காரனில்லை. அவனுக்கும் சேர்த்து பபி படிப்பில் படுசுட்டி. சிலவேளை ராசு கணித பாடத்தோடு தடுமாறும் போது இவள் பெரிய மனுஷியாய் சொல்லித்தரும் அழகிருக்கிறதே.. அலாதிதான் போங்கள்!.

ஒருநாள் ராசுவின் அப்பா இராமையா அவனைக் கூப்பிட்டார். “அடே என்னடா! ஸ்கோல் மாஸ்டரு நீ படிக்கிறதேயில்லனு கூப்பாடு போடுறாரு. ஒழுங்கா படிக்க முடியுமின்னா படி, இல்லாட்டி ஏங்கூட கடையில வந்து நிக்கிற வழியப்பாரு”.

அதட்டியபடி அவர் சொல்லச் சொல்ல ராசு தன்னைச் சுற்றியிருந்த தளைகள் உடைந்து சுதந்திரம் கிடைத்தாற்போல் உணர்ந்தான். அம்மாவிடம் கெஞ்சி அப்பாவிடம் அனுமதி வாங்கி தன் படிப்பிற்கு பெரிய கும்பிடாய் போட்டு விட்டு தந்தையின் சிறிய கடையில் அவருக்கு ஒத்தாசையாய் நிற்கத் தொடங்கினான்.

வருடங்கள் கழந்தன. பபி உயர்வகுப்பு படித்துக்கொண்டு இருந்தாள். தங்கள் குடும்பத்தில் பபி மட்டுமே படிப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவள் என்பதால் வீட்டில் எல்லோருமே பபியிடம் மதிப்பு வைத்திருந்தனர். அக்காள் லட்சுமி கூட இவளிடம் யோசனைகேட்டு வீட்டுப் பொறுப்புக்களையும் வரவு செலவுகளையும் கவனிக்கத் தொடங்கினாள். ராசுவும் பபியிடம் அதே மதிப்பைக் கொண்டிருந்தாலும் பாசப்பிணைப்புடன் அடிக்கடி முன்னைய ராசுவாய் அவளை சீண்டி சிணுங்க வைப்பதில் எவ்வித குறையுமில்லை.

தன் தோழி சியாமாவை வீட்டுக்கு அழைத்து வருகின்ற சந்தர்ப்பத்தில் வேண்டுமென்றே தன்னை "பபியோவ்" என அடிக்கடி அழைத்து சீண்டுகிற அண்ணனை முறைப்பாள் பபி. பாரு சியாமா அண்ணன. எப்பவும் இப்படித்தான் எம்பேர இழுத்து நீட்டி கூப்புடுது என்ன சொன்னாலும் கேக்கவே மாட்டேங்குது" என சிணுங்குவாள். சியாமா சிரித்து மழுப்பினாலும் ஒரு தடவை பபியுடன் தனித்து பேசுகின்ற போது கூறினாள். "பபி ஒங்கண்ணன் பபியோவ்னு கூப்புடறது ஒனக்கு ஏன் பிடிக்கல? ஒரு வாட்டி அப்புடி ஒங்கண்ணன் கூப்புடறபோது நீ கவனிச்சு பாரு. அந்த குரல்ல இருக்கிற கனிவு, அன்பு, பாசம் எல்லாம் புரியும். ஒன்ன எதிர்பார்ப்புமில்லாத அவரோட அன்பு வெளிப்படையா தெரியுது. இப்படி அன்பா, பாசமா கூப்பிட எனக்கொரு அண்ணனில்லயேன்னு ஏம்மனசு ஏங்குது. நீ என்னடான்னா....

அதன்பிறகு தான் பபியும் ஊன்றி கவனித்தாள். உண்மைதான் ராசுவின் “பபியோவ்” அவனது அன்பை எல்லாம் அப்படியே பிரவகித்து தருவது புலப்பட, முதல் முறையாய் கண்களில் நீர்க்கசிய கனிந்து போனாள். கண்களை மூடிக்கொண்டு மனசுக்குள் அந்த அழைப்பை கொணர்ந்த மேனி சிலிர்க்க அந்த அன்பில் அவள் பூரணமாய் கரைந்து போனாள். அதன்பின் ராசுவின் அந்த “பபியோவ்” அழைப்பு பபிக்கு அமிருதமாய் ஆனது.

“பபியோவ்” எனக் கூப்பிட்டால் அடம் பண்ணாமல் ஆசையாய் பார்க்கிற தங்கையைப் பார்த்து அதிசயித்துப் போனான் ராசு. “அட.... இப்பல்லாம் ‘பபியோவ்னு’ கூப்புட்டா ஒனக்கு கோபமே வருதில்லயே’. என்னாச்சு ஒனக்கு?” என அவன் கேட்டபோது சிரித்தபடி கூறினாள் பபி. “இனிமே நீ அப்படியே கூப்புடுண்ணே அது தா நல்லாருக்கு”.

“ம்ஹூம்.... நல்லாருக்கா, இனிமே நா ஒன்ன அப்புடி கூப்புடுறத பாரு” மீண்டும் சீண்டியவளை கோபமாய் முறைத்துவிட்டு போனவளை சிறிது நேரத்திலேயே பழக்க தோஷத்தால் “பபியோவ்” எனக் கூப்பிட்டு விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டான் ராசு. தங்கையோ கண்களில் பெருமிதத்தோடு அண்ணனைப் பார்த்துச் சிரித்தாள்.

காலத்தின் கரைவில் வயதின் மூப்பில் ராசு–பபிக்கிடையேயான பாசமும் வளர்ந்தது. முன்னைய சீண்டலோ, கேலியோ எதுவுமின்றி ஓர் இறுக்கமான பாசமாக அது வளர்ந்தது. ஆனால் “கண்களில் கனிவு பளபளக்க, அடங்கிய குரலில் பாசத்தில் குழைத்தெடுத்த அந்த ‘பபியோவ்’ அழைப்பும் ஒவ்வொரு தடவையும் புதிதாய் கேட்கிறமாதிரி பபி அந்த குரலில் சிலிர்த்துப் போவதும் மாறவேயில்லை.

ஓடாய் உழைத்து தேய்ந்துபோன தந்தையின் பொறுப்பை தான் ஏற்றுக் கொண்டதும் குடும்பமே தன்னை நம்பி இருப்பதையும் முக்கியமாய் தன் அக்காவின் திருமணத்தை நடாத்தும் பொறுப்பு தன்னையே சார்ந்திருப்பதை உணர்ந்து கொண்ட ராசு கொழும்பில் தன் நண்பனுடன் சேர்ந்து புதிதாய் வியாபாரத்தில் ஈடுபடலானான். அவன் கொழும்பில் தங்கத் தொடங்கியதும் – அந்த தற்காலிகப் பிரிவு ராசு பபி இருவரிலும் சொல்லொண்ணா சோகத்தை விதைத்தது. ‘பபியோவ்’ என அழைத்த அவனது மடல்கள் அவளுக்குத் திருப்தியாக்கவில்லை. அவனும் அதை உணர்ந்தாற் போல் நேரம் கிடைக்கின்ற போதிலெல்லாம் வீட்டுக்கு ஓடி வந்துவிடுவான் ராசு. அந்தச் சந்தர்ப்பத்தில் தான் தனக்கும் அண்ணனுக்குமிடையிலான பாசத்தின் பரிமாணத்தையும் இறுக்கத்தையும் பபியால் சரிவர உணர்ந்து கொள்ள முடிந்தது. அவன் வருகின்ற போதிலெல்லாம் அந்த குடும்பமே சந்தோஷத்தில் அமிழ்ந்து போனது.

வீட்டாருக்கு மாத்திரமல்லாமல் ஊராருக்கும் ராசு வந்தால் கொண்டாட்டம் தான். அதுவும் ஊரில் நடக்கின்ற தேர்த்திருவிழாவின் போதும் பண்டிகைகளின் போதும் ராசுதான் நாயகன். கன்னங் கறுத்த தேகமும் சிறுபிள்ளைத்தனமான ஆர்வத்தோடு கண்கள் மலர சிரிக்கின்ற அழகும், எல்லோரையும் ராசுவிடம் இழுக்கும். ஊருக்கு வந்தானானால் முதல் வேளையாக எல்லோரையும் விசாரித்து விட்டு தான் மறு வேளைப் பார்ப்பான். திருவிழாவின் போது அவனது பொறுப்பு மிக்க தனமும் அதேவேளை சிறுபிள்ளைகளோடு சேர்ந்து அவன் அடிக்கின்ற கொட்டமும் ஊராருக்கு அவனில் அன்பை ஏற்படுத்த காரணமாயிருந்தது.

“எல்லாரையும் கவர்வதில் ஒங்கண்ணன் கெட்டிக்காரர்தான் பபி. அங்கபாரு எல்லோருடைய பார்வையும் ராசு அண்ண மேலதான். முக்கியமா பொம்புளக பக்கம் பாரு”. சியாமா கூற பெருமையோட பார்ப்பாள் பபி. “ ம்…. எங்கண்ணன் மாதிரி அழகான பொறுப்பான ஆம்பள இங்க வேறு யாரு இருக்கா? அம்மாகிட்ட சொல்லி அண்ணனுக்கு கண்ணேறு கழிக்கச் சொல்லணும் ஒங்கண்ணே பட்டுடும் பாரு”.

எல்லாவற்றுக்கும் சிகரமாய் பெரிய மனுஷனாய் அக்கா லட்சுமிக்கு மாப்பிள்ளைப் பார்த்து அவன் கல்யாணம் செய்து வைத்த போது இராமையா பூரித்துப்போனார். தம்பியின் மேல் உயிரையே வைத்திருந்த லட்சுமிக்கு அவனை இன்னமும் சின்னவனாகவே எண்ணியிருந்த லட்சுமிக்கு அவனது பொறுப்பு ரொம்பவும் நெகிழ வைத்தது.

லட்சுமியின் கணவனுக்கும் ராசுவை ரொம்பவே பிடித்துப்போனது. ஊர் முழுக்க ராசுவின் கெட்டிக்காரத்தனத்தை இராமையா குடும்பத்தின் அதிஷ்டத்தை எண்ணி மூக்கில் விரலை வைத்தது. அப்படிப்பட்ட உத்தமரை ஊர் போற்றிய நல்லவனை, பாசத்தின் பொக்கிஷத்தை தனக்கே தனக்கென எண்ணியிராதபடி, லட்சுமியின் திருமணம் முடிந்து ஒரு வருடம் நிறைவு பெறும் முன்னமே அந்த கொடூர சம்பவம் நடந்து முடிந்தது கூட ஒரு கனவாகத்தான் தோன்றுகிறது.

ஊர்மக்களுக்கும் ஏன் வீட்டாருக்கும் கூட என்ன ஏது என்ற விளக்கம் ஏதுமில்லாமலேயே, காரணமேயில்லாத காரணத்தால் ராசு மாண்டு போனான். ஊரே திகைப்பூண்டை மிதித்தாற் போல பேச்சிழந்து மூச்சிழந்து நின்றதென்றால் இராமையா குடும்பம்….?

முப்பதே வயதான அந்த இளம்பிராயத்தில், தன்னால் முடிந்தளவு சாதித்து முடித்துவிட்ட திருப்தியில், இனிமையான

கனா ஒன்றை காணுகின்ற பாவனையில், இறந்து போனானா என நம்பவே முடியாதபடி நீட்டி நிமிர்ந்து கிடந்த ராசுவின் சடலத்தைப் பார்க்க இயலாமல் கதறியவர்கள் ஏராளம். அந்த உடல் இருக்கப் போகின்ற அந்த சொற்ப நேரத்துக்குள் அவனை தம் கண்ணுக்குள்ளேயே இருத்திக் கொள்ளுமாப் போல் இமை கொட்டாமல், கண்களில் வடிந்த கண்ணீரை துடைக்க மறந்து பார்த்திருந்தோர் ஏராளம்.

"பொறுப்பை சுமக்க ஆண்பிள்ள வேணுமின்னாடா அக்காவுக்கு அவசர அவசரமா கல்யாணம் பண்ணி ஒரு மச்சான கொண்டாந்த? "தாயின் அந்த வேதனை வினாவுக்கு பதில் சொல்ல இறைவன் வருவானா என்ன? "எனக்கு கொள்ளி போடுவான்னு பெத்து வளர்த்தேனே. இப்ப அவனுக்கு நா போடும்படி பண்ணிப்பிட்டானே" இராமையா கதறினான். லட்சுமி, பபி இருவருமே இடிந்து போய் அழக்கூட திராணி இல்லாமல், சகோதரனின் மரணத்தை நம்ப முடியாமல் எதிரே கிடக்கின்ற சடலத்தைப் பார்த்தபின் நம்பாமலும் இருக்கமுடியாமல் உறைந்து போயிருந்தனர். விடயத்தை அறிந்ததும் ஓடோடிவந்த சியாமாவைக் கண்டதும் பபியின் மௌனம் உடைந்து கதறினாள். "ஐயோ.. இனி எப்ப நா அந்த குரல கேக்கப்போறேன்? இனிமே யாரு என்ன ஆசையா பபியோவ்னு கூப்பிடுவாங்க. என்னய ஆசையா, பாசமா, கூப்புடுற அண்ணே என்னவிட்டுப் போயிட்டாரே! அவளது கதறல் சியாமாவை உருக்கியது. வேதனையோடு கதறும் அவளை ஆந்த வழி தெரியாது தடுமாறினாள் சியாமா!

முடிந்து போனது. எல்லாமே முடிந்துதான் போனது. ஊர் வழமைக்குத் திரும்பியது. "காலம் பிரிவு சோகத்தை ஆற்றும் என்ற பெரியோரின் அனுபவ வாக்கிற்கிணங்க, நடைமுறை வாழ்க்கைக்கு எல்லோருமே பழக்கப்பட்டுப் போனார்கள்,

இராமையா குடும்பமும் கூட அதுதான் இயற்கையல்லவா? இராமையா குடும்பம் உண்மையில் உள்ளுக்குள் சிதறித்தான் போனது. ஆனாலும் ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருப்பதற்காகவே சோகத்தைத் துடைத்துக் கொண்டார்கள்.

பபி ரொம்பவும் மனசால் பாதிக்கப்பட்டாள். தனக்கு யாருமே இல்லாத தனியுலகில் தான் சிக்கிக் கொண்டதான பிரமையில் தவித்துப் போனாள். தனக்குள்ளே சோகத்தை ஜீரணித்துக்கொண்டு மனசளவில் ஜடமாகவும் வெளிப்பார்வைக்கு உயிருள்ள ஜீவனாகவும் தன்னைக் காட்டிக் கொண்டாள். ஆனால் மனம் மாத்திரம் யாருடைய பேச்சையும் கேளாமல், எந்நாளும், எந்நேரமும் “பபியோவ்” என்ற அந்த பாச அழைப்புக்காக ஏங்கிக் கொண்டே இருக்கத்தலைப்பட்டது.

காலம் யாரிடமும் அனுமதி பெறாமல் வேகமாக ஒடிச் சென்றது. இராமையா மகன் மறைந்த கவலையிலேயே இறந்துப்போனார். லட்சுமி தன் குழந்தை கணவனுடன் தனியாக சென்று விட்டாள். இப்போ பபியும் அம்மாவும் மாத்திரமே வீட்டில். இத்தனை காலமும் இருந்த ஆரவாரம் அடங்கி வீடு அமைதியானபின் பபியின் தாயின் வேதனை பலமடங்கானது. நாளும் பொழுதும் கண்ணீரோடு வாழுகின்ற அன்னையை தேற்ற பபிக்கு வழி தெரியவில்லை. அண்ணனின் படத்திற்கு முன்னால் நின்று “அண்ணே கனவிலயாச்சும் நீ வந்து என்ன ‘பபியோவ்’னு கூப்பிடக்கூடாதா” என வேண்டுவது பபியின் அன்றாட கடமையானது. ஆனாலும் அவளது குறும்புக்கார அண்ணன் அவள் கூப்புட்டதாலோ என்னவோ கனவில் கூட ‘பபியோவ்’ எனக் கூப்பிடவேயில்லை.

இப்போது பபி ஒரு கம்பெனியில் டைப்பிஸ்ட் உத்தியோகம் பார்க்கிறாள். அன்றாட நிகழ்வுகளில் மனம் ஈடுபடவே ராசு

இல்லாத சோகம் தொலைதூரப் புள்ளியாய் - இல்லையில்லை. வடுவாய் ஆகிப்போனது. இவள் களைத்துப்போய் வரும்போது "ராசு இருந்தா ஒன்ன இப்புடி கஷ்டப்பட வைப்பானா" என்ற அம்மாவின் புலம்பல். மனசில் அந்த ஏக்கத்தை ஞாபகப்படுத்தும். மனசைத் திடப்படுத்திக் கொண்டபோதும், அன்றாட கடமைகளில் மனசை செலுத்திக் கொண்டபோதும், உடலோடு உயிர் தாம் அறியாவண்ணம் ஒட்டியிருப்பது போல, பிறப்பிலேயே உடலில் அமைந்துவிட்ட உறுத்தாத 'மரு' போல மனசில் ஒரு மூலையில் நானும் இருக்கிறேன் என்று 'பபியோவ்' என்ற அழைப்புக்கான ஏக்கம் பதிந்து போனது.

வயது போன அம்மாவின் கட்டாயத்தாலும், லட்சுமியின் பிரயாசையால், பபிக்கு நல்ல இடத்தில் வரன் அமைந்தது. கொழும்பு கடையொன்றுக்கு உரிமையாளனான கண்ணன் லட்சுமியின் கணவனுக்குத் தெரிந்தவன். இரு தரப்பினரின் ஏற்புடனும் பபி-கண்ணன் திருமணம் சிறப்பாக நடந்தது. 'நம்ம அண்ணனிருந்தா' என்ற எண்ணம் பபியின் மனசில் ஒவ்வொரு கணமும் தோன்றிக் கொண்டே இருந்தது. அவள் பார்வையில் நிரந்தரமாய் தங்கிவிட்ட அந்த சோகத்தை சியாமாவால் மட்டுமே சரிவர உணர முடிந்தது.

சிறுபிள்ளையாய் ஏங்கிய மனதை கட்டுப்படுத்த வழி தெரியாமல் அண்ணனின் நினைவும், இயலாமையும் வாட்ட, மணப்பெண்ணுக்கேயுரிய களிப்பை முகத்தில் வரவழைக்க பெரிதும் தடுமாறினாள் பபி.

திருமணத்தின் பின் கண்ணனின் வீடு நோக்கி காரில் பயணப்பட்டபோது அவளது முகத்தில் தெரிந்த இறுக்கத்தைக் கண்டு அவளுடன் கதைக்க வழிதெரியாமல் தடுமாறினான் கண்ணன். பபியுடன் முன்பின் உரையாடி பழக்கமில்லாத

கண்ணனால் அவளது சோகத்தின் காரணமாக அம்மாவை, குடும்பத்தை பிரிந்த சோகம், திருமணக் களைப்பு இவைதான் நினைவுக்கு வந்தன. வீடு வந்தபின் பபி கண்ணனுடன் உரையாடினாலும் கூட அவளிடம் மணப்பெண்ணுக்கேயுரிய சந்தோஷம் காணப்படாதது கண்ணனுக்குப் புலப்படவே அவன் ரொம்பவும் குழம்பிப்போனான்.

கட்டிலில் அமர்ந்திருந்த பபியிடம் இன்னமும் அதே இறுக்கம் தென்படுவதை உணர்ந்து 'இனிதே கேட்டுவிட வேண்டும் என்ற அங்கலாய்ப்புடன் அருகே அமர்ந்தவன் 'பபி' என்று அழைத்தான். தன் சோகத்தை தனக்குள்ளே மட்டும் வைத்து அசைபோட்டு பழக்கப்பட்டுப்போன பபியின் காதுகளில் அந்த அழைப்பு எட்டவே இல்லை. ஏனோ கண்ணனுக்கு அவளைப் பார்க்க பாவமாக இருந்தது. இந்த நேரத்தில் அவளது எந்தவொரு துயரத்திற்கும் தான் மட்டுமே ஆறுதல் என உணர்ந்தவன் தடுமாறியபடி, அவளது கைகளின் மேல் தன் கையை வைத்து அன்போடும் ஆதுரத்தோடும் மீண்டும் அழைத்தான்.

"பபி.... பபி.... பபியோவ்..... "...."

(1999) மல்லிகை

# மாற்றம்

இன்று காலையில் தான் அவளை முதன்முதலாகச் சந்திக்கிறேன். பாடசாலை செல்லவென்று நான் பஸ்ஸில் அமர்ந்திருந்த சமயமது. இரு கைகளையும் புத்தகப் பையின் கைப்பிடிக்குள் நுழைத்து இறுகப் பிடித்தபடி புத்தகக் கட்டுக்களின் சுமை தாங்கமாட்டாது சற்றே வளைந்த முதுகுடன் பஸ்ஸினுள் ஏறிய அந்தச் சிறுமி, என்னை முதல் பார்வையிலேயே கவர்ந்தாள். நெரிசலினுள் இடிபடாமல் நாசூக்காக ஒதுங்கியவாறு நகர்ந்து வந்தவள் வாகாக இடம் பார்த்து நின்று கொண்டாள். பின்னால் தொங்கிய புத்தகப் பையின் மீது இடித்துக் கொண்டு ஒவ்வொருவராக நகரும் போது அவள் முகத்தில் தோன்றிய அந்தச் 'சுளிப்பு மின்னல்' மிகவும் எடுப்பாக இருந்தது. மெதுவாக அவள் கையைத் தொட்டு பையைத் தரும்படி சைகை மூலம் கேட்டேன். முகத்தில் இளநகையோடு சிரமப்பட்டு பையை விடுவித்து என்னிடம் தந்தாள். பஸ்ஸின் குலுக்கல்களுக்கெல்லாம் ஈடு கொடுத்து தைரியமாய் நிமிர்ந்துக் கொண்டு நின்று வந்தவளை கண்களால் அளவெடுத்தேன் நான்.

அந்த அழகிய கறுப்பு முகத்தில், உருண்டைக் கண்கள் வட்டமிட, இறுக்கமாய்ப் பின்னி மடித்து கட்டிய இரட்டைப் பின்னல்கள் தொங்க வெள்ளைச் சீருடையில் அழகாத் தெரிந்தாள் அந்தச் சிறுமி. அவளது நடை, உடை, பாவனை இவையனைத்துமே, அவளது வயதுக்கு மீறிய பெரிய மனுஷத் தோரணையைக் காட்டினாலுங் கூட அந்தக் கள்ளங்கபடமற்ற முகத்தில் தாராளமாகவே சிறுபிள்ளைத்தனம் மிளிர்ந்தது.

பஸ் நின்றதும் பையை வாங்கியபடி மெதுவா 'தாங்க்ஸ்' என்ற ஒற்றை வார்த்தையை உதிர்த்துவிட்டு நிமிடத்துள் மறைந்து போனாள்.

அடுத்த நாளும் அதே போல பஸ்ஸில் ஓடி வந்து ஏறினாள் அந்தச் சிறுமி. என்னைக் கண்டதும் தானாய் அருகில் வந்தாள். 'குட்மோனிங்' என்றபடி பையைத் தந்தாள். பதிலுக்குச் சொன்னபடி பையை வாங்க கை நீட்டினேன். பையைத் தந்தபடி, "எந்தநாளும் இதே பஸ்ஸுக்கு வருவிங்களாக்கா?" என்றவள் சற்றுத் தயக்கத்துடன் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். என் தோற்றத்தை மனதுக்குள் வாங்கியபடி சட்டென்று 'நீங்க டீச்சரா?' என்றாள். அதை அவள் கேட்ட விதம் அலாதியாக இருந்தது, தலையை சற்றே சரித்தபடி கண்களில் சந்தேகம் மின்ன, மழலையாய் அவள் கேட்டது மனதை நிறைத்தது. சிரித்தபடியே 'ஆம்' என்பதற்கு அடையாளமாய் தலையை ஆட்டிய நான் "உன் பெயரென்னம்மா?" என்று கேட்டேன். பய பாவத்துடன் "மீரா" என்றாள். ஓ… மீரா எவ்வளவு அழகான பெயர்! பெயரை உச்சரிக்கிற போதே ஒரு தெளிந்த அமைதி தெரிகிறதே! அந்த அமைதி அவளது முகத்தில் ஜொலிப்பதைக் கண்டுதான் மீரா எனப் பெயரிட்டார்களோ? எனக்குள் ஓடிய சிந்தனைகளை தள்ளியவாறு "எந்த ஸ்கூல்?" என்றேன். சொன்னாள், அது நகரின் பிரபலமான பாடசாலை ஒன்று தான். என்னில் தெரிந்த கனிவோ, அல்லது உரையாடல் தந்த உற்சாகமோ தெரியவில்லை. என்னிடமிருந்து பையை வாங்கிக் கொண்டவள் "தாங்ஸ் அக்கா" என்று கூறிவிட்டு, நாக்கைக் கடித்தபடி "சாரி டீச்சர்" என்று கூறிவிட்டு சிரித்த படியே போய் விட்டாள்.

இந்த நம் சிநேகம் தொடர்ந்தது. பரிச்சயமான பாவத்துடன் கூடிய சிரிப்புடன் பையைத் தானாகவே தந்தபடி 'குட்மோனிங்

டீச்சர்' என்று அவள் கூறுகின்ற போது தான் எனக்குள் விடியல் தோன்றும். அவளது பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்காக என் மாணவர் பலருடன் நான் சென்ற போதுதான் அவள் என்னில் வைத்திருந்த அபிமானம் எனக்குப் புலப்பட்டது.

அத்தனைக் கூட்டத்துக்குள்ளும் என்னைக் கண்டதும் ஓடிவந்து அவள் வரவேற்ற விதம் அருமைதான் போங்கள்! அன்றைய பொழுது முழுதும் மீரா என்னை விட்டு அகல வில்லை. அப்படியில்லாமல் எங்கேயாவது செல்ல நேர்ந்தாலும் அவள் பார்வை என் மீதே பதிந்திருக்கும். ஓ! இவள் என்னில் ஈடுபாடு வைத்திருப்பதை நான் எப்படி இவ்வளவு நாளும் உணராமல் போனேன்? அவளைத் தேடிக் கொண்டு வந்த தோழிகளிடமெல்லாம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள். "இவங்கதான் நான் அடிக்கடி சொல்லுவேனே அந்த டீச்சர்! பஸ்ஸில் எப்பவும் இவங்கதான் என் பையை வாங்கி வச்சிக்குவாங்க".

அவளை நோக்கி வந்த இன்னொருத்தி "என்ன மீரா! ஒன்ன எங்கெல்லாம் தேடுறது? இங்க நீ என்ன பண்ணிக்கிட்டிருக்க? அங்க டீச்சர் ஒன்னத் தேடுறாங்க. வினோத உடைப் போட்டிக்கு ரெடியாக வேணாமா மீரா?" என்று கண்டித்தாள். "கொஞ்சம் இருடி வாறேன்" என அடக்கமாய் அதட்டிவிட்டு "டீச்சர் இவதான் என்னோட பெஸ்ட் பிரெண்டு பெயர் நந்தினி. வகுப்பில் எப்பவும் இவதான் பர்ஸ்ட்" உற்சாகத்தோடு அறிமுகம் செய்தாள்! "அப்போ... நீ.." இது என் வினா. விடை சொல்லாமல் வெட்கப்பட்டு பின் தயங்கியபடி கூறினாள் மீரா "நா பத்து, பதினோராம் பிள்ளையாகத்தான் வருவேன்" கூட நின்ற நந்தினி "டீச்சர் படிக்க மாட்டா. படிச்சா அவளும் முதலாவதா வருவா" சிணுங்கியபடி... "என்னால

முடியாது டீச்சர்" என்றவள், நந்தினியின் கட்டளைக்கு பணிந்து "டீச்சர் போட்டி முடிந்ததும் வாறேன். போயிடாதீங்க என்ன?" என்றபடி சென்று மறைந்தாள்.

அதோ வினோத உடைப் போட்டி தொடங்கியது. எங்கே மீரா எனத் தேடி அலைந்தன என் கண்கள்! அட, சுப்பிரமணிய பாரதியார் வேடமிட்டு இருப்பவள் அல்லவா மீரா? அந்தக் கண்கள்தான் அவள் என அடையாளம் காட்டுகின்றன. மற்றபடி அவள் பாரதியாய் "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று வீரமாகக் கோஷமிட்டு முழங்கியபடி வருகையில் மீராவாகவே தெரியவில்லை. நம்பவே முடியவில்லை என்னால். அந்த அந்த அமைதி ததும்பும் கண்களில் எப்படி ஆவேசம் குடியேறியது? சற்று முன் சிறு குழந்தையாய் சிணுங்கிய அந்தக் குரலா இப்போ இடியாய் இறங்குகிறது? ஓ! இவளுக்குள் உள்ள திறமைதான் எத்தனை?

நான் நினைத்தாற் போலவே மீரா வானை முட்டிய கரகோஷத்தின் மத்தியில் முதலாமிடத்தைத் தட்டிக் கொண்டாள். இந்த சம்பவத்திற்குப்பின் தான் எனக்கும் மீராவுக்கும் இடையில் ஒரு நெருக்கமான அன்னியோன்யம் ஏற்பட்டது.

இப்போதெல்லாம் பஸ்ஸில் அவளுக்காக இடம் பிடிந்து வைப்பது எனக்கு வழக்கமாகி விட்டது. கூடுதலான நாட்களில் மீராவும் நானும் அருகருகே அமர்ந்தபடி சகல விடயங்களையும் பேசுவோம். இன்ன விடயம் தான் என்றில்லாமல் ஏதோ பேசுவோம். என்னை ஒரு டயரியாக பாவித்து விடிய எழுந்தது முதல் படுக்கப் போகும் கணம் வரை நடந்த நிகழ்வுகள் அத்தனையும் சுவாரஸ்யமாகக் கூறுவாள் மீரா. எனக்கு எவ்விதப் பிரயோசனமுமில்லாத அந்த சிறு பிள்ளைத்தனப் பேச்சில் நான் என்னையே இழந்து அமர்ந்திருப்பேன்.

தலையும் கைகளும் கண்களும் நர்த்தனம் புரிய பெரிய மனுஷத் தோரணையுடன் அவள் பேசும்போது அற்புதமாய் இருக்கும். அந்த ஆட்டத்துக்கு ஏற்றவாறு அவளது இரட்டை ஜடை பின்னல்களும் கூடவே அந்த 'தொங்கட்டான்' களும் ஆடும் அலாதி இருக்கிறதே கொள்ளை அழகு தான் போங்கள்.

தன் பாடங்களிலுள்ள சந்தேகங்களையும் என்னிடம் கேட்டு நிவர்த்தித்தும் கொள்வாள் மீரா. ஓரிரு நாட்களில் பஸ்ஸில் அவள் என்னருகில் அமர முடியாத நிலை ஏற்பட்டு விடும். எனக்குள் இருக்கும் ஆற்றாமையை மறைத்தபடி அவளைப் பார்த்து சிரித்தபடி பையைக் கேட்பேன். முகமெல்லாம் சுண்டிக் கறுத்துப்போக எதற்காகவோ ஏங்கித் தவித்தபடி அவள் நிற்கிறபோது எனக்கு உலகமே இருண்ட மாதிரி இருக்கும். அவள் மனதை மாற்ற நான் சிரித்துப் பேசினாலும் 'உம்' என்று இருப்பாள். முகம் இன்னமும் வாடிப் போகும்.

ஒரு நாள் இப்படித்தான் அவள் நின்று கொண்டிருக்க, நான் ஏதோ சொல்ல அவள் பேசவேயில்லை. பக்கத்திலிருந்த இன்னுமொரு ஆசிரியை ஏதோ கேட்க அவருடன் சற்று சுவாரஸ்யமாய் நான் கதைத்துக் கொண்டிருந்தேன். இடையிடையே மீராவைப் பார்த்தபோதெல்லாம் என்னைக் காணாத பாவனையில் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். முகத்தில் சொல்லொணா சோகம். ஒரு நிறுத்தத்தில் பக்கத்திலிருந்த ஆசிரியை இறங்கிவிட அவளை அழைத்துப் பக்கத்தில் இருக்கச் சொன்னேன். அமர்ந்தவள் என்னோடு ஒன்றுமே பேசவில்லை. "என்னம்மா மீரா ஒரு மாதிரியா இருக்கே, உடம்புக்கு ஏதும் சுகமில்லையா?" என நான் கேட்டது தான் தாமதம், திடுக்கென்று திரும்பிய அவளது விழிகளில் கண்ணீர் கரைகட்டி நின்றது. புதறியபடி அவளிடம் "என்னாச்சு மீரா" என்றேன். "டீச்சர் நான் நின்னுக்கிட்டு வர்றப்போ

நீங்க மற்றவங்களோட சிரிச்சு கதைச்சுகிட்டு வாறீங்க. ஒங்க பக்கத்தில் இருக்க முடியலியேன்னு நா கவலைப்படற மாதிரி ஒங்களுக்கு தோணாதா டீச்சர்? என்ன பத்தின நினைவேயில்லாம சிரிச்சிகிட்டு வர்றீங்களே?". என் மனசில் விழுந்த அறையில் இருந்து மீள முடியாமல் தவித்தேன். "ஓ.. மீரா உள்ளுக்குள் குமைந்தபடி வெளிப்பார்வைக்கு சிரிக்கும் கலையை பெண் ஜென்மமான நீயும் கற்றுக் கொள்ள இன்னும் காலம் இருக்குதடி பெண்ணே!" என்று அவளிடம் சொல்லவா முடியும் என்னால்?

இரண்டுங்கெட்டான் நிலை என்னுடையது. அவளிடம் கதைக்காமல் வேறு யாருடனும் நான் கதைத்தால் அனிச்ச மலராய் வாடிப் போகின்ற அந்த முகத்தைப் பார்க்க முடியாமலும் அதே நேரம் பிறருடன் உரையாட வேண்டிய அவசியத்தைத் தவிர்க்க முடியாமலும் தவித்துப்போவது நான்தான். அவளானால் என்னைக் கண்டதும் கூட வந்த மாணவிகளை மறந்தே போவாள். ஏதோ அவளுக்கும் எனக்குமான தனி உலகத்தைச் சிருஷ்டித்துக்கொண்டு நாம் மட்டுமே வாழ்வதான எண்ணத்தில் கதைத்துக் கொண்டே வருவாள்.

இந்த சமயத்தில் தான் எனக்கு ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கான நேர்முகத் தேர்விற்கு அழைப்பு வந்தது. அன்றைய தினம் நான் வரமாட்டேன் என்பதை அவளிடம் சொன்னேன். இல்லாவிட்டால் அது வேறு விபரீதமாகி விடுமே. "ஏன் என்னிடம் சொல்லலை?" என்று துளைத்தெடுத்து விடுவாள்!

"ஏன் வரமாட்டீங்க டீச்சர்?" என்றாள் மீரா. விளக்கினேன். "பயிற்சி எத்தனை நாள் நடக்கும்?" சிறுபிள்ளைத் தனமான கேள்விக்கு எப்படி பதில் சொல்லுவது? நாள்க் கணக்கில் நினைக்கின்ற அவளிடம் இரண்டரை வருடங்கள் பயிற்சி

நடக்கும் என்பதை எப்படிச் சொல்வது. ஆனாலும் சொல்லாமல் முடியுமா என்ன? ஒரு மாதிரியாகச் சொன்னேன். “என்ன இரண்டரை வருடமா?” அதிர்ச்சி, ஆச்சரியம், சோகம் எல்லாம் கலந்த கவலையால் தழுதழுத்தது குரல். கண்களில் கண்ணீர் ஓரங்கட்டி நின்றது. மேற் கொண்டு எதுவுமே பேசாமல் ஊமையாகிப் போனாள் மீரா.

‘நான் போகாமலேயே இருந்து விடுவோமா என்றகூட தோன்றியது. ஆனால்... முடியாதே! அடுத்து வந்த நாட்களில் அவளது சிரித்த முகத்தையே காணவில்லை நான். எதையோ பறி கொடுத்த மாதிரி எங்கோ பார்த்தபடி வருவாள்.

நாட்கள் கடக்க நான் பயிற்சிக்கு போக வேண்டிய நாளும் நெருங்கியது. “மீரா நான் நாளையிலிருந்து வரமாட்டேன். ஆனால் பயிற்சி முடிந்ததும் நான் நிச்சயமா உன்னோட பாடசாலைக்கே வந்திடுவேன். எப்போதும் நீ என் கூடவே இருக்கலாம். நல்ல பிள்ளையா நீ படிக்கணும். எனக்கு அடிக்கடி லெட்டர் போடணும் என்ன? நீ இப்படிக் கவலையா இருந்தா எனக்கும் கவலையா இருக்கு. ப்ளீஸ்... முன்ன மாதிரி இன்னிக்கு மாத்திரமாவது சிரிச்சி கதைக்க மாட்டியா?” என் பேச்சு அவளை என்னவோ செய்திருக்க வேண்டும். சட்டென்று திரும்பிப் பார்த்தாள் என்னை. “மன்னிச்சிடுங்க டீச்சர். நாளையிலிருந்து நீங்க இந்த பஸ்ஸில வரமாட்டீங்கல்லியா? இனிமே எப்படி நா... நா தனிய இந்த பஸ்ஸில போவேன். ரொம்ப கவலையா இருக்கு டீச்சர். என்னால எப்படி சிரிக்க முடியும்? ஆனா... நீங்க திரும்பவும் நம்ம ஸ்கூலுக்கே வருவீங்கங்கிறது சந்தோஷமான விஷயம் தான். நீங்களும் எனக்கு அடிக்கடி லெட்டர் போடனும். டீச்சர்.. டீச்சர். அங்க போனதும் என்ன மறந்திட மாட்டீங்களே?” கண்களில் சந்தேகமும் சோகமும் மின்ன அவள் கேட்ட போது என்னுள் ஏதோ ஒன்று கரைந்தது.

அவளைக் கட்டியணைத்தபடி, “இல்லம்மா இந்த மீராவை என்னால என்னிக்குமே மறக்க முடியாது. நீ கெட்டிக்காரியா படிக்கணும். வகுப்பில் நீ பர்ஸ்டா வரணும். வருவியா?” என்றேன். “நிச்சயமா நா இனி நல்ல படிப்பேன் டீச்சர்.” நம்பிக்கையோடு சொன்னவள் அவள் இறங்கும் இடம் வர பிரியமுடியாமல் பிரிந்தாள். என்னிடமிருந்த ஏதோ ஒன்று நழுவி அவளுடன் போன மாதிரி இருந்தது. என்னாலேயே தாங்க முடியலை. பாவம் சின்னவள். என்ன செய்வாள். கண்களைத் துடைத்தபடி பையை மாட்டியவாறு போகும் மீராவுடன் நான் ஏன் பழகினேன்? இந்த பந்தம் ஏன் ஏற்பட்டது?

கலாசாலையில் காலடி வைத்தாலும் மனசுக்குள் வெறுமை தட்டியது. அவளுக்கு கடிதம் எழுதினேன். அடுத்த இரு நாட்களுக்குள் பதில் வந்தது மீராவிடமிருந்து. தன் ஆதங்கத்தையெல்லாம் மறைக்காமல் எழுதியிருந்தாள். பஸ்ஸில் போகவே பிடிக்கலியாம். காலம் தான் எனக்கும் அவளுக்கும் ஆறுதல் தரும் மருந்தாக வேண்டும் என நினைத்துக் கொண்டேன் நான்.

காலம் ஆறுதல் தந்தது. இயந்திர யுகத்தின் வளைவு சுளிவுகளுக்கு நானும் மீராவும் வளைந்து கொடுத்து விட்டோம் என்பதை நம் கடிதங்களே பறை சாற்றின. மீரா நன்றாகப் படிக்க ஆரம்பித்து விட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டபோது எனக்கு சந்தோஷமாயிருந்தது. ஒவ்வொரு மடலின் இறுதியிலும், அவளது பாடசாலைக்கு நான் வருவது பற்றிக் குறிப்பிட்டு அப்போது அனுபவிக்கப் போகின்ற சந்தோஷ ங்களைக் கற்பனையில் வடித்திருப்பாள்.

வருடம் ஒன்று ஓடிப் போனது. சம்பள விபரம் தொடர்பாக முன்னைய பாடசாலைக்குப் போக வேண்டியிருந்ததால்

மீராவுக்குக்கூட அறிவிக்காமல் எப்போதும் நாம் பயணிக்கிற பஸ்ஸில் ஏறினேன். மீராவும் ஏறினாள். தற்செயலாக திரும்பியவள் என்னைக் கண்டதும் பஸ்ஸென்பதையும் மறந்து ஓடி வந்தாள். முகமெங்கும் சந்தோஷம் கொப்பளித்தது. "என்ன டீச்சர் டிரெயினிங் முடிஞ்சுருச்சா? எங்க ஸ்கூலுக்கா வாறீங்க" எதிர்பார்ப்போடு கேட்டவளை பார்க்க சிரிப்பு தான் எனக்கு வந்தது. "இல்லையம்மா அவசரமாக என்னோட ஸ்கூலுக்கு வர வேண்டியிருந்திச்சு! இன்னும் நமக்கு டிரெயினிங் முடியலையே. முடிஞ்சவுடனே ஒன்னோட ஸ்கூலுக்குத்தான் வருவேன்" என்றபடி "நீ எப்படி இருக்கிறே" என்றேன். கதைக்க ஆரம்பித்தவள் நிறுத்தவேயில்லை. ஒரு வருட கதையையும் கூற விளைந்தவளாய், ஏதேதோவெல்லாம் கூறிக்கொண்டு போனாள். எனக்கு அவளது சந்தோஷம் தான் தேவையாயிருந்தது.

தொடர்ந்து நமது பயிற்சி முடிவடையும் தறுவாயும் வந்தது. பரீட்சைகளும் முடிய நான் போக விரும்பிய பாடசாலையே எனக்குக் கிடைத்தபோது மனசு சிறு பிள்ளையாய் சந்தோஷம் கண்டது. குதியாட்டம் போடத் துடித்த என் மனசுடன் நான் என் ஊருக்குப் பயணமானேன்.

அடுத்த நாள் மகிழ்ச்சியுடன் கண்ட விடியலானது கையில் மீராவின் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்ற கடிதத்துடன் அவளுக்காக நான் வாங்கிய பரிசுப் பொருட்களுடன் பஸ் ஏறினேன். மீராவைக் காணத்துடித்தது மனம். அதோ... அதோ வருகிறாள். ஓ... இப்போ அவள் சிறுமி அல்ல. பெரியவளாய் வளர்ந்து விட்டிருந்தாள். கூடவே அந்த சிறுபிள்ளைத்தனம் மறைந்து கண்களில் அமைதி பாவம் தெரிந்தது. என்னைக் கண்டதும் அவளில் தான் சந்தோஷத்தில் ஒரு அதிர்ச்சியும் தெரிந்தது. "ஒ டீச்சர் எங்க டிரெயினிங் முடிஞ்சிச்சா. எங்க

ஸ்கூலுக்குத்தானே வாறீங்க?” என்றவளின் பழைய துடிதுடிப்பு இல்லை. எனக்குள் களியாட்டம் புரிந்த மனசைக் கட்டுப்படுத்தியபடி “உட்காரேன் மீரா! ஒனக்காக நான் என்ன கொண்டு வந்திருக்கேன் தெரியுமா?” என்றேன். அவள் சுற்றும் முற்றும் யாரையோ தேடினாள். “ஸாரி டீச்சர் நா பின்னுக்கு போய் உட்கார்றேன். இனிமே ஸ்கூல்ல நாம அடிக்கடி கதைக்கலாமே” என்றபடி நகர்ந்தாள்.””என்னாச்சு இவளுக்கு” என்று எண்ணியபடி திரும்பிப் பார்த்தேன். மீரா, என் சின்ன மீரா, ஒரு மாணவனின் அருகில் அமர்ந்தபடி அன்னியோன்யமாகக் கதைத்துக் கொண்டிருந்தாள்! என் மடியிலிருந்த பரிசுகளும், என் மனசும் ஒரு அந்தகாரத்தில் நொறுங்கிப் போய் விழ தனியளாய் அதிர்ந்து நின்றேன் நான்!!

**ஒரு கூடைக் கொழுந்து (1993)**

# மனமாற்றம்

அதோ! குந்தியமர்ந்து வெறும் வாயை மென்று கொண்டு கண்ணில் சதா காலமும் ஏக்கமும் சோகமும் குடிகொண்டிருக்க, எங்கோ ஒரு அமானுஷ்யபுள்ளியை வெறித்து நோக்கியபடி, கைகளால் கன்னத்திற்கு முட்டுக் கொடுத்தபடி அமர்ந்திருக்கிறாளே, அவள்தான் செல்லாச்சிக்கிழவி. நைந்து கிழிந்து போய், பற்பல இடங்களில் தையல்கள் போடப்பட்டு, அவை தைக்கப்பட்ட காரணத்தாலேயே கிழிந்து போகத் தொடங்கியிருந்த, அந்த நிறமே மாறிப்போன சேலையை எப்படியோ மானம் காக்க வாகாய் உடுத்திக் கொள்வதில் தான் ஒவ்வொரு தடவையும் வென்று விடுவதை நினைத்து கிழவிக்கு அலாதிபெருமை. வரிவரியாய், சுருங்கிப்போய் மெதுவாகிப்போன முகமும், அந்த பொக்கைவாயும், எப்போதும் ஈரம் மின்னும், வெள்ளை படர்ந்த சின்ன கண்களும், வறண்டு போன உடம்பும், குச்சியாய் 'ஏதோ இருக்கிறேன்' என காட்டிக் கொண்டிருந்த கைகால்களும் செல்லாச்சிக் கிழவியின் ஏழ்மைத்தனத்தை அப்பட்டமாய் பறைசாற்றின.

எப்போதுமே பகற்பொழுதுகளில் இந்த ஆலமரம்தான் அவளுக்குத் தஞ்சம். ஆழமாக வேரூன்றி,படர்ந்து, கிளைத்து, விழுதுகள் தரைமுட்ட, பாரந்தாங்கி நிற்கின்ற இந்த மாபெரும் மரத்தடியில் சாய்ந்திருப்பதில் எப்போதுமே அலாதிப் பிரியம் அவளுக்கு. அந்த மரத்தை தானாக கற்பனைப் பண்ணிக் கொண்டு விழுதுகளாய் தாங்க யாருமேயில்லாக் குறையை இந்த மரத்தடியில் சாய்ந்து தீர்த்துக் கொள்கிறாளோ என்னமோ?

ஓர் அத்துவானப் பிரதேசமான இந்த சின்னஞ்சிறு கிராமத்தின் உயிர்நாடியே இந்த ரயில் நிலையம்தான். எப்போதோ வந்து நின்று மிக சொற்பமான ஆட்களையே இறக்கியும் ஏற்றியும் செல்கின்ற ஓரிரு ரயில்களை விட, அடிக்கடி கடந்து போகும் கூட்ஸ் வண்டிகளின் இரைச்சல்களே எப்போதும் அந்த பிரதேசத்துக்கு உயிர் கொடுக்கும். அந்த ரயில்நிலைய முன்றலில்தான் இந்த படர்ந்த ஆலமரம் ஆஜானுபாகுவாய் நிற்கிறது. பொழுது சாய சாய மரத்தில் வந்து அடைக்கலம் புகும் பறவைகளின் இரைச்சல்களையும் வௌவால்களின் கீச்சிடல்களையும் தாங்கமாட்டாது செல்லாச்சிக்கிழவி மெதுவாய் கம்பை ஊன்றியபடி, நடந்து அந்த ரயில் நிலையத்தின் ஓரமாய் ஒதுங்கிக் கொள்வாள்.

இரவு வண்டியின் வருகைக்காகக் காத்திருக்கும் ஸ்டேசன் மாஸ்டரையும், செல்லாச்சிக் கிழவியையும், மின்னுகின்ற ரயில்நிலைய லைட்டுக்களையும், அவற்றையே சுற்றி சுற்றி வந்து விழுந்து மடிகின்ற விட்டில்பூச்சிகளையும் தவிர அந்த பிரதேசம் இரவில் எதையும் புதிதாய் காணாது. இரவு வண்டி நகர, பக்கத்தேயிருக்கின்ற குவார்ட்டஸை நோக்கி நடைபோடும் ஸ்டேசன் மாஸ்டர் பெருமாள் போகிறபோக்கில் “என்ன ஆச்சி! சாப்டியா” என்று கேட்டபடியே பதிலுக்குக் காத்திராமல் நகர்வார். இருக்கின்ற நிலைமைக்கேற்ப கிழவியிடமிருந்து வருகின்ற பதில்களும் வேறுபடும். ஒருநாள் “யாரு பெத்த மகராசனோ தெரியல.அவன் புண்ணியத்துல இன்னிக்கி வயிறு ரொம்பிடுச்சி.” என்பாள். இன்னொரு நாள் “ஆமாஞ்சாமி! ஏதோ வயித்துப்பாட்ட கவனிச்சிக்கிட்டேன்” என்பாள். அதுவும் இல்லாவிட்டால் “ம்ஹூம்” என்ற ஒரு சிறு முனகல் விடையாய் தெறிக்கும்.எல்லாம் வயிற்றின் கொள்ளளவுக்கேற்பவே விடையாய் மாறும். சுருங்கிய

வயிற்றைப்போலவே வார்த்தைகளின் எண்ணிக்கைகளும் சுருங்கிக் கொண்டுபோவதை யாரால் தடுக்கமுடியும்?

இரவுகளை அதுவும் தன்னந்தனிமையில் நீண்டு போகின்ற இரவுகளை இவள் எப்படித்தான் உள்வாங்கிக் கொள்கிறாளோ தெரியவில்லை. முழங்கால்களை இரு கைகளினாலும் இறுகக் கட்டிப்பிடித்தபடி, தன்னிடமிருப்பதில் சற்றே தடிப்பான அந்த பழைய போர்வையினால் உடலை இறுகப் போர்த்திக் கொண்டு, கூடுமான இரவுகளை அவள் அமர்ந்திருந்தே அனுப்பி விடுவாள். விட்டு விட்டு மின்னுகின்ற அந்த மெர்க்குரி விளக்குகளுக்கேற்ப கிழவியின் கண்களும் 'கொட்டு கொட்டென' மின்னும். அந்த விழிகள் தன் பழைய நினைவுகளில் உறங்காமல், களைக்காமல் ஒன்றி போயிருக்குமோ?

செல்லாச்சிக்கிழவியை பரம்பரை ஏழையாக எண்ணி விடாதீர்கள். அவளும் உங்களைப் போல பணத்தில் மிதந்தவள்தான். கழுத்து தாங்கமாட்டாத நகைகளை சுமக்காவிட்டாலும், நகைகளைப் பொலிவாக அணிந்தவள்தான். அவளது வாழ்க்கை நிகழ்வுகள் சுவாரஸ்யமானவை. கூடவே சோகமானவை. இடுங்கிப் போன அந்த கண்களில் சதா நிலை கொண்டுவிட்ட சோகங்களின் காரணகர்த்தாவே அவளது வாழ்க்கைத்தானே.

குடும்பத்தின் மூத்த பெண்ணாகப் பிறந்த செல்லாச்சிக்கு வீட்டில் தாராளமாகவே அன்பும் கரிசனமும் செல்லமும் கிடைத்தது. இவளுக்கு அடுத்தபடியாக ஒரு தங்கையும் தம்பியும் இருந்தாலும் வீட்டிற்கு இந்த செல்லாதான் ரொம்பவும் செல்லம். பருவ வயதை எட்டிப் பிடித்து விட்ட செல்லா கொள்ளை அழகுடன் ஊரின் இளவட்டங்களைத் திணற அடித்தவள்தான்.

பளபளவென மின்னுகின்ற கருநிறமும், அகன்ற விழிகளும், செதுக்கி விட்டாற் போன்ற முக லட்சணமும், 'திண்ணென்ற' உடம்பும், அலைஅலையாய் முழங்கால் வரை நீண்டு தன்னிச்சையாய் ஆடி அழகூட்டும் கூந்தலும் செல்லாவுக்கான வரப்பிரசாதங்கள். அவள் வீதியில் இறங்கி நிலம் பார்த்து நடக்க ஆரம்பித்தாளானால் திறந்த வாய் மூடாது பார்த்திருக்கும் வாலிப வட்டங்கள் ஏராளம்.

எல்லாவற்றுக்கும் சிகரமாக அவளது அழகுக்கெல்லாம் ஈடு கொடுக்குமாப்போல் ஆஜானுபாகுவாய், கம்பீரமாய், விரிந்த தோளும் நிமிர்ந்த நெஞ்சுமாய் முத்துவேலு இவளை கொத்திக் கொண்டு போனபோது ஊரே மூக்கில் விரலை வைத்து வியந்தது. இருவரில் யார் கொடுத்துவைத்தவர்கள் என்பதே அடுக்களைவம்பு பேச்சின் முக்கிய விவாதமாக இருந்தது. திருமணபந்தலில் அவர்களிருவரும் மாலையும் கழுத்துமாக, பட்டாடை மின்ன, சந்தோஷம் முகத்தில் பொலிய அமர்ந்திருந்த கோலத்தைச் சொல்லி சொல்லியே விருந்தின் இனிமையை இரட்டிப்பாக்கிக் கொண்டது ஊர்.

செல்லா புக்ககம் போனாள். பிறந்த வீட்டுச் சீர்களும், பெற்றோரையும் தம்பி தங்கைகளையும் பிரிகிறோமே என்ற துக்கமும், புது இடம் புது மனிதர்கள் பற்றிய எதிர்பார்ப்புமாய் கணவன் அடி பற்றி புக்ககம் புகுந்தாள்செல்லா. ஆனந்த மயமான வாழ்க்கை ஆரம்பமானது. மனசுக்கிசைந்த கணவன், அன்பாய் பரிவாய் கவனிக்கின்ற மாமன் மாமி, இவளையே சுற்றி சுற்றி வருகின்ற அன்பு மைத்துனி என்று மிகவும் அன்பான வாழ்க்கையது.

காலம் புரண்டோட அந்த ஆசை ஜோடியின் வாழ்க்கைப் பாதையில் ஒரு தடைக்கல். ஆமாம். தான் தாயாகாத

குறை மாமன் மாமியை விட ஆசைக்கணவனை விட செல்லாவைத்தான் அதிகம் பாதித்தது. கொஞ்சி குலாவி மகிழ ஒரு மழலையில்லாமல் மனம் வாடினாள் செல்லா. முட்டி மோதி பால் குடிக்கின்ற கன்றையும் ஆதுரத்தோடு அதனை நக்கிக் கொடுக்கின்ற பசுவையும் பார்த்து பார்த்து வேதனையுற்றாள். தன்னில் இத்தனை அன்பும் பாசமும் வைத்திருக்கின்ற ஓர் அருமையான குடும்பத்தின் பரம்பரையை வளர்க்கவியலாத தன் கையாகாலாதத்தனத்தை எண்ணி எண்ணி கவலையுற்றாள். முடிவில் எந்த மனைவியும் செய்ய நினைக்காத காரியத்தை மனமுவந்து செய்ய முற்பட்டாள். தன் கணவனுக்காக, அவன் குடும்பத்துக்காக அவர்களது மகிழ்ச்சிக்காக மனைவி என்கின்ற ஸ்தானத்தையே இன்னொருத்தியுடன் பங்கிட்டுக் கொள்ள தயாரானாள் செல்லா. கணவனின் பிடிவாதத்தையும் மீறி தன் கருத்திலிருந்து சற்றும் பிறழாமல் பெண் தேடி அலையாமல் தன் தங்கை மீனாட்சியையே தன் கணவனுக்குக் கட்டி வைத்தாள். செல்லாவே முன்னின்று நடத்திய அந்த திருமணத்தின்போது மீண்டொரு தடவை இவளைப் பார்த்து வியந்து கொண்டது ஊர்.

மீண்டும் காலம் வசந்தத்தை விதைத்தது. தன்னை மூன்றாம் மனுஷியாக்கிக் கொண்டு மீனாட்சியைத் தலைவியாக்கினாள் செல்லா. மீனாட்சியும் அக்கா சொல் கேட்டு அவள் சொன்னபடி ஆடினாள். இங்கே குற்றவுணர்வில் சிதைய முற்பட்டது முத்துவேலு மட்டுமே. தனிமையில் மனம் புழுங்கினான். செல்லாவை நினைக்க நினைக்கக் கவலையாயிருந்தது அவனுக்கு. இப்படி கூட ஒரு பெண் இருப்பாளா என ஆச்சரியப்பட்டான். அதை செல்லாவிடமே கூறினான். அவள் சிரித்தபடியே கூறிய பதிலில் திணறிப் போனான் முத்துவேலு. “ஏம் மனசில நெறஞ்சு இருக்கிறது

கொழுந்த ஆச ஒண்ணுதாங்க. அது என்னால முடியாது என ஆயிட்டப்ப நா இப்படி செஞ்சதுல என்னங்க தப்பு? என்னய திருப்தி படுத்தணுமின்னா 'சட்டுப்புட்டுனு' ஒரு கொழுந்தய ஏங்கையில தாங்க. ஆமாங்க இந்த வீட்டு குலக் கொழுந்த இந்த கையில தாங்கி வளக்கணுங்கிறது தாங்க என் ஆச!"

இவளது இந்த தியாகத்தைஇறைவனே ஆசீர்வதித்தது போல மீனாட்சி கர்ப்பம் தரித்தாள். செல்லாவுக்கு தலைகால் புரியவில்லை. கண்கள் பனிக்க முத்துவேலுவைக் கையெடுத்துக் கும்பிட்டாள். மீனாட்சி மகாராணியானாள். அவளை அலுங்காமல் குலுங்காமல் பூவாய் தாங்கினாள் செல்லா. அந்த பத்து மாதமும் தானே கருத்தரித்த மாதிரி பிள்ளை வளர்ப்புக்காய் தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள் அவள். வீட்டில் பாட்டிமார் சொல்வதையெல்லாம் நினைவில் வைத்துக் கொண்டுதானும்பாட்டியானாள். குழந்தைக்கான சாமான்களை வைப்பதற்காகவே தனி வீடு தேவைப்பட்டது. இவளது எதிர்பார்ப்பை வீணாக்காமல் அழகான ஆண்குழந்தையைப் பெற்று மீனாட்சி கையில் தந்தபோது மெய்சிலிர்த்துப் போனது செல்லாவுக்கு. தான் ஜென்மசாபல்யம் அடைந்துவிட்டதாக பெருமிதம் கொண்டாள். கண்ணன் என்று பெயர்வைத்தாள். அவனது பிஞ்சு விரல்களின் மெத்தென்ற தன்மையையும் சிறிய செவ்விதழ்களைத் திறந்து கொட்டாவி விடுகின்ற அழகையும் காண்பதிலேயே தன்னைஇழந்தாள். கண்ணனும் பசி என்றால் மாத்திரமே அம்மாவைத் தேடினான். முற்றபடி அவனை சீராட்டி தாலாட்டி தாயாகவே மாறிப்போனாள் செல்லா.

கணவன் குடும்பம் இப்போ எல்லாமே செல்லாவுக்கு மூன்றாம் பட்சமே. முதலாம் பட்சமாகக் கண்ணனே திகழ்ந்தான். இரண்டாம் பட்சம் யாரென்கிறீர்களா? அதுவும் கண்ணனேதான். அவனை கண்ணை இமைக்காப்பது

போல வளர்த்தான் அவனும் வளர்ந்தான். உதவாக்கரையாக வளர்ந்தாள். செல்லாவின் அதீத செல்லம் தந்த விளைவு இது. யாரையும் அதட்டக்கூட விடாது தானும் எதற்கும் அவனைக் கண்டிக்காமலும் வளர்த்தன் பயனாக கண்ணன் யாருக்கும் அடங்காத குணம், 'நான்' என்ற அகங்காரம், தன்னால் எதையும் சாதிக்கமுடியும் என்ற மனோபாவம், தன்னைத் தட்டிக் கேட்க யாருமேயில்லை என்ற அகம்பாவம் இத்யாதி குணங்களோடு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தான். இதனால் படிப்பில் கவனம் செலுத்தாது, பள்ளிக்கூடத்தில் இவன் பண்ணிய அட்டகாசங்களைப் பொறுக்கமாட்டாமல் அதிபர் அவனைப் பாடசாலையிலிருந்து நீக்கினார். கல்லுளிமங்கனாய் நின்ற மகனைத் திட்டித் தீர்த்தாள் மீனாட்சி. பாய்ந்து வந்த செல்லா "பெரீசா சொல்ல வந்துட்டியே. படிக்கலன்னா திட்டுவியா புள்ளய? இந்த பள்ளிக்கூடத்துல ஒழுங்கா பாடம் நடந்தாத்தானே படிக்கிறதுக்கு. ஏண்டா கண்ணா நீ பக்கத்தூருக்கு போயி படிக்கிறியா?" என்று ஆதுரத்துடன் கேட்டாள். பையன் முரண்டுப் பிடித்தான். "என்னால படிக்கேலாது போ! நா அப்பாவோட கடைக்கு போறேன்" என்று தானே முடிவு செய்து அப்பாவோடு கடைக்குப் போக ஆரம்பித்தான்.

எல்லாவற்றுக்கும் சிகரமாக விளங்கிய 'அந்த' அடாவடித்தனத்தில் தான் செல்லா கொஞ்சமாக எதையோ உணர்ந்தாள். ஊர் முழுக்க 'அம்மை' விளையாடி வாரிக் கொண்டுபோன உயிர்களில் மீனாட்சியும் ஒருத்தி. செல்லா கத்தித் தீர்த்தாள். முத்துவேலு சோகத்தில் உறைந்து போனான். கண்ணன்? அவனைக் காணவேயில்லை. தாய் இறந்ததும் சட்டையைப் போட்டுக் கொண்டு வெளியே போனவன்தான். அந்த முகத்தில் எதையுமே கண்டு பிடிக்கமுடியாமல் தோற்றுப் போனாள் செல்லா. 'துக்கத்தை ஆற்ற கூட்டாளிகளைத் தேடி

போறான்' என எண்ணியதும் பிழைத்துப்போனது. பிணத்தை வைத்துக்கொண்டு கொள்ளிபோடவென்று கண்ணனை தேடி ஊரெல்லாம் அலைந்தது தான் மிச்சம். ம்ஹூம்..அவனைக் காணவேயில்லை. பொழுது சாயும் வரைக் காத்திருந்த முத்துவேலுவிடம் கொள்ளி வாங்கி கொண்டு அக்கினியுடன் சங்கமித்தாள் மீனாட்சி. அவளை இழந்த துக்கமும் கண்ணன் இப்படி பண்ணிவிட்டானே என்ற ஏக்கமும் முத்துவேலுவையும் செல்லாவையும் ரொம்பவும் பாதித்தது. நடுநிசிப் பொழுதில் வந்த கண்ணனை உலுப்பி "எங்கடா போன?" என்று அழுகையும் கோபமுமாகக் கேட்டாள் செல்லா. காதில் எதையுமே வாங்கி கொள்ளாதவனாய் 'விட்டேத்தியாய்' வெறித்துப் பார்த்து விட்டு விலகி போனான் அவன். அவன் தம்மை விட்டு தூரமாக மிக தூரமாக விலகிப்போனதை அப்போதுதான் செல்லா உணர்ந்தாள். தான் தப்பு பண்ணிவிட்ட பிரமை மின்னலாய் மின்னி இடியாய் மனசுக்குள் இறங்கி மூளை எங்கும் அதிர்ச்சி வைத்தியம் பார்த்தது. கணவனிடம் ஓடினாள். உள்ளம் கரைய அழுதாள். தன் அளவுக்கு மிஞ்சிய அன்பே குடும்பத்தின் வாரிசைஉருக்குலைத்து விட்டது என உணர்ந்து அதனை தீர்ப்பதும் தன் பொறுப்பே என தீர்மானித்து முத்துவேலுவிடம் கூறினாள்."என்னங்க அவன் தோளுக்கு மிஞ்சிட்டான் இனி என்னாலயோ ஒங்களாலயோ இவன திருத்தமுடியாது. நா செஞ்ச தப்புக்கு பிராயச்சித்தமா அவனுக்கு நல்ல குணமுள்ள குடும்பத்தோட ஒத்து போற பொண்ணா பாத்து கல்யாணம் பண்ணி வச்சிடணும். அப்பதான் ஏம்மனசு ஆறும்." "ஆமா செல்லா அவனுக்கு ஒரு கால்கட்டு போட்டா எல்லா சரியாயிடும். நீ இத நெனச்சு கவலப்படாத. அவன் இப்பிடியாகனுமிண்ணு நீ நெனச்சி வளக்கலியே எல்லாம் விதிதான்" என தேற்றினான் முத்துவேலு.

ஓரிரு வருடங்களாக சல்லடைப் போட்டு சலித்து குடும்ப பாங்கான அமைதியான அன்பேயுருவான கங்காவை மருமகளாக்கிக் கொண்டாள் செல்லா. கண்ணனும் புது மனைவி மோகத்தில் தன் பழைய குணங்களை மூட்டைக்கட்டி வைத்து விட்டு இயல்பாக இருக்க முயன்றான். கங்காவும் மாமன் மாமியை அனுசரித்து போகின்றவளாக வாய்த்தது அந்த குடும்பத்தின் சாபத்தை நீக்கியது போலாயிற்று. முத்துவேலுவும் செல்லாவும் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

இருந்தாற்போலிருந்து முத்துவேலு கடையிலேயே மாரடைப்பால் இறந்துபோனார். பிரியும் தருணத்தில் தான் அருகில் இருக்கமுடியாமற்போன ஆதங்கமும், தன்னை நிர்க்கதியாய் தவிக்க விட்டு விட்டு போய் விட்டாரே என்ற சோகமும் தாக்க இடிந்து போனாள் செல்லா.

மீண்டும் கடைக்கு தானே உரிமையாளனான இறுமாப்பும், குடும்ப பொறுப்புக்களை சுமக்கும் அகங்காரமும் ஒருங்கே சேர, கண்ணனை விட்டு விலகியிருந்த ‘ வேதாளம்’ சொல்லாமல் கொள்ளாமல் மீண்டும் முருங்கை மரத்தின் உச்சியில் அமர்ந்து கொண்டு ஆட்டிப் படைத்தது.

இப்போதெல்லாம் இந்த செல்லா அக்கம் பக்கத்திலுள்ள சின்ன குழந்தைகளுக்கெல்லாம் செல்லாச்சி ஆனாள். வீட்டின் வெளித்திண்ணையை தனதாக்கிக் கொண்டு, பேரனை இடுப்பில் இடுக்கிக் கொண்டு, சுற்றத்திலுள்ள குழந்தைகளையும் கூப்பிட்டு வைத்துக் கொண்டு கதைகள் சொல்லுவதே செல்லாச்சியின் வேலையாயிற்று. மகனின் பழைய குணங்களைக் கண்டாலும் தலைக்கு மேல் வெள்ளம் போன ரீதியில் மௌனித்து விடுவாள். தன்னை தாயைப்போல அன்போடு கவனித்து உபசரிக்கும் கங்காவை நினைக்கும் போதுதான் கவலையாக இருக்கும்.

அந்த சம்பவத்தின் போதுதான் செல்லாச்சிக்கு உலகமே வெறுத்துப்போனது. ஓர் அற்ப விடயத்தை பெரிதாக்கி, தான் உயிராய் வளர்த்த கண்ணன் தன்னை தூசாய் நினைத்து ஊதி விட்டதில் மனசு உடைந்து போனது. சாப்பிட்டு கொண்டிருந்த கணவனுக்கு உணவு பரிமாறியபடியே திண்ணையில் இருந்த செல்லாச்சிக்கும் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தாள் கங்கா. உள்ளே கண்ணன் அழைக்கும் குரல் கேட்டது. “இதோ வாறேன்” என்றபடி நகர்ந்தவளின் சேலையை பிடித்து இழுத்தான் மகன் பாபு. அவனைத் தூக்கி மாமியார் அருகில் இருத்தி விட்டு உள்ளே போகத் திரும்பினாள் கங்கா. பெரிய சத்தத்துடன் எகிறி வந்த தட்டு வெளி வாசலில் சுழன்று சுழன்று வட்டமடித்து ஒலி மங்க ஓய்வடைந்தது. அடுக்களையிலிருந்து வாசற்படி வரை சோற்றுத் துணிக்கைகள். வீட்டுக்குள் பேரமைதி. தட்டுத்தடுமாறி உள்ளே வந்தாள் செல்லாச்சி. அவளுக்கு முதலில் தென்பட்டது,காலைப் பிடித்தபடி முகம் இறுக அமர்ந்திருந்த கங்காதான். கையைக் கழுவி விட்டு முகத்தில் கோபம் கொப்பளிக்க வந்து கொண்டிருந்தான் கண்ணன். ஆற்றாமையுடன் “ஏண்டா இப்படியெல்லாம் செய்யிற?” என்று ஒரு கேள்விதான். ஆவனை வளர்த்த குற்றத்துக்காக ஒரேயொரு கேள்விதான் கேட்டாள். கண்ணன் ருத்திரமூர்த்தியானான். “ஆமா! எல்லாமே நா பண்ணுறதுதான். நீ ஒண்ணுமே பண்ணல. அம்மாவும் போயிட்டா. அப்பாவும் போயி சேந்துட்டாரு. நீதா இன்னமும் ஏ உசிர வாங்கிக்கிட்டு கெடக்குற. ஓழச்சி கொட்டுற என்னய கவனிச்சு சாப்பாடு போட வழியில்ல. இந்த கெழவிய கவனிக்கிறதுதான் இவளுக்கு வேலயாப் போச்சு. தோ, பாரு பெரியம்மா! நா இவள கட்டிக்கிட்டது ஒனக்கு சேவுகம் செய்யிறதுக்கில்ல. அத புரிஞ்சுக்க மொதல்ல! அத விட்டுப்புட்டு ஏண்டா நோண்டான்னு புத்தி சொல்ல வந்தியின்னா பாரு”

அவன் பேசியதைக் கிரஹித்துக் கொள்ளவும் முடியாமல், விழுந்த பேச்சின் சுமையை தாங்கிக் கொள்ளவும் இயலாமல் அழுது கொண்டிருந்த கங்காவை தேற்றவும் வழி தெரியாமல் மௌனமாக வெளியே வந்தாள் செல்லாச்சி. உயிர் போகிற மாதிரி மனசுக்குள் பெரிய பெரிய இடிகளாக இடிந்து அவளது பாசத்தை சுக்குநூறாக்கிக் கொண்டிருந்தது. இரவு வந்தது. கண்விழித்திருந்த செல்லாச்சிக்கிழவி இரவோடிரவாய் ஊர் எல்லையிலிருந்த இந்த புகையிரத நிலையத்தில் தஞ்சம் புகுந்தாள். வீட்டை விட்டு வெளியேறியபோது சத்தியமாய் அவள் மனது வெறுமையாய் தான் இருந்தது.

இதுதான் நம்ம செல்லாச்சிக்கிழவியின் கதை. இடையிடையில் அவளை சந்திக்கின்ற கண்ணனின் பக்கத்து வீட்டிலுள்ள பர்வதம் மாத்திரம் கங்கா இவள் நினைவாகவே இருப்பதை கூறுவாள். தலையை ஆட்டி அந்த கதையை பாதியிலேயே நிறுத்தி விடுவாள்.

“கங்கா பாவம்தான் ஆனா அவன் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டியவ அவ. என்னால அவ வாழ்க்கை வீணாகவேணாம் அது மட்டுமில்ல பர்வதம். அவனோட சம்பந்தப்பட்டஎந்த உறவும் எனக்கு இனி உறவேயில்ல. எனக்காக ஏதாவது செய்யணுமின்னு நீ நெனைச்சா ஒண்ணுமட்டும் செய். நா செத்த பெறகு அவன் எனக்கு கொள்ளி போட அனுமதிக்கவேணாம். இந்த ஆச மட்டும் தான் எனக்கு இருக்கு. நா அனாதபொணமா நாறிகெடந்தா கூட பரவாயில்ல. ஆனா இவன் கையால கொள்ளி வாங்கி நா சொர்க்கத்துக்கு போகவேண்டிய அவசியமில்ல.” பாசமாய் வளர்த்தவனை ‘கண்ணன்’ என்று அழைக்கக்கூட முடியாதளவுக்கு செல்லாச்சியின் மனசு மரத்து விட்டது.

செல்லாச்சிக்கிழவிக்கு சமீப காலமாக ஒரு புது சிநேகம். முழைக்காக ஒதுங்கிய அந்த தாய்நாயின் மீது அவளுக்கு

சொல்லமுடியாத பரிவு. நிறைமாத கர்ப்பத்துடன் அறிமுகமான அந்த நாய்க்கு தனக்குக் கிடைப்பதில் சிறிய பங்கினை எடுத்து வைக்குமளவிற்கு அவளுக்கும் அந்த நாய்க்குமிடையில் ஒரு ஒட்டுறவு. ஒரு நாள் காலை கண்விழித்தபோது கண்திறவாத அந்த சின்ன உயிர் தாயின் கதகதப்பில் சுகமாய் சுருண்டு படுத்திருப்பதைக் கண்டாள். தாயின் கண்களில்தான் எத்தனை பெருமிதம். அந்த குட்டி நாய் நாளொருெ மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. அது வளர வளர செல்லாச்சிக்கிழவிக்கு குட்டி நாய் மீது சொல்லவொண்ணா வெறுப்பு வளர்ந்தது. அதற்கேற்றாற்போல் அந்த நாய்க் குட்டியின் செய்கைகளும் இருந்தன. காலையிலேயே ஊர்சுற்ற போய்விடுகின்ற அது சரியாக தன் தாயிற்கு கிழவி சாப்பாடு வைக்கும் நேரமாகப் பார்த்து ஓடிவந்து தாயை சாப்பிட விடாது சண்டைப்பிடித்து தான் உண்ணும். அவளுக்கு மகா எரிச்சல். எந்த நாளும் நாய்குட்டி கிளம்பியபின் இவளோடு ஒட்டிக் கொண்டிருக்கின்ற அந்த நாய்க்கு தனக்குக் கிடைக்கின்றதில் சின்ன பங்கையாவது போட்டு விட்டுத்தான் தான் உண்ணுவாள். நாய்க்குட்டி நேரத்திற்கு வந்து வாலை ஆட்டிக் கொண்டு நிற்கும். பின் தாயைப் பார்த்து முறைக்கும். கிழவிக்குத் திருப்தியாக இருக்கும். அதை அங்கே நிற்க விடாமல் துரத்துவாள்.

அன்று காலையிலேயே சந்தோஷமாக சிரித்தபடி வந்தாள் பர்வதம். “செல்லா உன் கவலையெல்லாம் இன்னியோட ஒழிஞ்சுது போ! அடி மேல அடி அடிச்சா அம்மியும் நகரும்பாங்களே. அது நெசந்தான்னு இன்னிக்குத் தான் புரிஞ்சுது. தினம் தினம் காதில ஓதியே அவன நல்லவனாக்கிட்ட ஒன்னோடமருமக கெட்டிக்காரிதா. நேத்து கண்ணன் பேசிக்கிட்ட இருந்தத ஏ ரெண்டு காதாலயும்

கேட்டேனே. இன்னிக்கு ஒம்மக ஒன்னய கூட்டிக்கிட்டு போறதுக்காக இங்க வரப்போறான். இதப்பாரு செல்லா முரண்டு பண்ணாம அவனோட வீட்டுக்கு வந்து சேரு. அவன வளக்க நீ பட்ட கஷ்டமெல்லா வீணா போகலம்மா" பர்வதம் சொல்லிக் கொண்டே போனாள். செல்லாச்சி நிதானமா சொன்னாள். "பர்வதம் இந்த வாழ்க்கை எனக்கு பழகிப்போச்சு. இந்த நாய், எனக்கு அடைக்கலம் தார இந்த ஆலமரம், இந்த ஸ்டெசனு, இங்க வந்த போற வண்டிக, குருவி, காகம், வெளவால் இதுக தா என்னோட ஒலகம்னு நா தீர்மானிச்சுட்டேன். இவ இங்க வந்து ஆகப்போறது ஒண்ணுமில்ல. மத்தது யாராலும் ஏ படைச்ச கடவுள் வந்தா கூட அவனோட பிறவி குணத்த மாத்த ஏலாது அவன வளத்திருக்கிறேனே எனக்கு இது கூடவா தெரியாது?. அது சரி பர்வதம் அந்த வேதாளம் திரும்பவும் முருங்க மரம் ஏறாதுன்னு ஒன்னால நிச்சயமா சொல்ல முடியுமா? போ பர்வதம் அவங்கிட்ட போய் சொல்லு. இந்த செல்லா ஒரு நாளும் வரவேமாட்டான்னு போய் சொல்லு" சொல்லி முடித்தவள் கைத்தடியை எடுத்துக் கொண்டு ஆலமரத்தடியை அடைந்து வாகாய் அமர்ந்து கொண்டாள்.

அந்த மத்தியானப் பொழுதில் தாய் நாய்க்குப் போட்டு விட்டு மிஞ்சியதை மனசேயில்லாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்த செல்லாச்சியை நோக்கி எங்கிருந்தோ ஓடி வந்த அந்த குட்டி நாய் அவளருகே வந்து வாலை ஆட்டியபடி உணவுக்காகக் குழையத் தொடங்கியது. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது கிழவிக்கு. பக்கத்திலிருந்த கல்லை பொறுக்கி நாயை நோக்கி வீசினாள். குறித் தப்பாமல் நாயின் காலை அந்தக் கல் பதம் பார்க்க, தீனமாய் அலறியபடி, நொண்டிக் கொண்டே சென்று, சற்றே தள்ளி அமர்ந்து கொண்டு இவளை ஏக்கமாய் பார்த்தது. உணவு போடமாட்டாளா என எதிர்பார்ப்புடன் வைத்த கண் வாங்காமல் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த நாயைப்

பார்க்க பாவமாக இருந்தது கிழவிக்கு.

தூரத்தே யாரோ வருவது தெரிய, கண்ணை இடுக்கிக் கொண்டு, நெற்றியில் கையை வைத்து பார்த்தவள், தனக்குள் ‘சட்டென்று’ ஏதோ அறுந்து போவதை உணர்ந்தாள். மனசுக்குள் பிரளயமாய் உணர்வுகள் பிரவகித்தன. அருகே வந்தமர்ந்த கண்ணன் “பெரியம்மா” என்றான். நிமிர்ந்து பார்த்த செல்லாச்சிக்கு அவன் பார்வையில் யாசகம், ஏக்கம், மன்னிப்பு, எதிர்பார்ப்பு எல்லாமே கலந்த கலவை தெரிந்தது. சற்றுமுன் அந்த நாய்க்குட்டியில் தெரிந்த அதே ஏக்கப்பார்வை. செல்லாச்சியின் மனதுக்குள் கொந்தளிப்பு உச்சஸ்தாயியானது. மடியிலிருந்த சோற்றுப் பார்சலைத் தூக்கி, எதிர்பார்ப்போடு காத்துக் கொண்டிருந்த குட்டி நாயின் முன்னால் போட்டாள். நன்றியோடு வாலை வேகமாய் ஆட்டியபடி, ஓடி வந்து உண்ட நாயைப் பார்த்தபடி இருந்த செல்லாச்சியின் மனக் கொந்தளிப்பு உணர்வுகள் எல்லாமே மெல்ல மெல்ல அடங்கியது. மெதுவாக நிமிர்ந்து கண்ணனைப் பார்த்தாள் அவள்.

(1991) தினகரன்

# நெத்திக்காசு

அந்த பிரிட்டிஷ் காலத்து லயக்கூரைகளில் கவிந்திருந்த பனியை விடிகாலைப் பொழுது வெள்ளைப் புகை மண்டலமாக்கிக் கொண்டிருந்தது லயங்களின் முன் காம்பராக்களில் கொழுந்துக் கூடைகள் கம்பீரமாகத் தொங்கிக் கொண்டிருந்தன. லயங்களுக்குள்ளே உறங்கிக் கொண்டிருக்கும் ஜீவன்களின் வாழ்க்கையோடு இந்தக் கொழுந்துக் கூடைகள் கொண்டிருக்கும் பந்தம் என்ன, இன்று நேற்று உருவானதா?

எங்கேயோ கூவிய சேவலின் கூக்குரலையும் மீறிப் பக்கத்துக் காம்பராக்களில் எழுந்த “தடாபுடா” சத்தம் ராசாத்தியை எழுப்பிற்று. முதல் நாள் மேல்பெரட்டு மலையில் ஏறி, மழையில் நனைந்தபடி கொழுந்தெடுத்த அசதியும், குசினியில் ஈரவிறகுடன் போராடியதால் ஏற்பட்ட கண்ணெரிவும் அவளை இன்னும் கொஞ்சநேரம் படுத்திருக்க கூறின. அந்த அசதியைப் பார்த்தால் ஆகுமா? தன்னோடு சேர்ந்து நான்கு ஜீவன்களின் வயிற்றைக் கழுவியாக வேண்டிய கட்டாயம் அவளை ‘விருட்’டென எழவைத்தது.

“ஏய் செல்லா, காமாச்சி எந்திரிங்க! ஸ்கோலுக்குப் போவாணாமா? அப்படியே சின்னப்பயலையும் உசுப்பி விடுங்க”

ராசாத்தியின் குரல் கேட்டதும் அடித்து பிடித்துக்கொண்டு எழும்பினர் “செல்லா” என அழைக்கப்பட்ட செல்வியும் “காமாச்சி” என்கிற காமாட்சியும். இருவரும் பக்கத்திலிருந்த தோட்டப்பள்ளிக்கூடத்தில் முறையே மூன்றாம், முதலாம்

ஆண்டுகளில் படிக்கின்றார்கள். எல்லோராலும் “சின்னப்பய” எனச் செல்லமாக அழைக்கப்படுகிற குமரேசு இப்போதுதான் நான்கு வயதை முடித்திருந்தான.

தாயோடு சேர்ந்து செல்லாவும் காமாச்சியும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டனர். குசினிக்குள் நுழைந்து அடுப்பைமூட்டி கேத்தலை ஏற்றிவிட்டுத் திரும்பிய ராசாத்தியின் பார்வையில் இன்னமும் படுக்கையிலிருந்து எழும்பாத குமரேசு தட்டுப்பட்டான்.

“எலெ சின்னப்பய! இப்ப நீ எழும்புறியா இல்லியா? தா பாரு அக்கா ரெண்டுபேரும் ஸ்கோலுக்குப் பொறப்பட்டாச்சு! அப்ப நீ படுத்துக் கெட! நாங்க கதவ பூட்டிக்கிட்டு போறோம்” என்றாள். பாய்ந்து எழும்பினான் குமரேசு. “அம்மா கதவ பூட்டிக்கிட்டு போனா நா எப்பிடி புள்ளகாம்புராவுக்குப் போறதாம்?” என்ற யோசனையோடு கரித்துண்டை வாயில் தேய்த்தபடி வெளியே ஓடினான்.

“சாயத்தண்ணி” ஊற்றி முடிந்ததும் ரொட்டித் தகரத்தை அடுப்பில் வைத்து ரொட்டியைத் தட்டிப் போட்டாள் ராசாத்தி. “செல்லா இந்த தேத்தண்ணிய தங்கச்சிக்கும் ஊத்திக் குடுத்திட்டு நீயும் குடி..! சின்னப்பய இன்னமுமா மூஞ்சி கழுவுறான்? அவனுக்குச் சட்டைய போட்டுவிடு! புள்ளக்காம்புராவுல அவன விட்டுபுட்டுல நா போவணும்?” ராசாத்தியின் குரலையடுத்து பள்ளிக்கூடத்துக்குத் தயாராகிவிட்ட செல்லா தம்பியைக் கவனிக்கச் சென்றாள்.

செல்லாவும் காமாட்சியும் ரொட்டியைச் சுற்றி எடுத்துக்கொண்டு கையில் புத்தகங்களைச் சுமந்தவாறு “அம்மா போயிட்டு வாறோம்” என்றபடி லயத்தை விட்டுக் கிளம்பும் போதுதான் குமரேசு தேநீர் குடிக்க உள்ளே

நுழைந்தான். “தோ பாரு வெரசுண்ணு ரொட்டியைத் தின்னுப்புட்டு பயணம் வையி” என குமரேசுவை அதட்டிய ராசாத்தி, தனக்குள்ளாகவே “இன்னக்கு எத்தனாம் நம்பரு மலையோ” என அலுத்துக் கொண்டாள்.

துண்டுச் சாக்கை இடுப்பில் வாகாய் கட்டி, கொழுந்துக் கூடையின் பாரம் தாங்காது, நைந்து போய் வெட்டுண்டு, சிலுப்பிக் கொண்டிருந்த மயிர்க் கற்றைகளை ஒதுக்கி, கொழுந்துக் கூடையை தொட்டு வணங்கி விட்டு எடுத்து தலையில் மாட்டியபடி வேலைக்குப் போக தயாராகிவிட்டாள் ராசாத்தி.

“சின்னப்பய! ஏன்னடா செய்யுற இவ்வுளோ நேரமா? என அவள் குரல் கொடுக்கவும், வெளியே ஓடி வந்தான் குமரேசு. வாயில் ரொட்டித்துண்டைத் திணித்தபடி புள்ளகாம்பரா சகாக்களிடம் காட்டி மகிழவென, தன் சொத்தாகக் கருதிய உடைந்த தட்டுமுட்டுச் சாமான்கள் அடங்கிய ‘சொப்பிங்பேக்கை’ கக்கத்தில் இடுக்கியபடி, நழுவிய காற்சட்டையை மேலே இழுத்துக்கொண்டு வந்து நின்ற மகனைப்பார்க்க ராசாத்திக்குப் பாவமாக இருந்தது.

“என்ட ராசா! ரொட்டிய தின்னுப்புட்டு ஒரு வாய் தண்ணி குடிச்சுப்புட்டு வா! நா நிக்கிறேன்” என்றாள் அவசரமாக விழுங்கியபடி உள்ளே ஓடியவன் தண்ணீரைக் குடித்து விட்டு வந்து “அம்மா, சரியம்மா” என்றான்.

ராசாத்தியின் வேகமான நடைக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின் தங்கிவிடுகிற குமரேசு, தாயின் அதட்டலைக் தொடர்ந்து ஓடிப்போய் தாயோடு இணைந்து நடப்பதும் அப்புறம் வீதியில் காணுகின்ற சகல காட்சிகளிலும் மனம் ஒன்றிவிட மீண்டும் பின்தங்குவதுமாகச் சென்றுக் கொண்டிருந்தான். பாதையில்

போகின்ற வாகனங்கள், நாய், பூனை, காகம், குருவி, எறும்பு என்ற எல்லாமே போய் மறைகிறவரை அவனது பார்வையும் கூடவே போகும். பாதையில் சாரிசாரியாகப் போகின்ற சீருடை அணிந்த பாடசாலைப் பிள்ளைகளைக் கண்டதும் "அம்மா" என்றழைத்தபடி ஓடிச்சென்று அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டான் குமரேசு. அடுத்து அவன் பேசுவதற்கு இடம் கொடாமல் "டேய் சும்மா தொணதொணக்காம வா!" என அதட்டினாள். அவனா மசிகிறவன்? "அம்மா நா.... நா.... எப்பம்மா ஸ்கோலுக்குப் போறது? சொல்லுமா எப்பம்மா போறது?" என விடாப்பிடியாய் நச்சரித்தான் குமரேசு.

அவனது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத தன் இயலாமையும், வேலைக்குப்போகும் நேரம் தாண்டிவிட்ட எரிச்சலும் சேர்ந்துக்கொள்ள நின்று குமரேசுவை திரும்பி முறைத்தவள் அவனது முதுகில் ஒன்று வைத்து கையை பிடித்து இழுத்துச் சென்றாள். பதில் கிடைக்காத சோகம், தாய் தன்னை அடித்துவிட்ட கவலை இரண்டும் சேர குமரேசு அழுதபடியே தாயின் இழுவைக்கு ஏற்ப நடந்தான். இல்லை இல்லை ஓடினான்.

அழுதபடியே இருந்த குமரேசுவை புள்ளகாம்பராவில் விட்டுவிட்டுச் செல்ல ராசாத்திக்கு கஷ்டமாய்த்தானிருந்தது.

"அழாதடா ராசா, வேலகாட்டுக்கு போயிட்டு வாரப்ப ஒனக்கு மிட்டாயி வாங்கியாரேன்" என்றாள். அழுகை சற்றே மட்டுப்பட சந்தேகத்தோடு தாயைப் பார்த்தான் குமரேசு. "நெசமாத்தாண்டா" என அவள்உறுதி மொழி வழங்கிவிட குமரேசு உற்சாகமாய் தாயை வழியனுப்பி வைத்தான்.

ராசாத்தி மேல் டிவிசனிலிருந்து இங்கே வந்து முருகையாவை திருமணம் முடித்தவள், அவள் இங்கே வந்த

போது தேயிலைச் செடிகள் எல்லாம் ‘தள தள’என்றிருந்தன. செல்லாவும் காமாட்சியும் பிறந்த போது அவர்களின் வாழ்வும் கூட ‘தள தள’ என்றே செந்தளிப்பாய்தானிருந்தது. முருகையா இந்த தேயிலைகளோடு ஒன்றிப் போனவன். காலையில் எழும்பியதும் சிலருக்கு வெற்றிலையோ, புகையிலையோ தேவைப்படுவது போல முருகையாவுக்கு கண்விழித்ததும் தேயிலைச் செடிகளை வருடி அதன் வாசனையை நுகர்ந்தாக வேண்டும். இந்தப்புதுமையான பழக்கத்தை ராசாத்திக்கூட கேலி செய்வாள், “சக்காளத்திய பாத்துட்டு வந்தாச்சா?..” என்று ராசாத்தி குமரேசுவை உண்டாகியிருந்த போது இந்நிலைமை மாறத் தொடங்கிற்று அரசாங்கத்திற்குச் சொந்தமாயிருந்த அநேக தோட்டங்கள் தனியார் வசமாகிய போது நான்கைந்து மாதங்களிலேயே தோட்டத்து சனங்கள் வித்தியாசங்களை உணர ஆரம்பித்தனர். பாக்டரிக்கு வந்து சேருகின்ற கொழுந்துகளின் செழிப்பும் குறைய தொடங்கியது. நிறையும் குறையத் தொடங்கியது. முருகையாவுக்கு தன் பிள்ளைகளையே வெட்டிக் கொல்வது போன்ற வேதனை கொழுந்துத் தூள் குறைய குறைய வேலை நாட்களும் குறையத் தொடங்கின. கணிசமாக குறைந்து போன வேலை நாட்கள் மேலும்

குறைக்கப்பட்டபோது இயல்பாகவே முன்கோபக்காரனான முருகையா கையில் பணப்புழக்கம் இல்லாமல்போன நிலையில் ஒருநாள் கொதித்தெழுந்தான்.

“என்னய்யா நெனச்சுக்கிட்டிருக்கீங்க நம்மள?. நீங்க பாட்டுக்கு தோட்டத்துல எவ்வளவு லாபம் வருதுங்கிறத மட்டும் பாக்றீங்க! தேயில செடிகளுக்கு ஒரம் போடனும், அத ஒழுங்கா கவனிக்கிற எண்ணமே கெடயாது. அப்புறம் எப்புடி கொழுந்து

வரும்? கடேசில நம்ம வயித்துல அடிக்கிறீங்களே! தூளு எவ்வளவு கெடைக்குமுங்கிறத மட்டும் கவனிச்சா போதாது. மொதல்ல செடிகளுக்கு உசிரு இருக்கான்னு பாருங்க" என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

தன் குழந்தைகளின் பட்டினியை விட கொழுந்துகளின் கருகல் முருகையாவை மிகவும் பாதித்தது. முதன் முதல் சண்டை போட்டுவிட்டு வந்து அன்றிரவு ராசாத்தியிடம் சொன்னான் "ராசாத்தி நம்ம காலத்துலேயே இத்தன பாடா கெடக்குதே, நம்ம புள்ளைக காலம் எப்படி இருக்கப் போவுது? இதுக கொழுந்தெடுத்து பொழச்சாப்புலத்தான்! என்ன பாடுப்பட்டும் இதுகள படிக்க வச்சிரனும் ராசாத்தி! படிச்சாதான் இனி இந்த ஒலகத்துல சீவிக்க முடியும்". தொடர்ந்தும் முருகையாவுக்கும் முதலாளிக்கும் இடையில் அடிக்கடி வாக்குவாதம் நடந்தது. ராசாத்தி தடுத்தாலும்கூட இது நடந்துக் கொண்டிருந்தது.

குமரேசுவை, பிரசவிக்கவென்று ராசாத்தியை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு வந்த முருகையா அடுத்த நாட்காலை பாதையோரத்தில் பிணமாய் கிடந்தான்.

"வம்சம் வளர ஆம்புள புள்ள வேனும் ராசாத்தி" என ஆசையோடு கூறியவன் அக்குழந்தையின் முகம் பாராமலே கொலையுண்டு போனான்.

சின்னஞ்சிறிசுகளான செல்லாவும் காமாட்சியும் என்ன எதுவென்று புரியாத பதற்றத்தில் அழுதபடி இருக்க, பச்சிளம் குழந்தையின் வீறீடலையும் மீறி கதறினாள் ராசாத்தி. கொழுந்துகளையே தன் வாழ்க்கையாக கொண்டு அதற்காகவே உயிரை விட்டவனின் உடலின்மேல் விழுந்து அவர்கள் கதறுகின்ற கோரத்தையும் அந்த தேயிலைக் கொழுந்துகள் பார்த்தபடித்தான் இருந்தன.

பொலிஸ் இது அதுவென்று அலைந்ததில் ராசாத்தியின் கையிலிருந்து பணம் காணாமல் போயிருந்தது. "போன மனுஷன் போயி சேந்துட்டான். இனி பணத்த செலவழிச்சி அவ உசிரு திரும்பி வரவா போகுது? புள்ளங்கள காப்பாத்துற வழிய பாப்பியா.... அதவிட்டுபுட்டு...." ஊர்ப்பேச்சின் நியாயம் புலப்பட ராசாத்தி தன்னைச் சுதாகரித்துக் கொண்டு நிமிரந்த போது தன் மூன்று குழந்தைகள் மட்டுமே தன் சொந்தமாக மிஞ்சியிருப்பதை உணர்ந்தாள். ராசாத்தி வேலைக்காட்டுக்கு போய் உழைப்பதே வயித்த கழுவ சரியாயிருந்நது. கணவனின் விருப்பப்படி செல்லாவையும் காமாட்சியையும் பள்ளியில் சேர்ப்பித்துவிட்டாள். நல்லவேளை புத்தகம், சீருடை என அரசாங்கம் உதவியதால் ராசாத்திக்கு அந்தச் செலவுகள் மிச்சம்.

ஆனாலும் கொப்பி, பென்சில் என்று பிள்ளைகள் கேட்கும்போது வாங்கி கொடுத்தாக வேண்டுமே? இந்த செலவே மூச்சை முட்டவைக்க மூத்தவள் செல்லாவை பாடசாலையிலிருந்து நிறுத்திவிடும் யோசனையோடு ஒருதடவை பள்ளிக்கு போனவள் செல்லாவின் வகுப்பாசிரியர் கூறிய வார்த்தைகளால் செய்வதறியாது தடுமாறினாள். "வகுப்பில் செல்வி ரொம்ப கொட்டிக்காரி அநியாயமா அவளோட படிப்ப வீணாக்கிடாதீங்க மத்த புள்ளங்கள மாதிரியில்லாம ஓங்க கஷ்டத்த நல்லா தெரிஞ்சி வச்சிருக்குறா. கொப்பி, பென்சில் எல்லாம் வீணாக்காம பாவிப்பா தயவு செஞ்சி அவள வெலக்கிடாதீங்க" ராசாத்தி ஆசிரியர் சொன்னதற்கு தலையாட்டினாள்.

புதிதாக முளைத்திருந்த இந்தப் பிரச்சினைத்தான் அவளை பாடாய் படுத்தியது. குமரேசு பள்ளிக்குப் போக வேண்டுமென்று அடம்பிடித்துக் கொண்டிருந்தான். அடுத்த

வருடத்தில் அவனையும் பள்ளியில் சேர்த்தாக வேண்டும். ஆனால் "எப்படியும் மொத மொத ஸ்கோலுக்குப் போறப்ப போட்டுகிட்டுப் போறதுக்கு சட்ட களுசான் தச்சாகனுமே! கொப்பி, பென்சில் எல்லாம் வாங்கனுமே. அப்புறம் ஸ்கோல்ல சேர்க்குறப்போ கலருபெட்டி கலரு பேப்பரு எல்லாம் கேப்பாங்களே நா எங்க போவே காசுக்கு?" வயிற்றைப்பற்றி எரிகிற இந்த தீயிற்கு புள்ளகாம்பராவுக்கு போகும் போது 'சின்னப்பய' நெய் வார்ப்பான்.

ஒருவாரமாய் திமிலோகப்பட்டது. ஊரின் கண்ணாக விளங்கிய மாரியம்மன் கோயில் திருவிழா. அந்தத் தோட்டப் பகுதிக்கே உரித்தான ஒரே கோயில் என்ற விதத்தில் அந்தத் தேர்திருவிழா ஊர் மக்களால் மிகமிக விஷேடமாகக் கொண்டாடப்பட்டது.

சின்ன வாண்டுகளுக்கோ இனி இல்லை என்ற சந்தோஷம் விளையாட்டுச் சாமான்கள், தின்பண்டங்களடங்கிய கடைகள் களைகட்டின.

திருவிழா என்றதுமே பெற்றோர், உறவினர்கள் என்று 'சந்தோஷம்' கேட்டு சில்லறை சேர்ப்பார்கள். ஆனால் பாவம் குமரேசு. ஏன் செல்லாவும் காமாட்சியும் கூடத்தான் மற்றவர்களிடம் சில்லறை சேர்ப்பார்கள். மற்றவர்களிடம் சில்லறை குலுங்கும் போது இவர்களிடம் ஒரு செல்லாக்காசுக்கூட இருக்காது.

"சாமி கும்பிட" பிள்ளைகளோடு கோயிலுக்குப் புறப்பட்ட ராசாத்திக்கு மனசே சரியில்லை. கடவுளிடம் மனமுருக வேண்டினாள். "தாயே எங்கள சோதிச்சது போதும்மா. இனியாவது ஏங்குழந்தைங்க ஆசப்பட்டு கேக்குறத வாங்கி குடுக்கிற சக்திய மட்டுமாவது எனக்கு குடு....!"

கோயிலைச் சுற்றிக் கொண்டு வருகையில் கடைகள் நிறைந்த அந்தப்பகுதியைக் கடக்க ரொம்ப கஷ்டப்பட்டாள் ராசாத்தி. செல்லாவும் காமாட்சியும் விபரம் தெரிந்தவர்கள். கடையில் இருக்கின்ற எல்லாப் பொருட்களையும் ஆசையாகப் பார்ப்பதோடு மட்டும் நிறுத்திக் கொண்டார்கள். ஆனால் குமரேசு நேற்றுப்பிறந்த கன்றுக்குட்டியாய்த் துள்ளித்திரிந்தான். கடைகளில் உள்ள ஒவ்வொன்றையும் பார்ப்பதும் ஓடி வந்து அம்மாவிடம் ஒப்புவிப்பதுமாக இருந்தான். பார்த்த அத்தனைப் பொருட்களும் வேண்டியதாய் இருந்தன. “அம்மா..அம்மா. அந்த பெலூனை வாங்கி தாங்கம்மா”.... என நச்சரிப்பான். பதிலே பேசாமல் நடப்பாள் ராசாத்தி. “அம்மா பெலூனில்லாட்டி பரவால்ல அந்த கார் பொம்ம நல்லாருக்கும்மா வாங்கித்தாறீங்களா?” எனக் கெஞ்சுவான் ராசாத்திக்கு கவலையில் உயிர் போனது. ஆரம்பத்திலிருந்தே ‘அம்மா எதுவும் வாங்கித்தர மாட்டாள்’ என உறுறதியாய் தெரிந்துக் கொண்டு அமைதியாய் வருகின்ற செல்லா, காமாட்சி இருவரையும் விட, நச்சரித்துக்கொண்டே வந்த குமரேசு தன் நப்பாசை அனைத்தும் உடைந்தவனாய் அமைதியாய் வரத் தலைப்பட்டப்போது ராசாத்திக்கு “செத்து விடலாமா?” எனத் தோன்றியது. வீட்டுக்கு வந்தப்பின்பு குமரேசு சரியாகவில்லை. அக்கம் பக்கங்களில் கேட்ட ஊதி சத்தமும் விளையாட்டுச் சாமான்களோடு சிறுவர்களின் கூச்சலும் அவனை ஏக்கப்பட வைத்தன. படுத்து உறங்கிவிட்ட மகனின் கன்னங்களில் காய்ந்து போயிருந்த கண்ணீரின் தடம் ராசாத்தியின் நெஞ்சினைச் சுட்டது.

அடுத்தநாள் காலை எழும்பிய ராசாத்தி அந்தநாள் வயிற்றுப் பாட்டுக்கு என இறுக்கி பிடித்து வைத்திருந்த சில்லறைகளைப் பொறுக்கிகொண்டு கோயிற் பக்கமாக விரைந்தாள். வரும்போது அவள் கைகளில் ஒரு பை

இருந்தது. "ஏய் சின்னப்பய எந்திரி! அம்மா என்னா வாங்கிட்டு வந்திருக்கேனு பாரு" என்றாள். எழும்பிய குமரேசுவின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. மலர்ந்த அவன் கோலம் கண்டு ராசாத்தியின் உள்ளம் நெகிழ்ந்தது. அவனை இழுத்து அணைத்துக் கொண்டவள் சொன்னாள் "ராசா! பெலூனு, பொம்ம எல்லாமே கொஞ்ச நா கழிச்சா ஒடஞ்சு போயிடும். அதனால் அம்மா ஒனக்கு இந்த காசு முட்டிய வாங்கியாந்தேன். இனிமே நீ ஒனக்கு கெடைக்கிற காசையெல்லாம் இதுல போட்டு சேக்கோனும். அப்பத்தா நீ ஸ்கோலுக்குப் போறப்ப பொஸ்தவம், கொப்பி, கலரு எல்லா வாங்கலாம்" ஆசையோடு வந்து நின்ற செல்லாவுக்கும் காமாட்சிக்கும் கையோடு வாங்கி வந்திருந்த கலர் ரிபன்களையும் கொடுத்தாள் குடும்பத்தின் அந்த மூன்று ஜீவன்களும் 'யானைப்பசிக்கு சோளப் பொரி" போல கிடைத்த இந்தப் பொருட்களால் தாம் பெரிய சொத்துக்கு சொந்தமாகி விட்ட பூரிப்பில் ஆழ்ந்துபோயினர்.

அதன் பிறகு ஒரு வாரத்திற்கு குமரேசுவை அந்த 'காசுமுட்டி'யோடுத்தான் பார்க்க முடிந்தது. பிளாஸ்டிக்காலான, வெள்ளையும் நீலமும் கோடுகள் போட்ட மேற்புறம் அழகான வளைவுடன் காணப்பட்ட அந்த உண்டியலை குழந்தையைச் சுமக்கிறாற்போல் பவித்திரமாய்த் தூக்கிக்கொண்டு திரிந்தான். தோட்டத்து வேலையைப் பார்த்தால் இனி வாழ முடியாது என ராசாத்தி புரிந்துகொண்டதால் பக்கத்து ஊருக்கு கூலி வேலைக்குப் போகத் தொடங்கினாள். தோட்டத்தில் வேலை செய்த நாட்கள் போக மற்றைய நாட்களில் ஏதாவது கூலிவேலை செய்து காசு புரட்டுவாள். உண்டியலை இடுக்கிக்கொண்டு திரியும் குமரேசுவின் தொல்லை பொறுக்கமாட்டாது வேலை முடிந்து வந்ததும் அவனுக்கென சில்லறைக் கொடுப்பதும் வழக்கமாயிற்று. எந்நாளும் இரவு படுக்கப் போகுமுன்

உண்டியலைக் குலுக்கி அந்த இனிய ஓசையில் லயித்துப் போவான், "சின்னப்பய". ஏதாவது தின்பண்டங்களை ராசாத்தி இருந்திருந்து வாங்கி வருகின்ற போது குமரேசு பேசுவான் "ஏம்மா இத வாங்காம காசா தந்திருந்தா நா காசு முட்டியில போடுவேன்ல. அப்பதா நா ஸ்கோலுக்கு போவ முடியும்" பெரிய மனுஷத்தோரணையில் அவன் பேசுகின்ற போது ராசாத்திக்கு முருகையாவின் ஞாபகம் எழும்.

ஓரளவு கஷ்டத்தைக் குறைக்க முடிந்த இந்த ஊதியத்தால் "பொம்பளபுள்ளைங்களுக்குனு எதையும் சேர்த்து வைக்க முடியுதில்லையே" என்ற ஆதங்கம் ராசாத்தியிடம் நிறையவே இருந்தது. இதற்கிடையில் வேலைக்கு போன இடத்தில் காலில் ஆணி ஒன்று குத்தியதைக் கவனத்திற்கொள்ளாமல் விட்டதில் மூன்று நாட்கள் காய்ச்சல். வேலைக்குப் போகாமல் படுத்துவிட்டாள்.

குமரேசுவுக்குக் காசு சேர்ப்பதில் ஆர்வம் அதிகரித்திருந்த வேளையில் தாய் வேலைக்குப் போகாதது அவனுக்கு வருத்தத்தை தந்தது. "ஏம்மா வேலைக்குப் போவல," என்றான் "காய்ச்சலா கெடக்குதெடா, எப்புடி நா வேலைக்கு போவேன்" என்றாள் ராசாத்தி. "அப்ப எனக்கு காசு முட்டிக்கு போட காசு தரமாட்டியா?" என அதிகாரமாய் கேட்க செல்லாவுக்கு கோபம் வந்தது.

"அடேய் அம்மாவுக்கு காய்ச்சலா கெடக்குதேனு்னு கூட பாக்காம காசு கேக்குறியா?' என அதட்டினாள் அவளை முறைத்துப் பார்த்தவன் வெளியே ஓடிவிட்டான். தொடர்ந்து தாய் வேலைக்கு போகமுடியாமல் படுத்துக்கிடக்கவே செல்லா "அம்மா வாங்கம்மா ஆஸ்பத்திரிக்கு போயி மருந்து வாங்கியாறலாம்" என்றால் "அதெல்லாம் வேணாம். செல்லா ரெண்டு நாளு

போச்சிண்ணா எல்லா சரியாயிடும்" என மறுத்துவிட்டாள் ராசாத்தி.

எழும்பவும் முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த தாயிடம் வந்தான் குமரேசு "அம்மா எனக்கு நீ காசு தந்து எத்தன நாளாச்சு? ஒரு காசாவது தாம்மா! காசு முட்டியில காசு போட்டு ரொம்ப நாளாச்சில்ல" கெஞ்சினான். "சின்னப்பய! அம்மா என்னடா செய்வேன். ஏங்கிட்ட இருந்தா ஒனக்கு தராமலா இருப்பேன்? செத்தா நெத்திக்காசு வைக்கக்கூட ஏங்கிட்ட ஒத்த காசில்லடா" என வருத்தத்தோடு சொன்ன ராசாத்திக்கு ஏனோ கண்கலங்கியது.இதைப் பார்த்துக் கொண்டிருந்த செல்லா தம்பியை மெல்ல அழைத்துச் சென்று "அம்மா பாவமில்லையா சின்னப்பய. இப்பபோயி அம்மாவ கஷ்டப்படுத்தறியே, நல்ல பிள்ளயா போயி வெளயாடு" என அனுப்பி வைத்தாள்.

அன்று இரவு ராசாத்திக்கு ஜன்னி கண்டது. சுயநினைவில்லாமல் அவள் அரற்றிக்கொண்டிருப்பதைக் காணப் பொறுக்காமல் செல்லா பக்கத்து வீட்டுக்கு ஓடிச் செய்தி சொன்னாள். அந்த நடுநிசியில் ஊரே ஓடிவந்தது. "ராசாத்தியை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவணும் யாராச்சும் போயி தலைவருகிட்ட சொல்லி தோட்டத்து லொறியை கேக்கச் சொல்லுங்கப்பா" என ஒரு பெரியவர் கூற தலைவரைக்காண ஒரு கூட்டம் போனது. ஆனால் லொறி கொண்டு வருவதில் ஏற்பட்ட தாமதம் ராசாத்தியின் உயிரைக் கொண்டு போனது. ஆம்! முதலாளிகளிடமிருந்து லாபத்தை எதிர்பாராமல் தம் உயிரைக் கொடுத்து உழைத்த ஜீவன்களின் ஜீவமரணப்போராட்டத்தின் போதும் உதவி செய்யாத அந்த முதலாளிகளுக்காக உழைப்பதைவிட உயிரை விடுவதே மேல் என ராசாத்தி நினைத்தாள் போலும்.

தந்தையையும் பறிகொடுத்து தாயையும் இழந்து நிற்கின்ற சோகம் தாங்காது தாயின் உடலில் விழுந்து கதறி அழுதனர் செல்லாவும் காமாட்சியும். இவர்களது துக்கத்தைக் கண்டு ஊரே கண்ணீர் விட்டது. தாயின் பிணத்தின் நெற்றியின் மீது 'நெத்திக்காசு' வைக்கப்பட்ட போது செல்லாவுக்கு தாள முடியாமல் போனது. "தம்பி அம்மாக்கிட்ட காசு கேட்டு கரைச்சப்படுத்துவியே இனி என்னடா பண்ணுவ யாரு கிட்ட காசு கேக்கப் போற?' நமக்கு இனி யாரிருக்ககா?' கதறினாள் அவள் தனக்கு காசு தர யாருமில்லை என்ற எண்ணமே குமரேசுவுக்கு அழுகையை வரவழைத்தது.

ராசாத்தி தன் இறுதிப் பயணத்தை ஆரம்பித்தாள். மகன் குமரேசு முன்னால்,'தீமுட்டி' தூக்க, செல்லாவும் காமாட்சியும் கதறிக் கதறி வழியனுப்ப, ராசாத்தி பயணமானாள். கூடவே சென்ற குமரேசுவுக்கு "அம்மா தனக்கு காசு தராமலே போய்விட்டாளே" என்பது தாள மாட்டாத கவலையைக் கொடுத்தது. "நா காசு கேட்டதாலதா அம்மா செத்து போச்சோ" என்ற சந்தேகமும் இடையிடையே எழுந்தது.

சுடுகாட்டில் ராசாத்தியின் பிணம் இறக்கப்பட்டது. அப்போது அவளது நெற்றியிலிருந்து அந்த "நெத்திக்காசு" நழுவிக் குமரேசுவின் காலடியில் விழுந்தது. சட்டென்று குனிந்து அதை எடுத்த குமரேசுவிற்கு "அம்மா எனக்கு காசு தந்துவிட்டாள்" என்ற சந்தோஷத்தில் அழுகை வந்தது. கதறிக் கதறி அழுத குமரேசுவை அடக்க வழி தெரியாமல் திணறியது கூட்டம்.

ஒருவாறு தாயின் சிதைக்கு தீமூட்டி அவளை வழியனுப்பிவிட்டு ஆற்றில் மூழ்கி எழுந்த குமரேசுவின் பிடியினுள் அந்த நெத்திக்காசு பத்திரமாய் இருந்ததது. "எட்டுக்கு

கும்பிடுவதற்காக "செலவுக்கு அம்மா காசு வைத்திருப்பாளா" என்ற பெரியவரின் கேள்விக்காக வீட்டிலுள்ள சகல சாமான்களையும் செல்லா புரட்டி எடுத்து விட்டாள். செல்லா வயதில் சிறியவள் என்றாலும் மூத்தவள் ஆகையால் சில பொறுப்புகள் அவளுக்கு தானாகவே ஏற்பட்டிருந்தது. எட்டுக்கு கும்பிடுவதற்காக வீட்டிலிருந்த சில சாமான்களை விற்கலாம் என தீர்மானித்த பொழுதுதான் அந்த முடிவையும் எடுத்தாள் செல்லா.

அம்மா தந்த கடைசி காசை ஏனோ காசு முட்டியில் போட விரும்பவில்லை குமரேசு. அதை கவனமான ஓரிடத்தில் ஒளித்து வைத்திருந்தான் அவன். யாராவது எடுத்து விடுவார்களோ என்ற பயத்தில் 'பூனை தன் குட்டியை தூக்கிச் செல்வது போல' தன்னோடு எல்லா இடமும் எடுத்துச் செல்லத் தொடங்கினான். எங்காவது விழுந்து தொலைந்து விடுமோ என்ற பயத்தில் காசு முட்டியிலேயே போட்டு விடுவது என தீர்மானித்து உள்ளே நுழைந்தவன், அடுத்தநாள் "எட்டுக்கு கும்பிடுவதற்காக" வாங்கி வைக்கப்பட்டிருந்த சாமான்களில் மோதிக்கொண்டான். தனது காசு முட்டியை எடுப்பதற்காக காம்பராவிற்குள் நுழைந்தவனின் கண்ணில் வெள்ளையும் நீலமும் கோடுகள் போட்ட பிளாஸ்டிக்கினாலான அந்த உடைந்த துண்டு பட்டு தெறித்தது!

(1998) இன்னுமொரு காலடி

# பசி

அப்போதுதான் அந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது.

கிட்டத்தட்ட இரண்டுமைல் தூரத்தை அந்த வேகாத வெயிலில் கையில் கனக்கின்ற சுமையோடு கடந்து வந்த அசதியில் அந்த பஸ்தரிப்பில் நிலையத்தில் நின்றிருந்தான் வடிவேலு. அவனது வயது தந்த முதிர்ச்சிக்கு இது அதிகப்பட்ச சுமைதான்! ஆனால் சுமையைப் பார்த்தால் முடியுமா என்ன? இதனால் கிடைக்கப்போகிற ‘சில்லறை’தான் இன்றைய இரவில் அடுப்பைப் புகைய வைக்கப்போகிறது. பிள்ளைகளின் வாட்டமான முகங்களை நினைக்கையில் மனசில் ஏறுகின்ற சுமையோடு பார்க்கையில் வடிவேலுவுக்கு இந்த ‘கைச்சுமை’ தூசாகப்பட்டது.

“ம்.. எப்ப இந்த தோட்டத்து கொழுந்துகளெல்லாம் கருக தொடங்கிச்சோ அன்னிக்குப் பிடிச்ச சனியன் இது! ரெண்டு நாள் வேலயில என்னத்த செய்யுறது? மத்தவங்களுக்காச்சும் கூலிவேல செய்ய ஒடம்புல தெம்பிருக்கு. ஆனா எனக்கு……..? ஏதோ இதுனாலதான் கூழோ கஞ்சியோ குடிக்கமுடியுது….” தனக்குள் பேசியபடியே அந்தத் திட்டில் குந்திக் கொண்டு முகத்தில் வழிந்த வியர்வையை தலைத்துண்டால் அழுந்தத் துடைத்துக் கொண்டான். அந்த துண்டையே விசிறியாக்கிக் கொண்டு தற்செயலாகத் திரும்பியவன் மருண்டு போனான். “அங்க வாறது பெரிய தொரயும் சின்னதொரயுமில்லயா? ஐய்யய்யோ இப்ப என்ன செய்யிறது?” என உள்ளுக்குள்

பதறியவன் எந்தவொரு தீர்மானத்துக்கும் வருமுன்பாகவே பெரியதுரை அவனருகில் வந்து விட்டார்.

"என்னா வடிவேலு! டவுனுக்குப் போறாப்ல.. இது என்ன பையில?" அவர் சாதாரணமாகத் தான் கேட்டார். இவன் தடுமாறி போனான். வடிவேலுவின் பதறலே அவனுக்கு யமனானது. கண்களில் சந்தேகம் மின்ன பையின் அருகே வந்த துரை தன் கைத்தடியால் பையை இலேசாகத் தட்டினார். அதிர்ச்சியுடன் அதட்டலாக மீண்டும் கேட்டார் "பையில் என்னான்னு கேட்டேன்?" வடிவேலு கண் கலங்கி தலைகுனிந்தான்.

அப்போதுதான் அந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது!

பையை திறந்து பார்த்தார் பெரியதுரை. 'கப்பென்று' மணம் வீசியது. அவர் முகம் ரத்தமாய் சிவந்து போனது. கண்களில் உக்கிரம் தெரிய சின்னதுரையிடம் ஆங்கிலத்தில் ஏதோ சொன்னார். அவரும் பையை எட்டிப்பார்த்துவிட்டு அதிர்ச்சியோடு நிமிர்ந்தார்.

"வடிவேலு உண்மைய சொல்லு! எங்கயிருந்து ஒனக்கு இவ்ளோ தேயிலத்தூள் கெடச்சது?" வினயமாகக் கேட்டார் துரை. வடிவேலுவின் தலை நிமிரவேயில்லை. "ஏய் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லமாட்டீயா?" சின்னதுரை அதட்டினார். மெதுவாக நிமிர்ந்தான் வடிவேலு. பார்வை நிலை கொள்ளாமல் தடுமாறியது. "இது..... இது.. எனக்கு ஸ்டோரில குடுக்கிற தூளுதாங்க" "ஏய் வெளயாடுறியா நீ? இவ்ளோ தேயில நாம குடுக்கிறது இல்லயே?அதோட இது ஒண்ணாம் நம்பர் தேயிலயாச்சே! ஏன்னய ஏமாத்தப் பாக்குறியா? உண்மைய சொல்லு.... ஸ்டோரிலயிருந்து களவெடுத்தியா?"

'விசுக்கென்று' நிமிர்ந்தான் வடிவேலு "ஐயா! நா திருடலீங்க! என்ன நம்புங்கய்யா.. சத்தியமா நா

களவெடுக்கலீங்க” எத்தனையோ வருட வாழ்க்கையில் சுமந்தேயிராத இந்த குற்றச்சாட்டை ஏற்க முடியவில்லை அவனால். பெரியதுரைக்கும் தெரியும். நிச்சயமாய் இவன் திருடியிருக்கமாட்டான். ஆனால் என்னமோ நடந்திருக்கின்றது. தான் ஊகித்ததை சின்னதுரையிடம் மெதுவாகக் கூறினார். அவரும் தலையாட்டினார். மீண்டும் வடிவேலுவிடம் ஆதரவாகக் கேட்டார். “வடிவேலு! நீ திருடவும் இல்லேங்குற இது ஸ்டோரில ஒனக்கு குடுக்கிற தூளுமில்ல அப்பிடீன்னா இது எப்புடி ஒனக்கு கெடச்சுது? யாரு குடுத்தாங்க? சொல்லு வடிவேலு”

கண்களில் நீர் நிறைய நிமிர்ந்த வடிவேலுவைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. உதடுகள் நடுங்கியபடி பெரியதுரையை ஏறிட்டபோது தான் செய்து கொடுத்த சத்தியம் நினைவுக்கு வந்தது. தன் சம்பாத்தியம் பிள்ளைகளின் பசியைத் தீர்க்கப் போதாமையினால் அவர்களின் வேதனைகளைப் பொறுக்கமாட்டாது எப்போது இந்த இழிவான வேலையை செய்யத் தொடங்கினானோ அப்போது ‘எந்த சந்தர்ப்பத்திலும் காட்டிக் கொடுக்கமாட்டேனென்று’ செய்து கொண்ட உறுதிமொழி சட்டென திருப்பிக் கொண்டான் வடிவேலு. அவனது அந்த செயல் பெரியதுரையை ஆத்திரமூட்டியது. இவ்வளவு நேரமும் கட்டிக் காத்துவந்த பொறுமை மறைய கோபம் தலைக்கேற வடிவேலுவின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விட்டார். எதிர்பாராத அந்த அடியில் நிலைகுலைந்து போனாலும் வடிவேலு வாயைத் திறக்கவேயில்லை. களைத்துப்போன பெரியதுரை பொலிஸில் அவனை ஒப்படைத்து விட்டுத்தான் ஓய்ந்தார்.

சேதி அறிந்ததும் வடிவேலுவின் குடும்பம் தத்தளித்து விட்டது நித்தியநோயாளியான அவனது மனைவி காமாட்சி

மயங்கி விழுந்து விட்டாள். மூத்தவள் பத்மா- பதினைந்தே வயது நிரம்பியவள் தன் மூன்று தம்பி தங்கைகளையும் பக்கத்து வீட்டில் விட்டுவிட்டு தோட்டத்து தலைவரிடம் ஓடினாள். “தலைவரய்யா தலைவரய்யா எங்கப்பாவ பொலீசு பிடிச்சுக்கிட்டு போயிருச்சாம் அம்மா இத கேட்டதும் மயங்கி விழுந்துருச்சு நா என்ன பண்ணுவேன்?” என புலம்பியபடி ‘ஓவென’ அழ ஆரம்பித்தாள். தலைவர் கருப்பையாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. பத்மாவுக்கு விபரமாக எதையும் சொல்லத் தெரியவில்லை. அவளையும் அழைத்துக்கொண்டு வடிவேலு இருந்த லயத்துக்கு வந்தார் அவர்.

மயக்கம் தெளிந்து அலறிக் கொண்டிருந்த காமாட்சியிடமிருந்து பகீரதப்பிரயத்தனப்பட்டு விபரங்களைத் தெரிந்து கொண்ட தலைவர் பெரியதுரையிடம் சென்றார். துரைக்கு இருந்த கோபத்தில் தலைவரிடம் பொரிந்து தள்ளினார். பின் கடைசியாக சொன்னார்.

“வடிவேலு நல்லவன்னு எனக்குத் தெரியும். சாதாரண தொழிலாளியான அவன இங்க யாரோ பயன்படுத்தியிருக்கிராங்க. உண்மையில தண்டணைய அனுபவிக்க வேண்டியவங்க அந்த ‘யாரோ’ தான். ஆனா அது யாருன்னு இவன் சொல்ல மறுக்கிறானே கருப்பையா! பொலீசுக்கு வடிவேலுவப் பத்தி தெரியாது. அதனால அவன்தான் திருடியிருக்கான்னு கேஸ் எழுதப்போறாங்க. அந்த பாவிப்பய யார் தேயில குடுத்ததுன்னு சொன்னா இந்த பிரச்சினையேயில்ல. கருப்பையா! நீங்களாவது அவனுக்கு கொஞ்சம் புத்தி சொல்லுங்க.” கருப்பையாவுக்கு ஒன்று மாத்திரம் புரிந்தது. வடிவேலுவின் இந்த ‘பிசினசு’ அவனுடைய வீட்டில் யாருக்குமே தெரியாது என்பதுதான் அது. எனவே “இது

விசயமா நாளைக்கு வடிவேலுவுக்கிட்ட கதைக்கனும்" என தீர்மானித்துக் கொண்டார்.

நினைத்தமாதிரியே அடுத்தநாள் வடிவேலுவைக் காணச் சென்றார் கருப்பையா. இவரைக் கண்டதும் கண் கலங்கினான் வடிவேலு. "தலைவரய்யா! எனக்கு வந்த கதிய பாத்தீங்களா?"

"என்னப்பா வடிவேலு! இது நீயா தேடிக்கிட்டதுதானே? யாரு குடுத்தா ஒங்கிட்ட தூளு விக்க சொல்லி? அத சொல்லிப்புட்டீன்னா நீப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்துறலாமில்ல? அத விட்டுப்புட்டு பொட்டச்சியாட்டம் அழுது என்னாவப்போவுது? சொல்லுலே......யாரு குடுத்தாக?" கரிசனத்தோடு கூறி ஆர்வம் மின்ன அந்தக் கேள்வியைக் கேட்டார் தலைவர். ஒரு பெருமூச்சோடு மோட்டுவளையை வெறித்தபடி சொன்னான் வடிவேலு.

"தலைவரய்யா! அத மட்டும் கேக்காதீக. எம்மேல என்ன பழி வந்தாலுஞ்சரி நா சத்தியம் தவறமாட்டேய்யா! இந்த ஜெயிலுக்குள்ளாற நா மாண்டு போறதுன்னாலும் பரவாயில்ல. நா காட்டிக்குடுத்தவங்கிற பேரோட நா உசிர வச்சுக்கிட்டு இருக்கமாட்டேங்கய்யா. புள்ளைங்க வயித்துப்பசியோட கெடக்குதுகளேயின்னு கலங்கிப்போயி என்னிக்கு இந்த புத்திக் கெட்ட வேலய செய்ய தொடங்கினேனோ அன்னிக்கி அவுக முன்னால நா செஞ்ச சத்தியமே இதுதாங்க. என்னய வெட்டிக் கொன்னாலும் காட்டிக் கொடுக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணிப்பிட்டு இப்ப நா என்னத்தங்க சொல்லுறது?" கம்பிகளில் தலையை வைத்து அழுதவனைப் பார்க்க தலைவருக்கும் கவலையாய்தான் இருந்தது.

"அழாதப்பா!நம்ம ஆக்களுக்கு சொத்துன்னு இருக்கிறது இந்த சத்தியமும் உண்மையும் மட்டுந்தானே? ஆனா

அநியாயமா நீ இப்பிடி அவஸ்தைப்படவேண்டியிருக்கே!அத நெனச்சாத்தான் கவலையாயிருக்கு. எல்லாத்தையும் மேல இருக்கிறவந்தான் பாத்துக்கணும்” தன்னையும் அவனையும் ஒருசேர தேற்றிக் கொண்டார் கருப்பையா.

“ஐயா! காமாச்சி புள்ளைங்க எல்லாம் எப்பிடி இருக்காங்கய்யா? அவங்களுக்கு இனி ஒருவேள கஞ்சி ஊத்த யாரிருக்கா!” என்றபடி மீண்டும் கண்கலங்கினான் .

“என்னப்பா நீ! நம்ம சாதிசனங்களை பத்தி என்ன நெனச்சுகிட்டிருக்க நீ? ஒரு பருக்கைன்னாலும் பங்குபோட்டு சாப்பிட்ற சாதியில்ல நம்ம சாதி? அவுகள பத்தி கவலப்படாதப்பா! அதுசரி நீ சாப்பிட்டியாப்பா?” ஆதுரத்தோடு கேட்டார் தலைவர்.

“சாப்பாடு தந்தாங்கய்யா. எனக்குத்தா சாப்புடவே புடிக்கல. இத்தன வருசமா நேர்மையா வாழ்ந்த என்னயப் பாத்து தொர “நீ களவெடுத்தியா”ன்னு கேட்டுப்புட்டாரே! அத கேட்டுப்புட்டும் இன்னும் உசிரோட இருக்கேனே! எனக்கு சாப்பாடும் ஒரு கேடா?” மீண்டும் அழ ஆரம்பித்தவனை எப்படியோ தேற்றிவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்த தலைவருக்கு தூக்கமே வரவில்லை.

‘இத எப்பிடி தீர்க்குறது?’ என்று யோசித்தபடியே இருந்தவர் விடிந்ததும் அது தீர்வே காணமுடியாப் பிரச்சினையாக மாறிவிட்டதை அறிந்து நிலைகுலைந்து போனார்.

எந்த தீர்வுமே காணமுடியாதபடி நிகழ்ந்திருந்தது அது.

வடிவேலு ஜெயிலிலேயே இறந்து போனான்!

தன்மேல் சுமத்தப்பட்ட அபாண்டங்களை தாங்கமாட்டாமல் தன் சத்தியத்தையும் கைவிடாது குடும்பத்துக்காக எதுவுமே செய்யமுடியாத கையாலாகாத்தனத்துடன் மாரடைப்பால் இறந்து போனான்.

தோட்டமே திரண்டுவந்து வடிவேலுவின் காரியங்களை முடித்த வைத்தது.

'இனி என்ன செய்வது?' என தீர்மானிக்க முடியாமல் களைத்து போய் படுத்திருந்தார் தலைவர். அவரைத் தேடி தோட்டத்து இளைஞர்கள் சிலபேர் வந்திருந்தனர். "வாங்க வாங்க" என வரவேற்று அமர செய்தவர் "என்ன விசயம் வராதவங்க வந்திருக்கிறீங்க? என்றார்.

அவர்கள் வந்து அமர்ந்தனர். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "என்னப்பா! ஆளஆள் பாத்துக்கிறீங்க?"

"ஐயா வடிவேலு அண்ணே அநியாயமா உசிர விட்டுட்டாருங்க. நெசமா செயிலுக்கு போகவேண்டியவுக காலுக்கு மேல காலு போட்டுக்கிட்டு சந்தோசமா இருக்காங்கய்யா. வடிவேலு அண்ணே தன் சத்தியத்த காப்பாத்திக்கிட்டு போயிட்டாரு. இப்ப அவரு குடும்பம் நடுத்தெருவில நிக்குதே! இத கேக்க யாரிருக்கா? ஐயா! வடிவேலண்ணே சொல்லாட்டாலும் அவருக்கு தூளு குடுத்து விக்கச் சொன்னது யாருன்னு தெரிஞ்சுப்போச்சு. எல்லா இந்த ஸ்டோருகீப்பர் செஞ்ச வேலதாங்க."

அவர்கள் சொல்ல சொல்ல தலைவருக்கும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது."அது சரீப்பா! இத அன்னிக்கே வந்து சொல்லியிருந்தா ஒரு உசிர காப்பாத்தியிருக்கலாமில்ல"

"நெசந்தாங்கய்யா. நாம இந்த வெசயம் இந்தமட்டுக்குப் போகுமின்னு நெனக்கலீங்க. வடிவேலு அண்ணே சாவுக்குப் பின்னாலதான் நமக்கு புத்தியில படுது. நம்மள கூலிமாடுகளா நெனச்சு எது வேணாலும் செய்யலாமின்னு இருக்காங்களேன்னு கோபமா வருதுய்யா. இத இப்புடியே விட்டுடக்கூடாதின்னு தா நாம எல்லாருமா சேந்து விசயத்த கண்டுபுடிச்சோம்.நீங்க

பெரியதொரக்கிட்ட சொல்லி இதுக்கு ஒரு வழி பண்ணுங்கய்யா” சுமையை தலைவர் தலையில் போட்ட திருப்தியில் விடை பெற்றனர்.

கருப்பையாவும் தீவிரமாக யோசித்து பெரியதுரையின் காதில் இந்த விடயத்தைப்போட்டு விடுவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்தார்.

பெரியதுரையும் விடயத்தைக் கேட்டதும் யோசித்தார். சிறிது நேரத்தின் பின் “நீங்க வொல்லுறது உண்மையா இருக்கலாம். ஆனா ஸ்டோர்கீப்பர்தான் குடுத்தாருங்கிறதுக்கு என்ன அத்தாட்சி இருக்கு. வடிவேலுக்கிட்ட அவரு தூளு கொடுத்தத யாராவது பாத்தாங்களா? அவங்க வந்து சாட்சி சொன்னா நாம மேற்கொண்டு ஏதாச்சும் செய்யலாம். அப்பிடியில்லாம வெறும் சந்தேகத்த வச்சுக்கிட்டு எப்பிடி அவர பொலிசுல பிடிச்சு குடுக்கமுடியும்? நீங்களே சொல்லுங்க கருப்பையா!”

இதைக் கேட்டதும் கொதித்தெழுந்தனர் இளைஞர்கள். “ஆமா அவரு அப்புடிதான் சொல்லுவாரு. ஏன்னா ஸ்டோர்கீப்பர் தொரயோட சொந்தகாரனாச்சே! வாங்கடா! நாம போவோம் தொரைக்கிட்ட.! இன்னிக்கு ரெண்டுல ஒண்ணு பாத்துடறதுதான்” தடுக்க நினைத்த தலைவரும் முடிவில் அவர்களோடு சேர்ந்து கொண்டார் அவர்களது வாதத்தில் இருந்த நியாயத்தால்.

துரை மசியவில்லை. “சாட்சியில்லாம ஒண்ணும் பண்ண முடியாது என்பதே அவரது வாதம்.

“ஸ்டோர்கீப்பர சொல்ல வைக்கிறோம். கூப்புடுங்க அவர.” கூட்டத்தில் யாரோ ஒருவன் கத்தினான்.

பிறகுதான் தெரிந்தது! ஸ்டோர்கீப்பர் தோட்டத்திலேயே இல்லை!!!

தலைவர் கருப்பையா முன்னால் வந்தார் “தொரை! ஏங்க ஸ்டோர்கீப்பர்? நேத்து கூட இருந்தாரே?”

துரை தடுமாறினார். கண்களில் ஒரு பொய்மைப்படலம் தெரிந்தது. “என்ன! ஸ்டோர் கீப்பர் இல்லியா! ஏனக்குத் தெரியாதே!”

கருப்பையாவுக்கு ஆத்திரம் மேலிட்டது.

“தொர.....ஓங்கள நா என்னவோ நெனச்சேன் கடசீல நீங்களும் ஓங்க பெரிய மனுசப்புத்திய காட்டிப்பிட்டீங்களே. ஸ்டோர்கீப்பரு ஓங்க சொந்தகாரங்கிறதால அவனுக்கு ஒரு சட்டம். மாடுகளா அடிமைகளா ஒழைக்கிறதால நமக்கொரு சட்டம்! இல்லியா? ரொம்ப நல்லது. நீங்க ஓங்க சத்திய காட்டிப்பிட்டீங்க. நாம நம்ம பலத்த காட்டுறோம்.

ஸ்டோர்கீப்பரு வந்து இதுக்கு ஒரு முடிவு எடுக்கிற வரைக்கும் இந்த எடத்த விட்டு நகரமாட்டோம். ஆமா எல்லாரும் அப்பிடியே ஒக்காருங்கடா! நாளயிலயிருந்து ஒத்தபயலும் வேலக்கி போறயில்ல! நடக்கிறத நாமுந்தான் பாப்பமே!”

கூட்டம் மொத்தமும் அப்படியே அமர்ந்தது. சேதியறிந்த தோட்டத்து சனம் பூராவும் கோஷத்தோடு வந்து அமர்ந்து கொண்டது.

விடிந்தது. பெரியதுரை வீட்டைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டார். கூட்டம் கோபத்தோடு அவர் மேல் பாய முற்பட்டது. தலைவர் தடுத்தார். “வேணாம் நமக்கு இந்த அடாவடித்தனமெல்லாம். பார்ப்போம் அவரு என்ன செய்யிறாருன்னு பொறுத்திருந்து பார்ப்போம்!”

“வடிவேலுக்கு நீதி கொடு!!” “ஸ்டோர் கீப்பரை கைது செய்!!” என்று கோஷமிட்டபடி அமர்ந்திருந்தது தோட்டம் பூராவும்.

பொலீஸ் வந்தது. சுற்றி நின்று காவல் காத்தது. பெரியதுரை வந்தார். போனார். ஒன்றுமே நடக்கவில்லை.

கூட்டம் சோர்ந்துவிடாமல் உட்கார்ந்திருந்தது மூன்றாவது நாளாக. வீடுகளில் போட்டது போட்டபடியிருக்க அடுப்பு மூட்டிய அரவமே இல்லாமல் தங்களுக்கே வந்த சோகமென ஒட்டு மொத்தமாய் கூடியிருந்தது. கூட்டத்தில் காமாட்சியும் குழந்தைகளும் அமர்ந்திருந்தார்கள். சீவனேயில்லாமல் அமர்ந்திருந்த தாயை மடியில் சாத்தியபடி கண்கள் வீங்கி பார்வையை எங்கோ வெறித்தபடி அமர்ந்திருந்தாள் பத்மா.

தலைவரை தனியே கூப்பிட்டு பெரியதுரை சொன்னார். “இத பாருங்க கருப்பையா. ஸ்டோர் கீப்பர் வேலையை ராஜினாமா பண்ணிட்டாரு. இன்னிக்குத்தான் கடுதாசி வந்திச்சு. சும்மா நீங்க எல்லாரும் ஒக்காந்து இருக்கிறதால என்ன லாபம்?. ஏதோ யோசிச்சு செய்யுங்க”

எல்லோருக்கும் எரிச்சல். இந்த துரை தான் ஸ்டோர் கீப்பரை தப்பிக்க வைத்து விட்டார் என்று ஆத்திரம்.

“தலைவரய்யா ஸ்டோருகீப்பரு நெசமாலுமே வேலய விட்டுப்புட்டாருன்னு எப்பிடி ஐயா நம்புறது?. பெரியதொர நம்மள ஏமாத்தப்பாக்குராறுன்னு தோணுது. நாம இந்த எடத்த விட்டு நகரக்கூடாது.” ஆவேசமாய் கூறினான் ஒருவன்.

“அதுவும் சரிதான். தொரை நம்மள ஏமாளிகளா நெனச்சுப்புட்டாரு. இதுக்கு ஒரு முடிவு தெரியற மட்டும் நாம போகக்கூடாது.” தலைவர் சொல்ல கூட்டம் மீண்டும் அமர்ந்தது.

ம்ஹூம்.....நாட்கள் மூன்றாயின. பெரியதுரை ஏதோ தனக்கு சம்பந்தமில்லாத விடயம் மாதிரி நடந்து கொண்டார்.

சிறுவர்கள் எல்லோரும் துவண்டு போயினர் சாப்பாடு தண்ணீர் இல்லாமல். எல்லோரும் ஒன்றாக இருக்கக் கிடைத்த சந்தோஷ த்தில் எல்லாவற்றையும் மறந்திருந்த அவர்களுக்கு இப்போ 'ஒன்றாக' இருக்கக் கிடைத்த சந்தோஷம் அலுத்து விட்டது. நச்சரிக்கத் தொடங்கினார்கள். "அம்மா பசிக்குதும்மா"

பெரியவர்கள் முதலில் அதட்டிப் பார்த்தார்கள். நச்சரிப்பு அடங்கவில்லை. பெண்கள் முணுமுணுத்தார்கள். "புள்ளைங்க பாவம்! என்னா செய்யுங்க? வீட்டுல குண்டுமணி அரிசியில்ல. இனி வேலக்கி போனாத்தா உண்டு"

கூட்டம்அமைதியாக யோசித்தது. அமைதியை கிழித்துக் கொண்டு ஒரு பையன் சொன்னான். "யம்மா பசிக்குதும்மா..... வூட்டுக்கு போவோம்மா"

"வடிவேலு மாமாவ அநியாயமா கொன்னுப்புட்டாங்கல்ல. அதப்பத்தி ஒரு முடிவு தெரியாம நாம எப்புடி வீட்டுக்குப் போறது தம்பி" தலைவர் அந்த பையனைப் பார்த்து சொன்னார்.

பையன் 'சட்டென்று'கேட்டான். "தாத்தா.... அப்ப வடிவேலு மாமா உசிரோட வரப்போறாரா?..."

அவன் ஆர்வமாய் கேட்டான். கூட்டம் முழுதும் தலைவரை அதிர்ச்சியோடு ஏறிட்டது.

நேரம் நகர்ந்தது. தலைவர் துண்டைஉதறி தோளில் போட்டுக் கொண்டுஎழும்பி நடந்தார். ஒருவர் பின் ஒருவராக எழும்பினார்கள்.

"பசிக்குது...." என பாட்டுப் பாடிய பையனை அணைத்தபடி "வாடா ..வூட்டுக்குப் போயி ஆக்கித் தாறேன்" என்றவாறு நடந்தாள் தாய்

ஏல்லோருமே போய்விட்டார்கள். தாயை மடியில் கிடத்தியவாறு வானத்தைப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த பத்மாவை அவளது கடைசித் தம்பி கூப்பிட்டான். “யக்காவ்…. போவோங்கா..எனக்கும் பசிக்குது….”

தாயை எழுப்பி நடந்தபடி பத்மாவும் லயத்தை நோக்கி……..

மலையகப் பரிசுக் கதைகள்

# ரெண்டு லட்சம்

**க**திரேசுக் கிழவர் திண்ணையில் வந்து அமர்ந்தார். முடியாத காலத்தில் தனியே இருந்து கஷ்டப்படாமல் தன்னுடன் வந்து இருக்கும்படி மகள் எழுதிய கடிதம் நினைவுக்கு வந்தது.

“பாவம் அவள்! அப்பனை வைச்சு கவனிக்க ஆசைப்படுறாள். போகத்தான் வேணும். ஆனாலும் சும்மா வெறுங்கைய வீசிக்கொண்டு போய் குந்தி விடுறதே! என்ன கண்டதும் “தாத்தா தாத்தா” என்று ஓடிவாற அந்த குஞ்சுகளுக்கேதும் வாங்கிக் கொடுக்கத்தானும் கையில காசு கிடக்கே? ம்ஹூம்…என்னாலும் உப்ப முன்னமாதிரி ஏதும் செய்ய முடியாமக் கிடக்கு! தன்னந்தனியா வாய்க்கு ருசியா சமைச்சு சாப்பிட்டு கொண்டு கிடந்த எனக்கு இப்ப தள்ளாடத் தொடங்கிட்டுது. அதுசரி வயசுமென்ன லேசுபட்ட வயசே..?சரி மகளோட போய் கிடக்கலாமெண்டால் உவள் ராசாத்தி தரவேண்டிய ரெண்டு லட்சத்தையும் தருகிறாளில்லயே? சனியன்கள் காரியமாகுமட்டும் காலையும் பிடிக்குங்கள். இப்ப என்னடாவெண்டால்…..”

கதிரேசருக்கு ராசாத்தியின் அந்த நாளையத் தோற்றம் ஓவியம் போல கண்ணுக்குள் தெரிந்தது. காதில் பாம்படம் ஆட, உடலெங்கிலும் பொன்னால் வர்ஷித்துக் கொண்டு, பட்டுச்சேலையை இறுகக்கட்டி முதுகுப்புறமாய் செருகிக் கொண்டு, கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு, தலை வாசலில் நின்றபடி வேலைக்காரர்களை விரட்டுகின்ற ராசாத்தி நினைவில் வந்தாள்.

"எத்தனையிருந்துமென்ன, மனிசின்ர முகத்தில எள்ளளவேனும் லச்சிமித்தனம் இருக்கே? ம்ஹூம்... சும்மா செருக்கோட அவ நிக்கேக்க பாக்கோணும்"

தன்னை வரச்சொல்லி ஆளனுப்பியிருந்த ராசாத்தியை காணச்சென்ற அந்த நாளை கதிரேசர் மறக்கவேயில்லை. "மூக்கில மின்னிய வைரமூக்குத்திய சேலத்தலைப்பால துடைச்சபடி அவள் பேசிய பேச்சு.... "இஞ்ச பாருங்கோ கதிரேசண்ணை! உவன் ரகு ஒத்த காலிலயெல்லோ நிக்கிறான். அந்த பெட்டையத்தான் முடிப்பானாம். தான் கோயிலில அவள பாத்தவுடனேயே தீர்மானிச்சுட்டானாம். எங்கட ஒரே மகன். அவன் ஆசப்பட்டத நாங்க செஞ்சு குடுக்காமல் முடியுமே!? பெண் வீட்டில என்னண்டா சாதகம் பொருந்தேல்ல எண்டு சொல்லிப்போட்டினம். உந்த காலத்தில உதையெல்லாம் யார் நம்புகினம் சொல்லுங்கோ கதிரேசண்ண? அவயள் உங்களுக்கு சொந்தமெல்லோ! ஒருக்கா நீங்களும் சொல்லிப் பாருங்கோவன்! "

"சாதகம் பொருந்தாட்டா என்ன செய்யமுடியும் தங்கச்சி? விளையாட்டே?! இது வாழ்க்கயெல்லோ?" என்ற கதிரேசரின் பதிலுக்கு.

"சும்மா கிடவுங்கோ அண்ணை! சாதகத்திலயும் எல்லாம் பொருத்தமாம். ஏதோ ஒரு பொருத்தம் தான் அதமம் எண்டு சாத்திரியார் சொன்னவர். அதுக்கு சாந்தி கீந்தி ஏதும் செஞ்சுட்டாப் போச்சு.

அவையள் காட்டின சாத்திரியாரிட்டத்தானே நாங்களும் காட்டினனாங்கள். பிறகென்ன?"என்று படபடத்தாள் ராசாத்தி.

"எண்டாலும்..." என்று இழுத்த கதிரேசரை மறித்து முடிவாக அழுத்தமாக சொன்னாள் ராசாத்தி. "இஞ்ச பாருங்கோ

கதிரேசண்ணை. உங்கட பேச்சுக்கு அவையள் வீட்டில நல்ல மதிப்பிருக்கு என்ற விஷயம் எனக்குத் தெரியும். உங்களால உத செய்யமுடியும் எண்டதும் எனக்கு நல்லா தெரியும். உத மட்டும் நீங்கள் செஞ்சு போட்டியளென்றால் பின்வளவுக்கில்ல இருக்கிற ரெண்டு ஏக்கர் பனங்காணிய உங்கட பேருக்கு எழுதி வைப்பன். உது அம்மாளாச்சி மேல சத்தியம். சொல்லிப்போட்டன் ஓம்."

அடித்துப்பேசிய ராசாத்தியின் பேச்சில் மயங்கித்தான் போனார் கதிரேசர். ஆசை தலைத்தூக்கியது. "மகளுக்கும் கல்யாண வயசு வந்திட்டுது. அவளுக்கென்று உந்த காணியாவது இருக்கட்டும்" என்ற எண்ணம் வரவே, "ம்ஹூம், ஏதோ சொல்லிப் பாக்குறன்" என்று கூறியபடி போனவர் நேரே சுந்தரி வீட்டில் தான் போய் நின்றார்.

அங்கும் சாதகத்தைச் சுட்டிக்காட்டியே மறுத்தார்கள். கதிரேசரும் விடவில்லை. "உதுக்கு ஒரு சாந்தி செஞ்சுப்போட்டால் எல்லாம் சரியாப்போம்." என்று இல்லாத சாட்டையெல்லாம் சொல்லி சுந்தரி வீட்டாரை எப்படியோ சம்மதிக்க வைத்துவிட்டார்.

ரகுவுக்கும் சுந்தரிக்கும் வெகுவிமரிசையாக திருமணம் நடந்தேறியது. கல்யாண வீட்டில் வந்தவர் போனவர் எல்லோரிடமும் கதிரேசர் மிகவும் பூரிப்போடு சொல்லிக் கொண்டார்,"உந்த கலியாணத்த ஒப்பேத்தி வச்சது நானாக்கும்."

ராசாத்தியின் காதிலும் அடிக்கடிச் சொல்லிக் கொண்டார். "தங்கச்சி! நீ ஆசப்பட்ட மாதிரி உந்த கல்யாணத்த சரிப்படுத்திப் போட்டன். என்ன மறந்திடாத!" "என்ன கதிரேசண்ணை, உங்கள மறந்திடுவனே?! எப்படியும் அந்தக்காணிக்கு உரிமைக்காரர் நீங்கள்தான் "

"ம்ஹூம்... எப்பிடியெல்லாம் கற்பனை பண்ணிக் கொண்டிருந்தன்? மேளுக்கு அந்தக்காணியில எப்படியாவது ஒரு வீட்டக் கட்டிக் கொடுத்துட்டனென்றால் கடசிக்காலத்துல தண்ணி வெண்ணி வச்சுத் தரவாவது அவள் பக்கத்துல இருப்பள் என்றெல்லோ இருந்தன். மேளுக்கு சம்பந்தம் ஒன்று கூடிவருமாப்போல இருந்தபோது ராசாத்தியிட்ட சொல்லிவைக்கலாமென்று போனபோதெல்லோ மனிசியின்ற திருகுதாளம் புரிஞ்சுது."

"கதிரேசண்ணை, அந்த காணிக்குப் பக்கத்துக் காணிய முதலியாரெல்லோ வாங்கினவர். வீடு கட்ட பிளான் போட்டவராம். இடம் காணாதெண்டு உந்தக்காணியை வந்து கேட்டவர். ஆனானப்பட்ட மனுஷனெல்லோ அண்ணை? என்னால மறுப்பு சொல்ல முடியேல்ல. ஆனால் உந்த காணி வித்தக் காசு ரெண்டுலெட்சத்தையும் உங்களுக்கென்று நினைச்சுத்தான் பேங்கிலப் போட்டு வச்சிருக்கிறன் ஆத்திர அவசரத்துக்கு உதவுமெல்லே? உங்களிட்ட கிடந்தா என்ன என்னட்டைக் கிடந்தாலென்ன? தேவப்படும்போது க்ஷஇம்மென்னும்; முன்னம் எடுத்துத்தாறன் அண்ண!"

சோர்ந்து போனார் கதிரேசர். மனசில் கட்டியெழுப்பிய கோட்டை சரிந்து விழலாயிற்று. ஆனாலும் மனசின் ஓரமாய் நம்பிக்கையும் ஊசலாடியது."சரி...ரெண்டு லெச்சம் எண்டது என்ன லேசுப்பட்டக் காசே? ராசாத்திக்கு இருக்கிற செல்வத்தோட பாக்கேக்க அவளுக்கு உது தூசு. அவ சொல்லுற மாதிரி ஆத்திர அவசரத்துக்கு எடுக்கலாம்தானே?!" ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டார் கதிரேசர்.

அந்தக் காணியுமில்லாமல் காசும் இல்லாமல் எப்படியோ மகளின் கல்யாணத்தை ஒப்பேற்றிவிட்டார்.

"வருசமும் பத்துப் பன்னண்டாச்சு! ராசாத்தியிற்றை காச கேக்க வேண்டிய சந்தர்ப்பமும் வாய்க்கேல்ல. மருமோன் தங்கக்கம்பி. மோளும் கண்ண கசக்கிக்கொண்டு ஒரு நாளேனும் வந்ததில்ல! ஆனாலும் ராசாத்தியிற்றை அடிக்கடி நினைவுப்படுத்திக் கொண்டுதான் வாரன். அவளும் தாறன் தாறன் எண்டு சொல்லிக் கொண்டேயிருக்கிறாள். இனி உந்த வயசில தனிய கிடந்து அல்லல் படுறத விட்டுப்போட்டு ரெண்டு லச்சத்தையும் வாங்கிக் கொண்டு மேளிட்ட போய் சந்தோஷ மாய் கிடப்பம்."

நப்பாசையுடன் எழுந்தவர், ராசாத்தியிடம் போனார். "தங்கச்சி! எனக்கும் வயசாயிட்டுது. இனி கடைசிக் காலத்திலயாவது மேளிட்டை போய் இருப்பம் எண்டு யோசிக்கிறன்."

"ஓம் கதிரேசண்ணை! நீங்களும் மகளுக்காகவே சீவியத்த கழிச்சுப் போட்டியள். இனி ஓய்வா ஆறஅமர இருக்கவேண்டிய காலந்தானே?! உங்கட மருமோனும் தங்கமான பெடியன். நல்லா கவனிப்பான். கடைசிக் காலத்தில பேரன் பேத்திகளோட வாழ குடுத்து வச்சிருக்கோனும்."என்றாள் ராசாத்தி.

"அதுதான் உப்ப நான் வந்தது, போகமுன்னம் இந்த காச தந்தியெண்டால் நல்லது." தயங்கியபடி பேசினார் கதிரேசர்.

"ரெண்டுநாளா ஒரே மூட்டுவலியண்ணை! பாதத்த கீழ ஊன்ற முடியாமல் கிடக்கு. உதோட எப்பிடி பேங்க்குக்கு போறது?" என்று முணுமுணுத்தவள், நீங்கள் எப்பப் போறியளண்ண?" என்று வினவினாள்.

சின்ன ஏக்கத்தோடு கிழவர் சொன்னார். "வாற புதனன்று போகலாமென்று இருக்கிறன் பிள்ளை "

“அப்ப கதிரேசண்ண இன்று வெள்ளிக்கிழமையெல்லே! செவ்வாக்கிழமை சொல்லிக்கொண்டு போக வருவியள் தானே? நான் காசயெடுத்து வைக்கிறன். உங்களுக்கும் வழிப்பயணத்துக்கும் சரியாயிருக்கும்.”

ராசாத்தி சொன்னால் மறுப்பேது? “அப்ப சரி நான் வாறன்.”என்றபடி நடந்த கதிரேசருக்கு மனசே சரியில்லை. “மனிசியின்ற பேச்சை நம்பவும் முடியேல்ல. நம்பாமலிருக்கவும் முடியேல்ல.” என்று சிந்தித்தபடி

சென்றவர், புதனன்று புறப்பட்டு வருவதாகக் கூறி மகளுக்குக் கடிதமும் எழுதிப் போட்டுவிட்டார்.

சொன்னமாதிரி செவ்வாயன்று மாலை ராசாத்தியின் வீட்டுக்குப் போனவரை சுந்தரிதான் வரவேற்றாள். “வாருங்கோ அப்பு! மாமி நேற்று கொழும்புக்குப் போயிட்டா.”

“என்ன கொழும்புக்குப் போயிட்டாவோ?” அதிர்ச்சியில் மனுஷருக்கு பேச்சு வரவில்லை

சுந்தரி கேட்டாள் “ என்னணையப்பு! ஏதும் அவசரமே?”

சொல்லவா முடியும்?“ உன்னைக் கட்டிக் கொடுத்ததற்காக காசு தரவேண்டியிருக்கு ” என்று!!

“ எப்ப வருவா ராசாத்தி ? ” நப்பாசையுடன் கேட்டார்.

“ எப்படியும் ரெண்டு மூன்று நாளாகுமென்று சொன்னவ..” சுந்தரி சொன்னாள்.

இனி எதுவும் செய்யமுடியாது என்று தெரிந்தபின் நைந்த மனத்தோடு “நான் மேள் வீட்ட போட்டனென்று சொல்லு பிள்ளை!” என்று கூறி விட்டு திரும்பினார்.

மகளின் வீட்டுக்கு வந்தபோது அவளும் மருமகனும் பேரக்குழந்தைகளுமாய் சந்தோஷமாய் வரவேற்றனர். மனசு

நிறைந்திருந்தாலும்கூட சின்னதாய் ஒரு வருத்தம் மனசின் ஓரத்தில் நிலைத்திருந்தது.

அடிக்கடி விட்டத்தை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த தகப்பனைப் பார்த்து பார்வதி கேட்டாள். “என்னய்யா வந்த நாளிலிருந்து பாக்கிறன். ஒரேயடியா யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்?. ஊர விட்டுப்போட்டு வந்தது கவலையா கிடக்குப்போல?”

“இல்லயடி பிள்ள உவள் ராசாத்தியெல்லோ என்ன ஏமாத்திப்போட்டாள்”என்று தொடங்கி கவலையோடு கூறி முடித்தார்.

பார்வதிக்கு கோபமும் கவலையும் ஒன்று சேர, கணவன் மணியத்திடம்சொல்லிஅங்கலாய்த்தாள்.மணியம்மாமனாரிடம் இதுபற்றிக் கதைக்க ஆரம்பித்தபோதே கதிரேசருக்கு குரல் நெகிழ்ந்து கண் கலங்க ஆரம்பித்தது. “பாரும் தம்பி! உவள் இப்பிடிச் செய்வாளென்று நான் கனவிலயும் நினைக்கேல்ல. நானென்ன சும்மா கேட்டனானே? அவள் தாறனெண்டவள். அதுவும் காணி என்று போட்டு பிறகு “வித்துப்போட்டன். காசு ரெண்டு லச்சத்த தாறன்” எண்டாள். எப்பிடியென்றாலும் சொன்னமாதிரி காச தந்தால் போதும் எண்டு நினைச்சன். இப்ப என்னடாவெண்டால்....அவருக்குக் குரல் அடைத்தது.

“உதுக்காக கவலைப்படாதீங்கோ மாமா! இப்பிடியும் ஆக்கள் இருக்கினமேயென்று தெரிஞ்சு கொள்ள முடிஞ்சுதே அதுசரி! அவ காசு தர இருப்பத எழுதி வாங்கேலையோ நீங்கள்?”

“இல்லயே தம்பி! காதும் காதும் வச்சாப்போல முடிச்சுக் குடுத்துடுங்கோ என்று அவ சொன்னத நம்பி...”மீண்டும் கண்கலங்கிற்று கதிரேசருக்கு.

“போனது போகட்டும் மாமா. நீங்கள் வந்து சேந்ததற்கு அவவுக்கு கடுதாசி போடேல்லதானே? கடுதாசியில இந்த விசயத்தயும் சேத்து எழுதுங்கோவன். என்ன பதில் வருகுதென்று பாப்பம்!” மணியம் சொன்னபோது கதிரேசருக்கும் தெம்பு வந்தது.

உடனே கடிதம் எழுத தொடங்கினார் கதிரேசர். சௌக்கியம், ஊர் விசேஷம், காலநிலை, இவ்வூர் புதினங்கள் என்று எல்லாவற்றையும் எழுதிவிட்டு “தங்கச்சி! அன்று நீ சொன்னபடி நான் வந்தனான். நீ கொழும்புக்குப் போயிட்டதா சுந்தரி சொன்னவள். நானும் உந்த காசுக்காக நாயா பேயா அலைஞ்சுப் போட்டன். இப்ப மேள் வீட்ட வந்து நிக்கிறன். அவளுக்கு சிலவுக்குக் கொடுக்கத்தானும் என்ட கையில காசு இல்லாமல் கிடக்கு. நீ அந்த காச அனுப்பினியெண்டால் நல்லம். இனியாவது கட்டாயம் அனுப்புவாயெண்டு நம்புறன்.” ஒரே மூச்சாக எழுதிமுடித்தவர், மருமகனிடமும் ஒருதடவை காட்டிவிட்டு அஞ்சல் செய்தார்.

மாதங்கள் இரண்டாகியும் பதிலைக் காணவில்லை. கதிரேசர் மிகவும் சோர்ந்து போனார். அந்தக் கடிதம் ராசாத்தியின் மகன் ரகுவின் கையில்தான் கிடைத்தது. கடிதத்தைப் படித்தவன் நேரே அம்மாவிடம் வந்தான். “ அம்மா இதென்ன புதுக்கதயாக் கிடக்கு! நீங்களேன் கதிரேசப்புவுக்கு காசு குடுக்கோனும்?” என்றான்.

“அது வந்து.... எனத் தயங்கியவள், சுந்தரிக்குத் தெரியாமல் ரகசியமாகச் சொல்லி முடித்தாள்.

“அம்மா ! நீங்கள் செய்யிறது பிழையல்லோ? அவருக்குக் காசு தாறனென்று ஓம்பட்டனீங்கள், குடுத்திருக்கத்தானே வேணும். எங்களுக்கென்ன, உந்த ரெண்டு லச்சத்த வச்சுக்

கொண்டுதான் சீவிக்கோணுமே? காச அனுப்பிற வழிய பாருங்கோம்மா!” அவன் சொல்லி முடிக்கமுன்னம் ராசாத்தி பாய்ந்தாள். “நீ சும்மா கிடடா! நீ சுந்தரிய முடிக்கோனும் என்று விதி இருக்கேக்க உந்தக் கிழவனாலேயே எல்லாம் நடந்தது? இஞ்ச பார்! உனக்கு இதுகளொண்டும் விளங்காது. நீ உன்ட அலுவலப் பார்! எனக்குத் தெரியும் எதை எப்பிடிச் செய்யிறதெண்டு”

தாயின் பேச்சைத் தட்டியறியாதவன் ரகு. ஒன்றுமே செய்ய முடியாதவனாய் மனசுக்குள் கதிரேசுத் தாத்தாவுக்காக பரிதாபப்பட மட்டுமே அவனால் முடிந்தது. இடையில் சுந்தரியோடு கொழும்புக்குப் போக நேரிட்டபோது, விடயத்தை சுந்தரியிடம் பகிர்ந்து கொண்டவன் அம்மாவுக்குத் தெரியாமல் மணியத்தின் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து வந்தான். கதிரேசருக்கு அவனைக் கண்டதும் கண்ணில் ஓர் எதிர்பார்ப்பு மின்னியது. புதினங்கள் எல்லாம் பேசி முடிந்ததும் “தம்பி! அம்மா எப்பிடி இருக்கிறா? ஏதும் சொல்லி விட்டவவே?” என வினவினார்.

ரகுவுக்குப் பாவமாக இருந்தது. சுந்தரி சொன்னாள். “நாங்கள் உங்கு வாறது மாமிக்குத் தெரியாது அப்பு!” கதைத்துக் கொண்டிருக்கும் போதே மணியம் வந்து விட்டார். பொறுக்க மாட்டாது நேரடியாகவே ரகுவிடம் கதைத்தார்.“என்ன தம்பி! அம்மா செய்யிறது நல்லாவே கிடக்கு? நீங்கள் படிச்சவரெல்லோ? அம்மாவுக்கு எடுத்துச் சொல்லலாமெல்லே? பாவம் மாமா! உந்த காச நம்பி இருந்துப்போட்டு இப்போ ஒத்தசதமும் கிடையாது என்ற நினைப்பே அவரப் போட்டு வாட்டுது. உங்களிட்ட இல்லாதகாசே? உப்பிடி ஏழைபாழைகளிட வயித்தில அடியாதேயுங்கோ..” பொரிந்து தள்ளிவிட்டார் மணியம். ரகுவுக்கு வேதனையாகவும் இருந்தது. கோபமும் வந்தது.

"சொன்னா நம்ப மாட்டீங்கள் அண்ணை! அப்பு எழுதின கடுதாசிய பாத்த பிற்பாடுதான் அம்மாட்ட கேட்டனான். அப்ப தான் எனக்கு விசயமே தெரிய வந்தது. சுந்தரியிட்டயும் சொல்லிக் கவலப்பட்டனான். இப்பவும் எப்பவும் காசு விசயமெல்லாம் அம்மாவோடதான். அவவுக்கு மாறா என்னால எதுவும் சொல்லவோ செய்யவோ முடியாமல் கிடக்கு. ஆனாலும் அப்புவுக்கு அம்மா செஞ்சது பெரிய அநியாயம்தான். மனசு கேட்காமல் தான் கொழும்புக்கு போனதோட அப்புவையும் பாத்துட்டு போகலாமென்று வந்தனாங்கள். அப்பு! ஏதோ என்னால முடிஞ்சது இதுதானப்பு. இதில ஐயாயிரம் ரூபா இருக்கு. உது நான் சம்பாதிச்சது. இந்தாருங்கோ உத பிடியுங்கோ" என்று கூறியபடி கதிரேசரின் கையைப் பிடித்து காசைத் திணித்தான். "அப்பு! எங்களோட மனஸ்தாபப்படாதேயுங்கோ!" என்று சுந்தரியும் கூறவே கதிரேசருக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது.

"சேச்சே, உங்களோட எனக்கென்ன மனஸ்தாபம்? நான் தூக்கி வளத்த பிள்ளைகளல்லோ நீங்கள். ராசாத்தி எப்பிடிப்பட்டவள் என்று எனக்கு நல்லாத் தெரியும். ஆனாலும் எனக்கு உப்பிடித் துரோகம் செய்வாளென்று நான் கனவிலயும் நினைச்சிருக்கேல்ல. ம்ஹூம்.. சின்னஞ்சிறுசுகள் உங்களுக்கு இருக்கிற மனசு கூட அவவுக்கு இல்லாமல் போச்சே!" என வருத்தப்பட்டுக் கொண்டவர், "என்னைத் தேடிவந்து கையில காசு தந்திட்டுப் போறியள். நீங்கள் நல்லாயிருக்கோனும் பிள்ளைகள்" என்று வாழ்த்தவும் செய்தார்.

ரகு தந்த காசில் பேரக்குழந்தைகளுக்கும் மகள் மருமகனுக்கும் தான் விரும்பியதை வாங்கிக் கொடுத்தார். சந்தோஷமாக இருந்தாலும் ராசாத்தி என்ற நெருஞ்சிமுள் அவர் நெஞ்சில் தைத்துக் கொண்டுதான் இருந்தது. அதுவும்

மணியத்தின் வியாபாரம் மந்தமாகி அவர்கள் தவித்தபோது தன் கையாலாகாததனத்தை நினைந்து நினைந்து உருகினார் கதிரேசர். இந்த கவலையே அவரை நோயாளியாக்கியது. மனசுக்குள்ளேயே மருகி மருகி நோய் அதிகமாகியது. உணவு இறங்காமல் பேச சக்தியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தபோது மகளிடம் சொன்னார்.“ நான் உப்பிடிக் கிடக்கிறனெண்டு ராசாத்திக்கு அறிவிச்சுப் போடு.” பார்வதிக்குக் கவலையாக இருந்தது. இன்னமும் ராசாத்தி மேல் நம்பிக்கை வைத்திருக்கிற தகப்பனின் நல்ல மனது புரியவே, மறுப்பு சொல்லாமல் ராசாத்திக்கு கடிதம் எழுதிப் போட்டாள்.

மனதின் ஏக்கமே பார்வையில் நிறைந்திருக்க, எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் இன்னமும் கண்களில் தேங்கியிருக்க, அந்த விடிகாலைப் பொழுதில் கதிரேசுக்கிழவர் உயிர் துறந்தார். கவலையின் உச்சத்திலும் பார்வதி தந்தையின் மனதுக்கேற்ப மணியத்திடம் சொல்லி ராசாத்திக்கு தந்தி அடிக்க சொன்னாள். ரகுவும் சுந்தரியும் பிடிவாதமாய் நின்றதாலோ என்னமோ ராசாத்தியும் அவர்களுடன் வந்தாள். “ஐயோ எண்டையண்ணை” என்று கதறிக் கொண்டு வந்தவளை ஊர் “நெருங்கின சொந்தம் போல” என்று சிலாகித்துக் கொண்டது.

கண்களில் கோபம் மின்ன, ராசாத்தியை நோக்கி நடக்க முனைந்த மணியத்தை பார்வதி கையைப் பிடித்து நிறுத்தினாள். “வேண்டாமப்பா! ஐயான்ரை உயிர் இருக்கேக்க கிடைக்காத காசப் பத்தி இனி எங்களுக்கேன் கதை வேண்டிக் கிடக்கு? செத்த வீட்டுக்குள்ள வீணா பிரச்சினைப்படாதேயுங்கோ..” உற்றமும் சுற்றமும் கதற, பேரக்குழந்தைகள் நெய்ப்பந்தம் பிடித்து வழிக்காட்ட, மயானம்நோக்கிப் புறப்பட்டு விட்டார் கதிரேசர். அவரோடு அவரது எதிர்பார்ப்பும் சேர்ந்து எரியுண்டு போயின.

ஊருக்கு புறப்பட விழைந்தாள் ராசாத்தி. “ரகு! பொழுதுபட்டுப் போகும். காரை எடு.” என்றவளை, “என்னம்மா! தோயாமல் போறதே?” என்றான் ரகு. “அதெல்லாம் வீட்ட போய் பாத்துக் கொள்ளலாம்.” என்று அதட்டியபடி புறப்பட்டு விட்டாள் ராசாத்தி. “இருட்டிக் கொண்டு வருது. பொழுது நல்லா சாஞ்சு போச்சு. உதுக்குத் தான் அப்பவே சொன்னன் நீ கேட்டனியே?” ராசாத்தியின் முணுமுணுப்பைப் பொறுக்கமாட்டாமல் ரகு காரின் வேகத்தை அதிகரித்த போதுதான் அது நடந்தது. அந்த வளைவில் வேகமாய் காரைத் திருப்பியவன் எதிரே வந்த பொலீஸ் ஜீப்பைக் கண்டும் கூட வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறியதில் கார் ஜீப்புடன் மோதி பக்க வாட்டில் சரிந்தது.

தெய்வாதீனமாக யாருக்கும் பலத்த காயங்கள் இல்லை. சிறு சிறு சிராய்ப்புக்களுடன் தப்பினாலும் பொலீஸ்காரரின் ஏச்சுக்களில் இருந்து தப்ப முடியவில்லை.

எப்படியோ காரை பொலீஸ்நிலையத்தில் ஒப்படைத்து விட்டு காயங்களுக்கு சிகிச்சைப் பெற்றுக் கொண்டு ஊருக்குத் திரும்பினர்.

ராசாத்திக்கு “தான் அவசரமாகப் புறப்பட்டிருக்கக்கூடாதோ” என்று இப்போதான் தோன்றியது.

ஒரு சில நாட்களில் பொலீஸிலிருந்து கடிதம் வந்தது. பிரித்துப் படித்தபடி ரகு தாயிடம் வந்தான். “அம்மா பொலீஸிலிருந்து கடுதாசி வந்திருக்கு. அன்று வேகமாக கார் ஓட்டியதுக்கும் பொலீஸ் ஜீப்புக்கு சேதம் விளைவிச்சதுக்கும் சேத்து வழக்குத் தாக்கல் பண்ணியிருக்கினமாம். வாற பத்தாந் திகதி வழக்காம். அப்பிடி வழக்குப் பேசமுடியாட்டா அபராத தொகையை செலுத்தினால் விட்டுவிடுவினமாம்.”ராசாத்தி

இடைமறித்து சொன்னாள். "அபராத தொகையைக் கட்டுவம் தம்பி. உந்த வழக்குக்கெல்லாம் யார் அலையிறது? எவ்வளவு அபராதம் கட்டோணுமாம்?"

தாயை நிமிர்ந்துப் பார்த்த ரகு, பார்வையைத் தீர்க்கமாக்கிக் கொண்டு சொன்னான். "ரெண்டு லட்சமாம்"!

**தினகரன்**

# சாஸ்த்திரம் மீறிய கீர்த்தனம்

**அ**ந்த மேட்டு லயத்தின் கடைசிக் காம்பரா அவளுடையது. முன்னே இருட்டு கட்டியம் கூற, முன் காம்பராவில் முக்கிய பிரதிநிதியாய் வீற்றிருந்தது அந்த நைந்து போன கொழுந்துக்கூடை.

அவர்களைப் போலவே உழைத்து உழைத்து ஒடாய் தேய்ந்துப் போன கொழுந்துக் கூடை அத்தனை லயங்களிலும் காட்சியறையில் நிச்சயமாய் வீற்றிருக்கும் அலங்கார பொருளல்லவா அது? ஒரு வகையில் சொல்லப் போனால் அந்தக் கூடைத்தானே அந்த ஜீவன்களுக்கு சோறு போடும் குல தெய்வம்.

வீட்டில் அம்மா, அக்கா இருவரும் கொழுந்து எழுக்க சென்று விட, அம்மா எங்கேயோ கெஞ்சி, கடன் வாங்கி வைத்திருந்த ஐம்பது ரூபாவையும் 'கிளப்பி' கொண்டு அப்பா கள்ளுக்கடைப் பக்கம் நடைபோட, குடும்ப பொறுப்பினை சுமப்பது என் பொறுப்பல்ல என்ற குறிக்கோளுடன் ஊர்ச் சுற்றுவதையே தனது கடமையாக்கி வாழ்ந்து கொண்டிருக்கிற அண்ணன் பாலு, பக்கத்துக் காம்பரா நண்பனான கதிரேசுவுடன் அந்த மேட்டுக்கரையில் அமர்ந்திருக்க, இங்கே இவள் மட்டும் தனியே மோட்டு வளையைப் பார்த்தபடி தன் திட்டங்களை அசைப் போட்டுக் கொண்டிருக்கிறாள்.

அறிவு விடியல்களின் ஸ்பரிசமே உணராத இந்த ஜீவன்களின் மத்தியில் செல்வி வித்தியாசமானவள்தான்.

அந்த தோட்டப்புறத்தில் இருந்து பள்ளிச் செல்ல பஸ்ஸ/க்காக காத்திருந்து களைத்துப் போய் கால்நடையாகவே பள்ளி சென்று கல்வி கற்கின்ற ஒரு சில மாணவர்களில் இந்த செல்வியும் ஒருத்தி. பள்ளிப் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்தி திறமையாகப் படித்து வந்த செல்விக்கு புற யதார்த்தங்களில் மனம் செல்வது கிடையாது. எதிர்காலத்திற்கு என பிரத்தியேக லட்சியங்கள் கிடையாது. எதையாவது சாதித்துவிட வேண்டும் என்ற துடிப்புக் கிடையாது. ஆனால் அன்றைய தினம் பாடசாலையில் நடந்த கருத்தரங்கில் ஒரு மாணவன் ஆற்றிய உரை மனசில் பாதிப்பை ஏற்படுத்த, அறிவுச் சாவி கொண்டு அவள் மனம் திறந்துக் கொண்டது.

"முடிந்துபோன சமுதாயத்தை மீளக் கட்டி எழுப்புவதோ, புனரமைப்பதோ நம்மால் இயலாத காரியம். அதில் முனைந்து நின்று செயற்பட்டு வெற்றி பெறும் நோக்கத்தை விட வளர்ந்துக் கொண்டிருக்கும், வளரப்போகும் புத்தம்புது சமுதாயப் பக்கமாக நமது பார்வையை திருப்பினால் என்ன? அந்த புதிய ஜீவன்களின் மனதில் ஏற்கனவே சமுதாயத்தில் புரையோடிப் போன தாழ்வு மனப்பான்மையோ அன்றேல் அடிமைத்தள வேரோ ஊன்றப்பட முன்னர் நாம் புதிய அறிவு விதைகளை தூவி விட்டால் என்ன? வளரப் போகின்ற புதிய விளைச்சலில் எங்கே துன்ப கிளைகள் தோன்றுவது? பேதமையை நீக்கிவிட்டால் உருவாகின்ற சமுதாயம் தலை நிமிர்ந்து நிற்காமலா போய்விடும்? இது யாரால் சாத்தியப்படும் என்கிறீர்களா மாணவர்களே, உங்களால் தான்! உங்களைத்தவிர வேறு யாராலும் இதை திறம்படச் சாதித்திடவே முடியாது. நீங்கள் படிப்பது அறிவுக்காக மட்டும் அல்ல நண்பர்களே. முன்னேறத் துடிக்கின்ற உயிர்களை புதுப்பாதையில் வழிகாட்டி ஒரு விடியலை அவர்களுக்காய் பிரகடனப்படுத்தவும் தான் உங்கள் கல்வி பயன்பட வேண்டும்.."

மாணவன் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டே போக, செல்வி மனத்துள் இவ்வளவு காலமும் உறங்கிக் கொண்டிருந்த ஏதோ ஒரு உணர்வு சோம்பல் முறித்து எழுந்து வியாபித்தது. தான் இத்தனைக் காலம் வாழ்ந்த வாழ்வு அர்த்தமற்றது என்பதை உணர்ந்தாள் செல்வி. எதையாவது செய்தே ஆக வேண்டும் என்ற உணர்வு கிளர்ந்தெழுந்து பரவியது. பாடசாலை விட்டு வந்தவள் எப்படி, எங்கே, எதைச் செய்வது யாரிடம் போய்ச் சொல்வது எனத் தடுமாறினாள்.

வீண் பொழுதுபோக்கி இருந்த அண்ணன் பாலுவிடமும் கதிரேசுவிடமும் ஓடினாள். “அண்ணே அண்ணே இன்னிக்கி ஸ்கோல்ல..” தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனவள்,“அண்ணே நாமளும் ஏதாவது செய்தாகணும், நம்ம தோட்டத்து ஆட்கள் முன்னேத்தணும் அண்ணே” என்று மூச்சிறைக்கச் சொல்லி முடித்தாள்.

இவள் சொல்லியவற்றை காலையாட்டியபடியே அசுவாரசியமாய் கேட்டுக் கொண்டிருந்தனர் இருவரும். செல்வி கூறி முடிக்கவும் பாலு சொன்னான். “டேய், கேட்டியா என் தங்கச்சி கதைய? இந்த பொட்டக் கழுதைய ஸ்கோல்லுக்கு அனுப்பினதுதான் தப்பாய் போச்சு, பாத்தியா? மொளச்சு மூணு எல விடல அதுக்குள்ள முன்னேத்தணுமாம். அதுவும் தோட்டத்து ஆட்கள. ஏய்! ஸ்கோலுக்கு போறது படிக்கத்தான். முன்னேத்த இல்ல. இவுக, இந்தப் பொட்டச்சி முன்னேத்த போறாக.” கேலியாய் கூறி முடித்த இருவரும் ‘ஹோ’ என்று சிரிக்க ஆரம்பித்தார்கள். வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள். பொறுக்கமாட்டாமல் அடிபட்ட நாகமாய் சீறினாள் செல்வி. “அத்தனை எலக்காரமாப் போய்ச்சா ஒங்களுக்கு? இருந்து பாருங்கண்ணே. கதிரேசண்ணே! நீங்களும் பார்க்கத்தானே போறீங்க? ஆம்பளையா,

லட்சணமா எதையும் சம்பாதிக்கத் தெரியாம ஊர் சுத்திக்கிட்டு இருக்கிற நீங்க ரெண்டு பேரும் சிரிச்ச சிரிப்பையும் பண்ணுன கேலியையும் நான் திருப்பி செய்யிற காலம் வரத்தான் போகுது". செல்வி கூற,

"டேய் டேய் சாபம் கொடுக்கிறாடா சாபம். சாதிக்கப் போறாளாம். ரொம்ப நல்ல ஜோக்குடா." அவர்கள் மீண்டும் சிரிக்க ஆரம்பிக்க கோபமாக வீடு வந்து தனியாளாய் அமர்ந்து என்ன செய்வது என ஆழமாகச் சிந்தித்தாள் செல்வி. யாராவது துணைக்கு இருந்தால் திட்டங்களை தீட்டுவது எளிது எனப் புரிந்தபோது சட்டென்று அவள் மனசில் தியாகு வந்தான். நிச்சயம் அவன் தனக்கு உதவுவான் என்ற எண்ணமே அன்றைய இரவில் படுக்கையானது செல்விக்கு.

தியாகு அவளுடன் கூடப் படிப்பவன். முற்போக்கான எண்ணம் கொண்டவன். நீதிக்காய் கதைப்பவன். அன்றைய இடைவேளையின் போது, தியாகுவிடம் இவள் விடயத்தைக் கூற அவனும் அவளுக்குச் சார்பாக கதைக்க செல்வியின் மனம் மகிழ்ச்சியில் திளைத்தது. மேலும் இதைப் பற்றி இருவரும் கதைத்துக் கொண்டிருந்த போதுதான் செல்வி தன் அண்ணனின் உதாசீனத்தைக் குறிப்பிட்டு கவலைப் பட்டாள். சிந்தனை வயப்பட்ட தியாகு சொன்னான்."ஆமா செல்வி மாணவர் என்ற போர்வையோட நாம சாதிக்க நெனைக்கிறதப் பத்தி கதைச்சாக் கூட அது நகைப்புக்கிடமாகத் தான் இருக்கும். நாம நம்மள மொதல்ல ஒரு நெரந்தரமான நிலைக்கு கொண்டு வரணும். அப்பத்தான் நம்ம சொல்லுக்கு மதிப்பு இருக்கும். உதாரணத்துக்குச் சொல்லப் போனால் இப்ப நாம ஆசிரியராய் இருந்தால் இளம் பிராயத்தினரை அறிவுப் பக்கம் திருப்புறதும் அதன் மூலமா அவர்களுடைய பேதமையை இல்லாமலாக்கி அவங்களை உயர வழி வகுக்கிறதும் எத்தனை லேசாய்

இருக்கும் தெரியுமா? அதோட இப்ப சிரிக்கிறவங்க கூட நம்ம தொழிலுக்கு மதிப்பு தருவாங்க இல்லியா?”

அவன் கூறக்கூற அதில் தெரிந்த நிஜங்கள் வெட்ட வெளிச்சமாய் செல்வியின் மனசுக்குள் திரையிட்டன. “ஆமா தியாகு முதல்ல நாம நல்லா படிச்சு பரீட்சையில பாசாகணும். அப்புறம் நமக்குன்னு தொழில் கிடைக்காமலா போகும்? ஒரு தொழில் மட்டும் அதுவும் ஆசிரியர் தொழில் கிடைச்சுட்டா இந்த சமுதாயத்தை தட்டி எழுப்பிறது கஷ்டமில்ல” என்றாள் செல்வி.

அவர்களது நல்ல மனசுக்கேற்பவோ என்னவோ, அவர்களது உழைப்பை, தியாக உணர்வை ஆசிர்வதிக்கும் முகமாக இருவரும் பரீட்சையில் திறமையாய்ச் சித்திப் பெற்றனர். செல்வியின் மனதில் மகிழ்ச்சி வெள்ளம் பெருகியது. ஆசிரியர் தொழிலுக்கென விண்ணப்பித்துவிட்டு நிச்சயமாகக் கிடைக்குமென்ற நம்பிக்கையின் துணையுடன் தியாகுவிடம் தன் திட்டத்தை கூறியபோது தான் அவனது உற்சாகமின்மை தெரிந்தது செல்விக்கு. “நம்ம ஊர் பள்ளிக்கூடத்திலேயே நம்மளுக்கு ஆசிரியர் வேலை போட்டு கொடுத்தா ரொம்ப நல்லதில்லையா தியாகு. நா நம்ம பாடசாலையிலேயே ஆசிரியரா வரத்தான் ஆசைப்படுறேன். அப்பத்தான் நம்ம பிள்ளைகளை முன்னேத்த லேசாய் இருக்கும்.” செல்வி சொல்லத் தியாகு தன் நகங்களை உன்னிப்பாய்ப் பார்த்தபடி சிந்தனை வயப்பட்டிருந்தான். “என்ன தியாகு?” என்றவளை நோக்கி “ஒண்ணுமில்லை. நா வாறேன் செல்வி” என்றபடி நகர்ந்தான் அவன். செல்விக்கு ஆச்சரியமாய் இருந்தது. ‘என்ன நடந்தது தியாகுவுக்கு.’ என யோசித்தாள்.

அன்று நேர்முகத்தேர்வு. செல்விக்கு முன்பாக தியாகுச் செல்ல வெளியே காத்திருந்த செல்விக்கு உள்ளே நடந்த உரையாடல் தெள்ளெனக் காதில் விழுந்தது.

"மிஸ்டர் தியாகு உங்க திறமைகளை அறிஞ்சதில ரொம்ப சந்தோஷம். அதுக்கு பரிசா, உங்க ஊர்ப் பாடசாலையிலேயே உங்களுக்கு நியமனம் தர எண்ணியுள்ளோம். உங்க திறமைகளை எல்லாம் வெளிக்கொணர்ந்து உங்க ஊர் பிள்ளைகளை முன்னுக்கு கொண்டு வருவது இனி உங்களோட கடமை. என்ன மிஸ்டர் தியாகு சம்மதம்தானே?" என்ற அந்த அலுவலரின் வினாவுக்கு தியாகு கூறிய வார்த்தைகள் செல்வியின் காதில் ஈயத்தை உருக்கி வார்த்தது.

"உங்க நல்ல மனசுக்கு ரொம்ப நன்றிங்க. ஆனால் நம்ப ஊரிலேயே ஆசிரியரா வேலை செய்தா மாணவர் மத்தியில் மதிப்போ, மரியாதையோ, பயமோ இருக்காது சார். அதோடு இவ்வளவு காலமும் இந்த இருட்டுக்குள்ளேயே, வாழ்ந்திட்டோம். இனியாவது நாம வெளி உலகத்தைப் பார்க்க வேணாமா? நாம நம்மள முன்னேத்திக்க வேணாமா. இந்த சமுதாயத்தை முன்னேத்துறது என்பது என் ஒருத்தனால ஆகிற காரியமா சார்? அதனால....

அவன் சொல்லிக்கொண்டே போக செல்வி நிலைகுலைந்து போனாள். முற்போக்கான எண்ணம் கொண்டவன். நீதிக்காய் போராடுபவன். தன் சமூகத்தின் மீது ஆழ்ந்த பற்றுடையவன் என்றெல்லாம் அவனைப் பற்றி எண்ணியிருந்த எண்ணமெல்லாம் கரைந்து போக அவள் மனசில் உயரமாய் கோபுரம் மீது உட்கார்ந்து இருந்த தியாகு ஒரேயடியாய்ச் சரிந்து தலைகீழாய் விழலானான். 'இவ்வளவுதானா? பின்தங்கிய ஊரில் பிறந்து வளர்ந்து தியாகு கூடவா தன் சமுதாயத்தைத் தானே குழி தோண்டிப் புதைக்கப் பார்க்கிறான்? கொஞ்சமாய் உயரும் முன் தான், தன் வாழ்க்கை என வட்டம் போட்டு வாழக் கற்றுக் கொண்டானா? தன் சமுதாயத்தை முன்னேற்ற வழிகாட்டியாய் இருக்க

முடியாத இந்த ஜடமனிதன் எங்கு போனால் என்ன, எந்தக் குப்பை கொட்டினால் என்ன? எல்லாம் ஒன்றுதான். இவனால் அறிவை ஸ்பரிசிக்கச் செய்யும் வித்தையை.... விந்தையைச் சமுதாயத்துக்கு எடுத்துக்காட்டத்தான் தெரியுமா? தன் உயர்வாம், தன் முன்னேற்றமாம். ம்ஹூம். எது முன்னேற்றம்? தன் மக்கள் புழுதியில் கிடந்து புழுங்கி வாழ்வதை மரண களமாக்கி வாழ்வதை கால் மேல் கால் போட்டு பார்த்திருக்கப் போவது தான் தனது முன்னேற்றம் என்றால், இந்தக் கேவலமான மனுஷ ஜென்மம் இந்த ஊரில் இருக்கவே தேவையில்லை. இவன் ஒருத்தனால் சமுதாயத்தை முன்னேத்த முடியாமல் இருக்கலாம். ஆனால் என்னால் முடியும். ஆமா என்னால முடிஞ்ச வரையில், நான் இவங்களுக்காக உழைக்கத்தான் போறேன்.'

அலையலையாகப் புரண்டு வந்த கோபக் கடல்களை மௌனித்து விழுங்கிக் கொண்டு வீட்டை அடைந்தாள் செல்வி. மனக் குமுறல்களுக்கு வடிகால் அமைத்து மனசுக்குள்ளேயே புழுங்கி அழுது அடக்கினாள். ஆனாலும் தியாகுவின் இழிசெயல் மனதுக்குள் பலவீனத்தை ஏற்படுத்தி விடாமல் வீரியத்தையையும், வலிமையையும் உணர்த்தியது.

வீடு வந்து, அம்மாவிடமும் அப்பாவிடமும் அக்கா அண்ணாவிடமும் தன் ஆசிரிய நியமனத்தையும் தன் பின்தங்கிய கிராமத்துப் பாடசாலையிலேயே படிப்பிக்கப் போவதாகக் குதூகலத்தோடு கூறி முடித்தபோது அவளுக்கே ஆச்சரியமாய் இருந்தது. 'அடடா எல்லோரும் மதிப்பா பாக்குறாங்களே' என்று சிரிப்பாய் வந்தது.

அடடே, குடிகார அப்பா மனசுலே கூட கர்வம் வந்திட்டுதோ? அம்மா ஓ! பெருமிதம் தாய்மையோட கலந்த

அற்புத கலவை, அவளது சந்தோஷச் சிரிப்பில். அண்ணாகூட ஆச்சரியப் பார்வையில் மதிப்பைத் தேக்கிப் பார்க்கிறானே. அருகில் வந்த அக்கா "ரொம்ப சந்தோஷமாய் இருக்கு கேட்க. இனிமே நம்ம மனுஷன்களுக்கு வெளிச்சம் தர வேண்டியது உன் பொறுப்புத்தான் செல்வி" என்ற போது அந்தக் குரலில் தெரிந்த பாசம்,நேசம், பெருமிதம், ஆசை எல்லாம் புலப்படச் செல்வி நெகிழ்ந்து போனாள்.

அடுத்த நாள் காலை விடியலில் எழுந்தபோது, எப்போதும் காலையில் கள்ளுக்கடைக்கு வணக்கம் சொல்லுப்போகும் அப்பா இன்று வீட்டுத் திண்ணையில் வானம் பார்த்து அமர்ந்திருப்பதைக் கண்ட ஆச்சரியத்தில் நேரே அம்மாவிடம் போனாள். "ஏம்மா, அப்பா காலங்காத்தாலே கிளம்பிடுவாரே, இன்னிக்கி இது ஏது அதிசயமாய் இருக்கு?" என்றபோது நமட்டுச் சிரிப்புடன் சொன்னாள் அம்மா,

"வேறு ஒன்றும் இல்லை. நீ முதல்ல ஸ்கோலுக்கு போறப்போ தானும் நிக்கணுமாம். அது சரி ஒன் அண்ணே எங்கேன்னு கேட்டியா? பத்து மணி மட்டும் போர்வைக்குள்ள பூந்து கிடப்பானே. இன்னிக்கு காலையிலேயே எழுப்பி கடைக்கு போயிக்கான். நீ எப்படி தனியா ரொட்டி கொண்டு போறதுன்னு பழம் வாங்கப் போயிருக்கான்" என்ற போது செல்வி சந்தோஷ சாகரத்தில் மூழ்கி திளைத்தாள். 'அண்ணன் கூடவா ஒரேநாளில் மாறிப் போனான். அப்படியானால் இந்தச் சமூகம் மாற ரொம்ப காலம் எடுக்காது போலிருக்காதே' என எண்ணிக் கொண்டான்.

பாடசாலை செல்லத் தயாராகி வெளியே வந்தபோது அம்மாவும் அக்காவும் தலையில் கூடை சுமந்து புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். "அம்மா கொஞ்சம் இருங்கம்மா. நானும்

கூடவே வாரேன்” என்றவள் அம்மாவை இழுத்துச் சென்று அப்பா அருகில் நிறுத்தி இருவரையும் விழுந்து வணங்கினாள்.

அம்மா கண்கலங்கிப் போனாள். “நீ என்னோட மகள்னு சொல்றத விட்டுட்டு இந்த ஊர், என்னய செல்வியோட அம்மான்னு சொல்லணும்மா. அதுதான் என் ஆசை” என்றாள்.

அப்பா தன் சட்டைப் பையைக் குடைந்து இருந்த சில்லறைகளை கொட்டிச் செல்வியின் கையில் கொடுத்தார். “இது.. இது ஏதுப்பா உங்களுக்கு” என்ற செல்வியின் கேள்விக்குத் தயங்கியபடி “அது அது நேத்தைக்கு கடன் வாங்கி கள்ளுக்கடைக்குப் போனதில மிச்சம்மா. இனிமே நான் சத்தியமா, சத்தியமா குடிக்கமாட்டேன் தாயி. செல்வியோட அப்பாவே குடிச்சா அப்புறம் உன்னை யாருமே மதிக்கமாட்டாங்களே. அதனால இனி நான் குடிக்கமாட்டே மக” என்றார்.

செல்விக்கு என்ன சொல்வதென்றே தெரியலை. “அம்மா அண்ணன் எங்கம்மா?” எனக் கேட்கமுன் மூச்சு வாங்க ஓடி வந்த களைப்புத் தெரிய அவள் முன் வந்தான் பாலு.

“ஹப்பா நல்லவேளை, நீ போயிருப்பியோன்னு தான் ஓடி வந்தேன். எனக்காகத்தான் பாத்திட்டு இருந்தியா தங்கச்சி? படிப்பிச்சிட்டு எப்படித் தனியா ரொட்டிய சாப்பிடுறதாம். அதுதான் பழம் வாங்கியாந்தேன்” என பாசத்தோட கூறி தலையை தடவிவிட்ட அண்ணனை கட்டிக்கொண்டு ‘ஓ’ வென அழுதாள் செல்வி.

“ஏம்மா அழுற? இந்த அண்ணே முந்த ஒன்ன கேலி பண்ணினதை நெனச்சிட்டியா” என அவளை ஆசுவாசப்படுத்த அண்ணனை பார்த்துச் சொன்னாள் செல்வி,“இல்லண்ணே, இது ஆனந்தக் கண்ணீர்.”

அந்த ஒற்றையடிப் பாதையில் செல்வி புத்தகக் கட்டு சுமந்து முன்னே செல்ல, கொழுந்துக் கூடைகளுடன் அம்மாவும் அக்காவும் பின்னால் சென்றனர். ஒற்றைத்தட வழியின் முடிவில் பாடசாலைக்குச் செல்லும் பாதை பிரிய அக்காவின் கையைப் பிடித்து அழுத்தி அம்மாவிடமும் விடைபெற்று செல்வி பாடசாலை நோக்கி நடந்தாள்.

தான் கொண்ட பாதையில், பாரதி கண்ட புதுமை மாதாக, நேர் கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையுமாக நடக்கிறாளே இந்தப் பெண், இவளால் நிச்சயம் ஒரு சமுதாயம் முன்னேற்றம் காணத்தான் போகிறது. பழமையும் துன்பமும் நிறைந்த சமுதாயத்தில் தோன்றிய இந்த செல்வி, சாஸ்த்திரம் மீறிய கீர்த்தனம்தான்.

பழகிப்போன சாஸ்த்திர சம்பிரதாய வாழ்விலிருந்து சாஸ்த்திரம் மீறி இசைக்கப்படுகின்ற அறிவுக் கீர்த்தனம் அருமையானதும்தான்.

விரைந்து நழுவிய வருடங்களின் விளைவாய் அந்தக் கிராமத்து மாணவர்கள் செல்வியால் முன்னேறினார்கள். அவர்களின் கல்வியில் பெற்றோரும் அக்கறை கொள்ள ஆரம்பிக்கவே, மெல்லமெல்ல அவர்களுக்கான விடியல் விழிப்புணர்ச்சியுடன் புலரத் தொடங்கியது. இவள் தனித்து செயற்பட்டு உருவாக்கிய சமுதாயம முன்னேறி தமக்கென ஒரு பாதையை சமைத்துக் கொண்டு பறந்து சென்றது. செல்வி இன்னமும் தனியாய் ஒரு சமுதாய முன்னேற்றத்துக்காய் குரல் தந்து களைத்துப் போனாள். அதோ! பாடசாலையில் கூச்சலிடும் மாணவப்பட்டாளத்துக்கிடையில் ஒலிக்கிறது அவள் உச்சக் குரல்.

“அடே சனியன்களே உங்களுக்காக நா ஒருத்தி ஓடா தேஞ்சு போக இன்னமுமா கூச்சல் போடுறீங்க. உங்க

சமுதாயத்தை உயர்த்தி விட்டு இருட்டுக்கு நா மட்டும் பலியாகி கிடக்கிறேனே. உங்களுக்கு படிப்பிச்சி நா கண்ட பயன் என்ன. நீங்க எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்ல, நல்ல கூச்சல் போடுங்க. என்னால விழிச்சு பறந்து போன சமுதாயம் திரும்பி வரமட்டும். நல்ல உரக்க உரக்க கூச்சல் போடுங்க."

ஆம், இதுவும் கூட சாஸ்த்திரம் மீறிய கீர்த்தனம் தான். தனியாளாய் பாடுபட்டு தனக்கென வாழாது, தன் சமுதாயத்தை உயர்த்தி இப்போது உற்சாகமும் ஒத்துழைப்பும் தருவதற்குத்தானும் உதவியில்லா சோகத்தில் செல்வி பாடுகின்ற இந்த வசவுப் பாட்டும் கூட சாஸ்த்திரம் மீறிய கீர்த்தனம்தானே.

**(உழைகக்ப் பிறந்தவர்கள்-1992)**

# ஸ்டிரைக்

**ப**னியையும் குளிரையும் ஊடறுத்துக் கொண்டு செல்கின்ற அந்த பஸ் மலைநாட்டின் வளைவுகளை மிகுந்த சிரமத்தோடு கடந்து கொண்டிருந்தது. இனிமேல் திணிப்பதற்கு இடமேயில்லை என்றபோதும் ஒவ்வொரு நிறுத்தத்திலும் பஸ் நிற்காமலுமில்லை, ஆட்கள் ஏறாமலுமில்லை. உள்ளே இருக்கையில் அமர்ந்திருப்போர் கதி நின்று கொண்டு பயணிப்பர்களின் அவஸ்தையை விட கஷ்டமானது. தலைவரை நிறைந்துவிட்ட புத்தகப்பைகளையும், கைப்பைகளையும், குடைகளையும் எந்தக் கையால் பிடிப்பது என்று தடுமாறிக் கொண்டு, பாதை வளைவுகளில் பஸ் திரும்புகையில் மடியிலுள்ள சுமைகளைப் பிடிப்பதா நாம் விழாமல் காத்துக் கொள்வதா என புரியாமல்....

பஸ்ஸின் பின் இருக்கையில் அமர்ந்து இந்த அவஸ்தைகளை அனுபவித்துக் கொண்டிருந்த பைரவியின் தற்போதைய பிரச்சினை தான் இறங்கவேண்டிய நிறுத்தத்தில் எப்படி இறங்குவது என்பதுதான். இறங்கவேண்டிய நிறுத்தத்திற்கு ஒரு மைலுக்கு முன்னமே தவிக்கத் தொடங்கியவள், எப்படி இந்த வியூகத்தை ஊடறுத்துச் செல்வேன்? அதற்குள் நான் இறங்கவேண்டிய இடம் கடந்தவிடுமே! என எண்ணியவளாய் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த சுமைகளையெல்லாம் அவசரஅவசரமாக இறக்கி வைத்து விட்டு அந்த நெரிசலின் திட்டுக்களை சுமந்தபடி இறங்கினாள். இறங்கிய பின்தான் தான் இறங்கவேண்டிய நிறுத்தத்திற்கு முன்னைய நிறுத்தத்தில்

நிற்பது புரியவே இனம்புரியாத சோர்வேற்பட்டது. கண் முன்னால் தெரிந்த பாதையின் ஏற்றம்வேறு பயமுறுத்தியது. எப்படியும் இந்த தூரத்தை நடந்தே கடந்தாக வேண்டிய நிர்ப்பந்தத்துடன் இயலாமையும் ஒன்றுசேர நடக்கத் தொடங்கியவள், சற்று நிதானித்து தன்னைப் பார்த்துக் கொண்டாள். கசங்கிய சேலையும் கலைந்த கூந்தலும்…காலையில் கஷ்டப்பட்டு கட்டிய அந்த புடைவையின் கோலம் மனதில் எரிச்சலை ஏற்படுத்தியது. துன் மீதான கழிவிரக்கத்துடன் நடக்கத் தொடங்கியவளை பின்னாலிருந்து வந்த பல குரல்கள் திரும்பிப் பார்க்க வைத்தன.

“குட்மோர்னிங் டீச்சர்!”

“குட்மோர்னிங்!.. அட நீங்கள்ளாம் இங்கயிருந்துதான் வாறீங்களா?” என்ற பைரவியைப் பார்த்து “ஆமா டீச்சர்! நம்ம லயம் கீபெரட்டுலதானே இருக்கு. அங்கயிருந்து ஸ்கோலுக்கு பஸ்ஸ் கெடயாது. நாமல்லாம் நடந்துதா வருவோம் டீச்சர்” என்றான் ஒரு பையன். “அப்ப ஒங்க லயம் கிட்டத்துலதா இருக்கா?” என்றாள் பைரவி. “இல்ல டீச்சர். தோ…பாருங்க தெரியுது. அதா நம்ம லயம்” அவன் காட்டிய திக்கில் லயக் காம்பராக்கள் பைரவியின் கண்களுக்கு சிறு பொட்டாய் தெரிந்தன. “இவ்..வளோ தூரத்திலயிருந்து நடந்தா வாறீங்க..?” ஆச்சரியமாய் கேட்டாள் பைரவி. “ம்… அப்புறம…” என்ற பதிலைக் கேட்டு சட்டென திரும்பிப்பார்த்தாள். “அதுதானே பாத்தேன்! இப்புடி பேசுறவன் நீயாத்தான் இருக்கமுடியும். நீயும் இங்கயிருந்துதா வாறியா ராசு..?” சிரித்தபடி தலையாட்டிய அந்த பத்த வயது சிறுவன் முகத்தில் சிறுபிள்ளைத்தனமான அழகு இருந்தது. அவன் சிரிக்கும்போது தெரிகின்ற அந்த தெத்துப்பல்லின் வசீகரிப்பில் எப்போதுமே பைரவிக்கு ஒரு பிரியம் உண்டு. பைரவியின் வகுப்பில் கற்கின்ற ராசுவின் முகத்தில் மாத்திரமல்ல பேச்சிலும் சிறுபிள்ளைத்தனம்

தாராளமாகவே இருந்தது. அவனிடம் கேள்வி கேட்பது டீச்சராயிருக்கட்டும், அதிபராயிருக்கட்டும், ஏன் கல்வி அதிகார்களாயிருக்கட்டும் “ஆமாம்” என பதில் சொல்ல வேண்டியதற்குப் பதிலாக “ம் அப்பறம்” என ஒரு எகத்தாளமான பதில் அவனிடத்திலிருந்து வரும். “ராசு காலையில சாப்பிட்டியா?” “ம்..அப்புறம....”“வீட்டு வேலையை முடிச்சிட்டியா ராசு?” “ம்.. அப்புறம்.” “இன்னிக்கு பூமரங்களுக்கு தண்ணி ஊத்துறது ராசுவோட பொறுப்புத்தானே?” “ம்..அப்புறம்..” அவனுடைய பதிலில் தொனிக்கிற குழந்தைத்தனமும் பேச்சில் தெரிகின்ற மழலைத்தனமும் அவனை அதட்டவோ அடிக்கவோ முடியாதபடி செய்துவிடும்.

இந்த பாடசாலையில் கடந்த மூன்று வருடங்களாகக் கடமை புரிகின்ற பைரவிக்கு போக்குவரத்து வசதி குறைந்த பின்தங்கிய பிரதேசபாடசாலையை ரொம்ப பிடித்துக் கொண்டது. இங்கள்ள சிறார்களின் அன்பு மதிப்பு கள்ளமற்ற வெள்ளை உள்ளம் எல்லாவற்றுக்கும் மேலாக வெகுளித்தனமிக்க அந்த சிறுவர் மீதான அன்பும் அவர்கள் இவள் மேல் செலுத்துகின்ற அபரிமிதமான அன்பும் பைரவியை இப்பாடசாலையிலேயே கட்டிப்போட்டு விட்டது.

ஐந்தாம் தரத்திற்கு ஆசிரியையான பைரவி அந்த வகுப்பு மாணாக்கர் மீது அதீத கவனம் செலுத்தி விசேட வகுப்புக்களை நடாத்த தொடங்கிய பின்தான் அவர்களோடு கூடுதலாக பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. பாடசாலை விட்டதும் அவர்களை சாப்பிடச் சொல்லுவாள் பைரவி. சிலர் அருகிலிருக்கிற லயங்களுக்குச் சென்று சாப்பிட்டு விட்டு வருவர். தூர இருந்துவருகின்ற சாப்பாட்டைக் கட்டி எடுத்துக் கொண்டு வருவர். என்ன சாப்பாடு என்றால் சோறு கறி இத்யாதிகளோடு இருக்கப்போகிறதா? வழமையான ரொட்டி தான்! “ஏண்டா.. எந்தநாளும்

ரொட்டியையே சாப்பிடுறீங்களே? ரொட்டின்னா.. அவ்வளவு விருப்பமா?" என்றால் "பிடிக்குதோ பிடிக்கலையோ ஆச்சி இதத்தான் சுட்டு வச்சிருக்கும்" என்பார்கள்.

ஒருநாள் இப்படித்தான். மாணவர்களை சாப்பிட அனுப்பிவிட்டு தானும் கைகழுவ வெளியே வந்த பைரவி ஜேம் மரத்தில் பழம் பறிக்கத் தயாராகிக் கொண்டிருந்த ராசுவைக் கண்டாள். "ராசு! இன்னும் சாப்பிடபோகாம என்ன செய்யிற? சுருக்குன்னு சாப்பிட்டு வா!" என்றாள். மரத்தை அண்ணாந்து பார்த்தபடியே ராசுவிடமிருந்த பதில் வந்தது. "சாப்பாடு கொண்டாறல டீச்சர்" "ஏன் இண்டர்வலுக்கே எல்லா சாப்பாட்டையும் சாப்பிட்டியா?" "இல்ல டீச்சர் நா இன்னிக்கு சாப்பாடே கொண்டாறல." பாவமாய் போனது பைரவிக்கு. அவனருகில் சென்று தோளில் கை வைத்து "ஏண்டா சாப்பாடு கொண்டாறல?" என ஆதுரத்தோடு கேட்டவள் அவன் முகத்தைப் பார்த்து திகைத்துப் போனாள். பசியால் வாடியிருந்த அந்த முகத்தில் ஏராளமான உணர்வலைகள் நிரம்பியிருந்தது. ஏதோ புலப்பட "சரி..சரி..வா! நானும் நீயும் இன்னிக்கு சேர்ந்தே சாப்பிடலாம்" என்றாள் வர மறுத்தவனை வலுக்கட்டாயமாய் இழுத்துவந்து அமர வைத்தாள். அவள் கொடுத்த இடியப்பத்தை கண்களில் நீர் நிறைய வாயில் திணித்துக் கொண்டான் ராசு. பாவம்! பசியை மறைக்கத் தெரியாத பச்சைமண்ணல்லவா இவன்? என எண்ணியபடி எந்த கேள்வியும் கேட்காமல் அவனை உண்ண வைத்து விட்டு வகுப்பை நடாத்த ஆரம்பித்தாள் பைரவி.

அடுத்த நாள் பாடசாலைக்கு வந்ததிலிருந்துபைரவியின் காலையே சுற்றி சுற்றி வந்தான் ராசு. பொறுத்துப் பொறுத்து பார்த்த பைரவி தாளாமல் கேட்டாள். "என்ன ராசு! ஏதாவது வேணுமா?" தயங்கியபடி பேசினான் ராசு. "இல்ல டீச்சர்..

நேத்திக்கு ஓங்க சாப்பாட்ட நா சாப்புட்டுட்டனா? ஓங்களுக்கு பசிச்சிருக்குமேன்னு குமாரு சொல்லுறான். ஏன் டீச்சரு… நேத்து ரொம்ப பசிச்சுச்சா?” “இல்லியேடா நானும் ஓங்கூட சாப்பிட்டனே”

“ஆமா இத்துணூன்டு சாப்பிட்டீங்க. நாந்தான் எல்லாத்தயும் முழுங்கிப்புட்டனே..” சிரித்தபடி பைரவி “நா ஒண்ணும் இத்துணூன்டு சாப்பிடல.. அதுசரி நேத்து ஓம்பசி போயிருச்சா?” என்றாள். “ம்..அப்புறம்.. அதான் வயிறு ரொம்ப சாப்டனே” என முகமலர்வோடு கூறி அவன் சிரித்தவிதம் வயிறு நிரம்பிய உணர்வை பைரவிக்கு ஏற்படுத்தியது.

“அதுசரி இப்ப சொல்லு நேத்திக்கு ஏன் சாப்பாடு கொண்டாறல?”

“இருந்தாத்தானே கொண்டாறதுக்கு” எகத்தாளமான பதில்.

“முந்தியெல்லாம் கொண்டு வருவதானே?”

“முந்தி அம்மா வீட்டுல இருந்தாங்க.சமைச்சு தருவாங்க. அப்பா நல்லா இருந்தா சமைப்பாரு. குடிச்சுப்பிட்டு வந்தா ஒண்ணுமில்ல” கையை விரித்தபடி பதில்.

“ஏன் ஓங்க அம்மா எங்க போனாங்க?”

“அவங்கதா வெளிநாடு போயிட்டாங்களே! ஒரு வருசமாவுது.”

“காசு அனுப்புனாங்களா?”

“ம்.. அப்புறம்.. அதானே அப்பா நல்..லா குடிச்சுப்பிட்டு கெடக்குறாரு.”

தோட்டங்களுக்குத் தொற்றியுள்ள நோய் இது. தாய்மார் வெளிநாடு சென்று கஷ்டப்பட்டு உழைத்து அனுப்பும்

காசில் தந்தைமார் நன்றாகக் குடித்து வெறித்துக் கொண்டு திரிய, பாவம் இந்த சின்னஞ்சிறுசுகள்தான் தாய்ப்பாசமும் கிடைக்காமல், தந்தையிடம் அடிகளையும் திட்டுக்களையும் வாங்கிக் கொண்டு கால்வயிற்றுக்கும் அரைவயிற்றுக்கும் சாப்பிட்டுக் கொண்டு படுகின்ற அவஸ்தை சொல்லி மாளாது! அட, வெளிநாட்டில் எத்தனையோ பிரச்சினைகளுக்கு மத்தியில் உழைக்கின்ற அந்த பெண்களின் உழைப்புமல்லவா வீணாகிக் கொண்டிருக்கின்றது? மனசுக்குள் பொருமிக் கொண்ட பைரவி தன்னை சுதாரித்துக் கொண்டு "சரி எல்லா கதையையும் விட்டுப்புட்டு நா சொல்றத நல்லா கேளு.இனிமே நீ சாப்பாடு கொண்டு வராட்டி ஏங்கூடதான் வந்து சாப்பிடணும் சரியா?" என அன்புக் கட்டளையிட்டாள்.

"சரி டீச்சர் ஆனா இனிமே நீங்க நெறயா சாப்பாடு கொண்டாறணும். இல்லாட்டி ஒங்களுக்கு இல்லாம போயிடுமே!" என்றான் ராசு.

காலம் நகர்ந்தது. பைரவியோடு ரொம்பவும் ஒட்டிப்போன ராசு பைரவி கூறுகின்ற எதையும் தட்டாமல் செய்வான். அன்றும் அப்படித்தான். மேலதிகமாக பரீட்சைகளுக்காக அப்பியாசக் கொப்பி வாங்கிவர பணித்தாள் பைரவி. "இங்க பாருங்க இந்த பரீட்சைகளுக்கான விடைகளையும் மேலதிக தகவல்களையும் ஒரே கொப்பியில எழுதினா ஒங்களுக்கு படிக்க வசதியாயிருக்கும். அதனால சின்ன கொப்பியா வாங்கிடாம பெரிய கொப்பியாவே வாங்கிடுங்க! என்ன சரிதானே?" என்ற அவளின் கேள்விக்கு "சரி டீச்சர்!" என கோரஸாக பதில் வந்தது. "டீச்சர் அந்த கொப்பி என்ன வெல வரும்?" சிறுபிள்ளைத்தனமாய் கேட்டான் ராசு. "என்ன, நாப்பது அம்பது ரூபா வரும். ஏன் கேக்குற?" தெத்துப்பல் தெரிய சிரித்துவிட்டு அமர்ந்தான் ராசு.

ஒரு கிழமையாகி விட்டது. வகுப்பில் ஓரிருவரைத் தவிர வேறு எவரும் இன்னும் கொப்பி வாங்கிக் கொண்டு வரவில்லை. “நாளைக்கு வாங்கித் தாரேன்னாங்க டீச்சர்” இதே பல்லவி நாளைந்து நாள் தொடர, பைரவிக்கு கோபம் வந்து விட்டது. “எத்தன நாளா சொல்லிக்கிட்டே இருக்கிறேன்? ஏன் இன்னும் ஒருத்தரும் கொப்பி வாங்கியாறல?” ஒருவன் எழும்பி சொன்னான் “சம்பளம் போட்டதும் வாங்கித் தாறதா அப்பா சொன்னிச்சு. இன்னும் இந்த மாச சம்பளம் போடலயாம் டீச்சர். இப்ப வேலநிறுத்தம் நடக்குதாம்” “அடடா! இதை எப்படி மறந்தேன் நான்?” என மனசுக்குள் குற்றவுணர்வு தலைத்தூக்க “அப்ப அரவிந்தனும் நாதனும் மாத்திரம் எப்பிடி கொப்பி வாங்கினீங்க?” என வினவினாள். டீச்சர் ஏசமாட்டார் எனத் தெரிந்ததும் ராசு எழுந்து “அது டீச்சர் அவங்க அப்பால்லாம் தோட்டத்துல வேல செய்யலியே! டவுனுல கடையில வேல பாக்குறாங்க” “நீ ஏன் கொப்பி வாங்கல ஒங்க அம்மாதான் வெளிநாட்டிலயிருந்து காசு அனுப்புவாங்களே?” “ம்..அப்புறம்..அந்த காசிலதான் அப்பா நல்லா குடிச்சு முடிச்சுட்டாரே? அதனால அம்மா இப்ப காசே அனுப்புறதில்ல கடுதாசியும் போடல” “ ம்ஹூம்.. இந்த ஸ்டிரைக் எப்ப முடிஞ்சு எப்ப சம்பளம் போட்டு எப்ப நீங்க கொப்பி வாங்கி எப்ப நான் டெஸ்ட் வைக்கிறது?” என அங்கலாய்த்த பைரவியைப் பார்த்து சிரித்தார்கள் மாணவர்கள்.

ஸ்டிரைக் தொடர்ந்தது. சம்பள உயர்வு வேண்டி இவர்கள் நடாத்தும் இந்த அஹிம்சா போராட்டம் தொழிலாளர்களைப் பாதித்ததுபோல அதிபர் ஆசிரியர்களையும் வெகுவாகப் பாதித்தது. பாடசாலை முழுதும் வரண்ட பூமியாகக் கிடந்தது. மாணவர்களின் முகங்களில் தெரிகின்ற சோர்வுக்களை படிப்பிக்க விடாமல் செய்தது. அரசாங்கம் தொழிலாளிகளின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க மறுக்கவே வேலைநிறுத்தம்

தொடர்ந்தது. பாடசாலைக்கு வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கைப் படிப்படியாக குறைந்தது. வருகின்ற மாணவர்களையும் கூட படிப்பில் ஈடுபடுத்த முடியாதவாறு சோர்ந்து காணப்பட்டனர். "மூணு நாளா ஒருவேள கஞ்சிதான் சாப்பாடு டீச்சர்.வீட்டுல இருந்தா பசிக்குது கோபம் கோபமா வருது. இங்க வந்தாலாவது எல்லாரோடயும் கதைச்சுக்கிட்டு இருக்கலாமே" என அங்கலாய்த்தனர்.

ஸ்டிரைக் முடிந்தபாடில்லை. தோட்டப்புற பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களும் ஆசிரியர்களும் தொழிலாளிகளோடு தோள் கொடுக்கத் தயாரானார்கள். இந்த வேலைநிறுத்தம் ஒரு முடிவுக்கு வந்தாலேயொழிய பாடசாலை நடாத்த முடியாது என்ற இக்கட்டானநிலையில் அவர்களோடு இணைந்து செயற்பட ஆசிரியர்சங்கம் தீர்மானித்து அதை நடைமுறைப்படுத்தியது. தோட்டத்துக் காரியாலயத்திற்கு முன்னால் அனைவரும் குழுமியிருந்து கோஷங்களை எழுப்பினர். தம்மோடு இவர்களும் இணைந்து கொண்டதில் தோட்டத்து மக்கள் உற்சாகமாயினர். கூட்டத்தில் ஒருவர் எழுந்து "நீங்கள்ளாம் எங்களோட சேந்து நல்ல தீர்வு கிடைக்கணுமின்னு போராட வந்திருக்கிறது நமக்கெல்லாம் ரொம்ப சந்தோசமாயிருக்கு. நாம கேக்கிற சம்பளம் மாத்திரம் நமக்கு கெடச்சுடட்டும் அப்பறம் பாருங்க! மொதவேலயா நம்ம புள்ளைங்க படிக்கத்தேவயான எல்லாத்தயும் வாங்கி குடுத்துப்புட்டுத்தான் மறுவேல. அவங்களாவது படிச்சு பெரீய ஆளா வரணும்.நம்மள மாதிரி கூலிவேல செஞ்சுகிட்டு மத்தவங்க முன்னாடி கைக்கட்டி நிக்காம சொந்தமா தொழிலு பாக்கணும். என்னாங்கடாப்பா நாஞ்சொல்றது?" என கூட்டத்தைப் பார்த்த கேட்கவும் கூட்டம் வீரமாய் கைத்தட்டி ஆரவாரித்தது. நாட்கள் நகர்ந்தன. நாடு முழுவதும் இந்த வேலைநிறுத்தம் பரவியது. கொழுந்துகள்

எல்லாம் முற்றி பறிப்பதற்கு உரிய தன்மையை இழந்தன. நாட்டின் பொருளாதார ஏணி ஆட்டம் காணுமானால்... உடனடியாக அரசாங்கம் தொழிலாளர் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்மானம் எடுத்தது. அடுத்தநாள் காலை அரசாங்கத்தின் முடிவு அறிவிக்கப்பட்டது. தொழிலாளர் கேட்ட நாள்சம்பளத்தை வழங்காவிட்டாலும் தொழிலாளரின் அன்றாட வாழ்விற்கு ஏற்ற விதத்தில் நியாயமான ஒரு சம்பள உயர்வை அரசாங்கம் வழங்கத் தீர்மானித்திருப்பதாக அறிவிக்க அந்த செய்திகேட்டு தொழிலாளர் ஆனந்தகோஷ மிட்டனர்.

பைரவி 'அப்பாடா' என பெருமூச்சு விட்டுக் கொண்டாள். இந்தமட்டிலாவது ஒரு தீர்வு ஏற்பாட்டு பாடசாலை மீண்டும் இயங்க தொடங்கினால் போதுமென்றிருந்தது அவளுக்கு. ஒரு கிழமையிலேயே அரசாங்கம் தான் அறிவித்தபடி அந்த சம்பள உயர்வை வழங்கியது. ஒவ்வொரு தொழிலாளியும் தமது நிலுவை சம்பளத்தோடு மிக்க சந்தோசத்துடன் வீடுகளுக்கு போவதை பாடசாலையிலிருந்து பார்த்து கொண்டிருந்த பைரவிக்கு அந்த உண்மையான சந்தோசத்தின் தாத்பர்யம் புரிந்தது.

அடுத்தநாள் காலை பாடசாலைக்கு வந்த பைரவிக்கு அந்த சோக செய்தியை கூறினார் அதிபர். ராசுவின் தந்தை காலமான செய்தி கேட்ட பைரவிக்கு அந்த பையனின் குழந்தைமுகம் ஞாபகத்துக்கு வந்து அவஸ்தைபடுத்தியது. பாடசாலை மாணவர்களையும் அழைத்துக் கொண்டு அந்த இழவு வீட்டுக்குள் நுழைந்த பைரவிக்கு தூக்கிவாரிப்போட்டது. "இவரா ராசுவின் அப்பா? அன்னைக்கு பசங்களோட படிப்ப பத்தி ரொம்பவும் அக்கறையா பேசினாரே! பாவம் இப்படி அநியாயமா

போய்ட்டாரே!" என மனசுக்குள் புலம்பிக் கொண்டவள் ராசுவைக் கண்களால் தேடினாள். அதோ! அந்த மூலையில்...

"ராசு" என பக்கத்தில் அமர்ந்து கூப்பிட்டாள் பைரவி. நிமிர்ந்து பார்த்தவன் கண்கள் கலங்க நெஞ்சு விம்ம "டீச்சர்"

என்றபடி அவள்மடியில் படுத்து அழுதான். அவனைத் தடவிகொடுத்தபடிஎதுவும்பேசமுடியாதவளாய்அமர்ந்திருப்பதை தவிர பைரவிக்கு வேறு வழி தெரியவில்லை.

திடீரென அவளது மடியிலிருந்து நிமிர்ந்தவன் "டீச்சர் எனக்கு.. நா... இனி கொப்பி வாங்கிக்கிட்டு வரவே முடியாது டீச்சர். ஏன்னா... அப்பா அந்த... அந்த காசிலதான் நேத்திக்கு குடிச்சுப்பிட்டு வந்து.... நா கேட்டேன்... ஏம்பா.. எனக்கு கொப்பி பென்சில் ஒண்ணும் வாங்கிக்கிட்டு வரலையான்னு... கேட்டதுக்கு என்னய நல்லா அடிச்சுப்பிட்டு படுத்தவருதான். டீச்சர்... டீச்சர் இனி எனக்கு கொப்பி வாங்கிக்கிட்டு வரவே முடியாது டீச்சர்..." என்றபடி விம்மினான்.!

# சுமைதாங்கி

அந்தப் பாதையின் வளைவில் தூரத்தே தெரிந்தது அந்த தேயிலைத் தொழிற்சாலை. பகல் பன்னிரண்டு மணி சாப்பாட்டுக்கு என்று வந்துவிட்டு மீண்டும் வேலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் கூட்டத்தில் தாயம்மாவும் தெரிந்தாள். அந்த பட்டப்பகலில் கொளுத்தும் வெயிலின் கொடூரத்தில் ஸ்டோர் கண்ணுக்குத் தெரிந்ததும் ‘அப்பாடா’ என ஆயாசப்பட முடியாமல் அந்த தூரம் பயமுறுத்தியது. ‘இன்னும் இரண்டு வளைவுகளைக் கடந்தாகணுமே’ என்ற எண்ணமே தாயம்மாவுக்குக் களைப்பை ஏற்படுத்தியது. மற்றையவர்களோடு சேர்ந்து நடக்க முடியாமல் காலில் பாளம் பாளமாக வெடித்திருந்த பித்தவெடிப்பு தார்ரோட்டின் வெக்கையில் அதிக வேதனையைத்தர அதன் பிரதிபலிப்பு முகத்தில் அப்பட்டமாய் தெரிய தலையை வெடிக்க வைக்கின்ற வெயிலுக்கு ஏதோ தன்னாலான அணையாய் கைகளையே குடையாக்கிக் கொண்டு..... பாவம் இவளும் எத்தனைக் காலம்தான் இப்படி கஷ்டப்படுவாள்?

பொதுவாக ‘அவளின் விதி இப்படியிருக்கிறது’ என சாதாரணமாக சொல்வது வழக்கம். ஆனால் இந்தியாவிலிருந்து கொண்டு வந்து இறக்கப்பட்டு தோட்டக்காட்டான் என்ற சிறப்புப்பெயருடன் விளிக்கப்படும் இவர்கள் எல்லோருடைய விதிகளையும் இறைவன் எப்படி ஒரே மாதிரி எழுதினான். என்பது ஆச்சரியமான விடயம்தான் அவர்கள் ஒவ்வொருவருடைய வேதனைகளும் வெவ்வேறு

வகையாக இருந்தாலும்கூட ஒட்டுமொத்தத்தில் எல்லோருமே வேதனைகளையும் சோகங்களையும் தம் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தானே? இதற்குத் தாயம்மாள் மாத்திரம் எப்படி விதிவிலக்காவாள்? மடுல்கல தோட்டத்தில் தன் தாய்தந்தையோடு இருந்து கொழுந்தெடுத்துக்கொண்டு உல்லாசமாகத் திரிந்து கொண்டிருந்தவளை விரும்பி மணமுடித்தான் சொந்த மாமன் மகனான வேலு. புருசனோடு அவனது ஊரான ஓபல்கல தோட்டத்துக்கு வந்து வாழத் தொடங்கினாள் தாயம்மாள். லேலு தோட்டத்து ஸ்டோரில் வேலை. பழகுவதற்கு இனிமையான வேலு எல்லோர் மனதிலும் இடம்பிடித்துக் கொண்டவனாவான் . வேலையிலும் கெட்டிக்காரனான அவனது நேர்மை சுப்பிரிண்டன்ட் முதலான எல்லோர் மத்தியிலும் பிரசித்தம்.

முத்துமுத்தாக இரண்டு பெண் குழந்தைகளுக்கும் கடைக்குட்டியாய் ஒரு பையனுக்கும் தாயம்மாவைத் தாயாக்கி குடும்பத்தை அழகாகக் கட்டியெழுப்பிய வேலுவின் வாழ்விலும் புயல் வீசத் தொடங்கியது.

ஸ்டோரில் சக தொழிலாளி ஒருவன் தூள் திருடியதை நேரில் கண்ட சாட்சியான வேலு அவனைப்பற்றி சுப்பிரிண்டனிடம் முறையிட அவன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். தான் வேலையிலிருந்து நீக்கப்பட தன் குற்றமே காரணம் என ஒப்புக்கொள்ளாமல் வேலுவின் மீது வஞ்சம் வைத்து நைட் வேலை முடிந்து திரும்பிக் கெரிண்டிருந்த வேலுவை கத்தியால் குத்தி விட்டான் அவன். அந்த அதிகாலைப் பொழுதில், யாருமேயற்ற அந்த தோட்டத்துத் தார் ரோட்டில், குற்றுயிராய் கிடந்த வேலு தன்னைக் காப்பாற்ற யாருமே வரமாட்டார்களா என்ற ஏக்கத்தோடு, தாயம்மாவையும்

குழந்தைகளையும் அநாதையாக்கிவிட்டுப் போகின்ற வேதனையோடு உயிரை விட்டான்.

எந்த சேதியும் அறியாமல் நைட் வேலை முடிந்து வீடு வரப்போகும் கணவனுக்காக தேத்தண்ணி ஊற்றி வைத்துவிட்டு ரொட்டி தட்ட தயாரான தாயம்மாவை அந்த சோக செய்தி வந்து உலுப்பியது. கொலையுண்டு போன தன் கணவனுக்காக அழுவதா ஆதரவற்ற தனக்காகவும் தன் குழந்தைகளுக்காகவும் கதறுவதா எனத் தெரியாமல் விக்கித்துப்போனாள் தாயம்மா. தோட்டத்து நிர்வாகம் வேலுவின் இறுதி பயணத்துக்காக சகல வழிகளிலும் உதவி செய்தது. வேலுவின் மீது வைத்திருந்த அபிமானத்தால் தாயம்மாவுக்கு ஸ்டோரில் வேலை போட்டுக் கொடுத்தது. கொழுந்தெடுப்பதிலும் பார்க்க இதில் வருமானம் சற்றே அதிகம் என்பதையும் விட வெயிலிலும் மழையிலும் உடல் வருந்த நிற்க வேண்டியதில்லை என்பதையும் விட தன் கணவன் வேலை செய்த இடத்தில் வேலை செய்வதில் ஆத்ம திருப்தி கண்டாள் தாயம்மா ஆனால் நைட் வேலை என ஸ்டோரில் தங்க வேண்டிய நாட்களில் தவித்துப்போவாள். மூத்தவள் ராணிக்கு விபரம் தெரிகிற வயசு என்றாலும் அடுத்தவள் சுமதியும் கடைசிப்பையனான ராமுவும் வயதில் சிறியவர்கள். இரவில் மூவரையும் தனியே லயத்தில் விட்டுவிட்டு தான் ஸ்டோரில் நிற்பது முள்ளின் மேல் நிற்பது போலிருக்கும் தாயம்மாவுக்கு. எப்படியோ கஷ்டங்கள், சோகங்கள், துன்பங்கள் என்று படவேண்டிய அத்தனையையும் அனுபவித்துக்கொண்டு இந்த குடும்பமும் வாழ்ந்தது .

தாயம்மா ஒருத்தியின் வருமானத்தால் குடும்பத்தைக் கட்டியிழுப்பது கஷ்டமாக இருக்கவே தோட்டத்துப் பள்ளிக் கூடத்தில் ஆர்வமாகப் படித்துக்கொண்டிருந்த ராணியையும் சுமதியையும் ஸ்கூலிருந்து நிறுத்த வேண்டிய கட்டாயம்

ஏற்பட்டது. ராணி தாயின் கஷ்டமுணர்ந்து தானாகவே கொழுந்தெடுக்கும் வேலையை விரும்பி ஏற்றுக்கொண்டாள். அவ்வப்போது புத்தகச்சுமையோடு போகின்ற பிள்ளைகளை ஏக்கத்துடன் பார்ப்பதோடு தன் சோகத்தை மறைத்துக் கொள்வாள். ஆனால் நன்றாகப் படித்துக் கொண்டிருந்த சுமதியால் இந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளைக் கட்டாயப்படுத்தி வேலைக்கு அனுப்ப, தாயம்மாவும் விரும்பவில்லை. ராமு மாத்திரம் ஸ்கோலுக்கு போய் வந்து கொண்டிருந்தான்

காலம் நகர்ந்தது. காலத்தின் ஓட்டத்திற்கேற்ப போட்டி போட முடியாமல் தாயம்மா களைத்துப் போனாள். வயதுவந்த பெண்ணான ராணியின் உழைப்பையும் பெற்றுக் கொண்டிருப்பது தவறாகப் படவே ஏதோ தன்னாலான வகையில் ராணியின் திருமணத்தை முடித்து தன் பொறுப்பைக் குறைத்துக் கொண்டாள். மீண்டும் தாயம்மாவின் வருமானத்தை மாத்திரம் நம்பி குடும்பம் வாழத்தொடங்கியது. புடிப்பில் மிகவும் கெட்டிக்காரனான ராமு உயர்தர வகுப்புக்காக டவுனுக்கு வந்துபோவதாலும் பாடப்புத்தகங்கள் அவனது தேவைகள் என்பவற்றாலும் செலவினங்கள் அதிகரித்தது. எனவே தாயம்மாவின் வருமானத்தை மாத்திரம் கொண்டு குடும்ப வண்டி நகர கஷ்டப்பட்டது. ஏதோ தன்னாலான உதவியாய் வீட்டில் இருந்தபடியே தையல் தைத்துக் கொடுத்து சிறு சம்பாத்தியத்தைப் பெற்று குடும்பத்துக்கு உதவினாள் சுமதி.

ராமு வீட்டில் அனைவரது அறிவையும் தனதாக்கிக் கொண்டு படிப்பில் படுசுட்டியாகத் திகழ்ந்தான். தோட்டத்துப் பாடசாலையிலே மிகத் திறமையாக படித்து சித்தியடைந்தான். டவுனுக்கு உயர்தர வகுப்புக்காக சென்றுகொண்டிருக்கும் ராமுவுக்கு தன் குடும்பம் மீதான பற்று மிக அதிகம் . அதிலும்

தாய் படுகிற சோகங்கள் அவன் நெஞ்சில் ஆறாத வடுவை ஏற்படுத்தியிருந்தது. தாயம்மா அடிக்கடி சொல்லுகின்ற உபதேசம் அவனுக்கு நித்திய உணவு போலானது.

தம்பி நீ படிச்சு பெரீய ஆளா வந்து சம்பாதிக்கணுமடா! ராசா! ஒங்க அக்காவ கரை சேக்கிற பெரிய பொறுப்பு ஒனக்கிருக்கு. நீயும் குடும்பமாகி நல்லா வாழணும் ஒன்ன நம்பித்தாண்டா நா இன்னும் உசிர கையில புடிச்சுக்கிட்டு இருக்கேன். ஏங்காலம் முடியிறவறைக்கும் இந்த பொறுப்புகள நா சொமப்பேன் அதுக்கப்பறம் நீதா எல்லாத்தயும் கவனிச்சுக்கனும்

செலவுகள் அதிகரிக்க தாயம்மா தன்னை மீறி உழைக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானாள்.

அடிக்கடி நைட் வேலைக்காக ஸ்டோரில் தங்க வேண்டியிருந்ததால் தொடர்ச்சியான தூக்கமின்மையும் தொடர்ந்து ஸ்டோரில் நிற்பதால் தூள் தூசுக்கள் மூச்சுக்காற்றோடு உட்செல்வதும் அவளை நிரந்தர நோயாளியாக்கியது .

ராமுவுக்கு ரொம்ப கஷ்டமாக இருந்தது.

நோயாளியான அம்மா வைத்திய செலவுக்கு கூட பணத்தை செலவழிக்காமல் தனக்காகவே செலவிடுவதும் உடல் வருத்தத்தையும் பாராது தொடர்ந்து வேலைக்குப் போவதும் அவனால் தாங்கிக் கொள்ள முடியாமலிருந்தது.

“அம்மா! எனக்காக நீங்க கஷ்டப்படுறதப் பாக்குறப்ப எனக்கு படிக்கவேப் பிடிக்கல. நோய்க்கு மருந்து எடுக்கிறீங்களுமில்ல. வேலைக்கு போகாம வீட்டிலயாவது நிக்கலாம்ல்ல

மகனின் ஆதங்கத்தைப் பார்க்க தாயம்மாவுக்கு பெருமையாகத்தான் இருந்தது. “அடே இன்னமும் நீ சின்ன

பையனாவே இருக்கியே வேலைக்கி நா போகாட்டி எப்பிடிடா சாப்பிடுறது? ஒன்னு செய். நல்லா படிச்சு பாஸ் பண்ணி சம்பாதிச்சு குடு. நா காலாட்டிக்கிட்டு வீட்டில ஒக்காந்திருக்கிறேனே"

தாயின் கிண்டலில் ரோசம் பொத்துக்கொண்டு வர, "ஏன் நா சம்பாதிச்சு தரமாட்டனா ஒருபெரீய வேலையில சேர்ந்து அப்படியே வெளிநாடு போயி கை நெறய்ய சம்பாதிச்சு....". அவனது கற்பனைக்குத் தடை போட்டாள் தாயம்மா. "ஏய் நிப்பாட்டுடா வெளிநாடு போகபோறியா ஏன் ஒனக்கு நம்ம ஊருனா கசக்குதோ நீ இங்கயேதான் வேல செய்யணும் அத நா எங்கண்ணால பாக்கனும்"

ராமு அத்தனை கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு படித்தான். அவனது எண்ணத்துக்கும் தாயின் ஆசைக்குமாக உயர்வகுப்பில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றான். ஆவன் பட்டப்படிப்பை முடிக்கவும் அவனது திறமையின் பேரில் லண்டனுக்கு மேற்படிப்புக்கென செல்லவும் அனுமதி கிடைத்தது.

வயதாகிப் போனாலும் உழைப்பை மூச்சாகக் கொண்டு வாழ்ந்திருந்த தாயம்மாவுக்கு மகள் சுமதியின் கவலையே ரொம்ப துன்புறுத்தியது. மகன் மேற்படிப்புக்காக வெளிநாடு செல்ல முயல்வது தாயம்மாவை வேதனைப்படுத்தியது. ராமுவிடம் முடிந்தளவு சொல்லிப் பார்த்தாள் .

"தம்பி ஒங்கப்பா உசிர விடுறப்ப நீ சின்னப்புள்ள. விபரம் தெரியாத வயசு . அப்ப நா பட்ட கஸ்டங்களயும் சோதனைகளயும் இப்ப நெனச்சா கூட மலைப்பா இருக்கு. எல்லாத்தயும் அனுபவிச்சுக்கிட்டும் வாழ்ந்து ஒரு நெலக்கி வரணும்ன்னு நா ஆசப்பட்டேன். எல்லா ஒன்ன நெனச்சுத்தான்.! நீ முன்னுக்கு வருவ. வேலுவின் மகனப் பாத்தியான்னு ஊரே மலச்சு போற

மாதிரி எல்லாரு முன்னாலயும் நீ வாழணும்னு ஆசப்பட்டேன். தோட்டம் ஓங்கப்பாவுட்டு பேர பெருமையா சொன்னமாதிரி ஓம்பேரயும் சொல்லனும் ராசா! நீ இவ்வளவு துாரம் பெரீய ஆளா வர இந்த தோட்டத்து வேலயில கெடச்ச காசுதானே ஒதவிச்சு.அன்னிக்கு ஓங்கப்பா செத்தபெறவு எனக்கு இந்த வேலய கொடுத்த இவுங்களுக்கு நாம என்னப்பா செஞ்சோம்? நீ வெளிநாடு போற ஆசய விட்டுப்புட்டு தோட்டத்து ஸ்கோல்ல படிப்பிச்சுக்குடு . இதுதாம்பா ஏ ஆச."

ராமுவுக்கு சங்கடமாக இருந்தது. அம்மாவை மீறி கதைக்க என்னவோ போலிருந்தது.

அம்மா ஓங்க ஆசய நெறவேத்தற கடமை எனக்கிருக்கு. அத கட்டாயமா நா

செய்வேன். ஆனா லண்டனுக்குப் போயி எந்த செலவுமில்லாம படிக்கிறதுக்கு எல்லாருக்கும் கெடைக்காதம்மா. அதோட அங்க போய் ரெண்டு வருசத்துல படிச்சுக்கிட்டே வேல செஞ்சு சம்பாதிக்கலாம். கையில காசோட வந்தா அக்கா கலியாணத்தயும் நடத்திப்பிடலாம் பெறகு ஓங்க ஆசப்படியே இங்கயே வேல செஞ்சுக்கிட்டு ஓங்க கூடயே இருந்துடறேன் என்ன நம்புங்கம்மா" அவனது கெஞ்சல் தாயம்மாவை என்னவோ செய்தது. அவன் சொல்வதில் உள்ள நியாயமும் சரியாகப் பட்டது. எல்லார் மனதிலும் பெருமையையும் ஊரை விட்டுப் போகின்றானே என்ற கவலையையும் தந்து விட்டு ராமு லண்டன் போனான். தாயம்மாவும் இரண்டு வருடத்தில் ராமு வந்து விடுவான்தானே என்ற நம்பிக்கையில் தன் பொழுதை வேலை செய்து ஓட்டினாள். கடிதங்களில் எப்போதும் தாயை வேலைக்குப் போகாமல் வீட்டிலிருக்கும்படி வற்புறுத்தி எழுதுவான் ராமு. 'ஏ உசிரு இருக்குமட்டும் நா வேலய விடமாட்டேன்' என்பதில் தாயம்மா உறுதியாக நின்றாள்.

சொன்ன வாக்கு தவறாமல் இரு வருடங்களில் அக்காவின் கல்யாணத்துக்கென சம்பாதித்த பணத்துடன் வந்து சேர்ந்தான் ராமு! அவனில் தெரிந்த மிடுக்கும் படித்த முகக் களையும் தாயம்மாவினால் நம்பமுடியாமலிருந்தது. அடிக்கொரு தடவை அம்மாவைக் கூப்பிட்டு சந்தேகங்களைக் கேக்குற அந்த சின்னப் பையனா இவன்? எந்தவித அலட்டலுமில்லாமல் முடிவெடுக்கிற அவனது ஸ்டைலும் வார்த்தைக்கு வார்த்தை புகுந்து விளையாடுகின்ற ஆங்கிலமும் எல்லோரிடமும் மேம்போக்காக பழகுகிற விதமும் தாயம்மாவுக்கு ஆச்சரியத்தையும் பெருமையையும் ஒருங்கே விதைத்தன.

சுமதிக்கு திருமணம் முடிந்தது. வீடு அமளிதுமளி பட்டு அடங்கியதும் வேலைக்கு என கிளம்பிய தாயைப் பார்த்து “என்னம்மா எவ்வளவு சொல்லியும் கேக்காம வேலைக்குப் போறீங்களே எனக்காக எத்தனையோ கஸ்டங்கள அனுபவிச்சீங்க இப்பவாச்சும் நா சம்பாதிக்கிறத வீட்டுல இருந்து அனுபவிக்கக் கூடாதா?” என்ற கேள்வியோடு நிறுத்தினான்.

“ராமு நீ நம்ம ஸ்கோல்ல எப்ப வேலைக்கு சேரப்போற? அத சொல்லு மொதல்ல” என்றாள் தாயம்மா.

“அம்மா எவ்வளவோ கஷ்டப்பட்டு படிச்சு முன்னுக்கு வந்துட்டேன். இன்னும் இதுக்குள்ளயே இருன்னு சொல்லுறீங்களே லண்டனுக்கு போன பெறகுதான் நாம தெரிஞ்சுக்காம புரிஞசிக்காம அனுபவிக்காம இழந்த விசயங்கள் எவ்வளவுன்னு நா தெரிஞுசுக்கிட்டேன் இனியும் அப்பிடியே இருக்க நா விரும்பேல்லம்மா என்ன மன்னிச்சிடுங்க.”

ராமுவின் வார்த்தையில் விக்கித்துப் போனாள் தாயம்மா. எத்தனையோ தடவை கெஞ்சியும் பயமுறுத்தியும் பார்த்தாள் அவள். ராமு தான் எடுத்த தீர்மானத்திலிருந்து கிஞ்சித்தும் அசையவேயில்லை.

தனக்குள் என்னமோ சரிந்து விழுமாற் போல் உணர்ந்தாள் தாயம்மா. தன்னை சுற்றியிருந்த தன்னை வழிநடத்திக் கொண்டிருந்த சொந்தம் உறவு பாசம் எல்லாமே அதாளபாதாளத்துக்குள் புதையுண்டு போவதுபோல் உணர்ந்தாள் அவள்.

மீண்டும் லண்டன் நோக்கி பயணமாகப் போகும் மகனைப் பற்றிய அக்கறையேயில்லாமல் காலில் தெரிந்த பித்தவெடிப்பின் வேதனையைக் கூட உணராமல் புத்தம்புது மனுஷியாய் ஸ்டோரை நோக்கி தன் வாழ்க்கைப் பயணத்தை மீண்டும் தொடங்கினாள் தாயம்மா!!!!!

**(1999) மல்லிகை**

# சுந்தரம்

அந்த சாலைத்திருப்பத்தில் அவனைக் கண்டபோது குலை நடுக்கமேற்பட்டது பாரதிக்கு. அவளது சமீபகால பிரச்சினை இது. சரியாக சொல்லப்போனால் ஒருமாதத்துக்கு முன்பு சௌமியோடு அவள் கடைக்குப் போய் கொண்டிருந்த போதுதான் முதன்முதலாக அவனைக் கண்டாள். ஒரு கடைக்குள் பாரதியும் சௌமியும் நுழைய முற்பட்ட போது அந்த கடையருகில் அமர்ந்திருந்த அவன் திடீரென எழுந்துவந்து இவர்களின் முன் நின்றான்! இப்போதும் கூட, அவன் நின்ற தோரணை கண் முன் தோன்றி பாரதியை என்னவோ செய்தது. இடுப்பில் கைகளை ஊன்றியபடி, கால்களை அகல விரித்து நின்றபடி அவன் பாரதியை தீர்க்கமாக பார்த்தபோது உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அவளுள் ஒரு சில்லிப்பு ஏற்பட்டது.எதையோ அசம்பாவிதமாக உணர்ந்து அவள் விலக முற்பட்ட போது "ஏய் எங்க ஓடலாம்னு பாக்குற. இன்னிக்கு நீ ஏங்கிட்டயிருந்து தப்ப முடியாது.." என்றபடி அவளுடைய எந்த நடவடிக்கைக்கும் இடம்கொடாமல் அவளது கழுத்தில் கை வைத்தான்.

ஓரிரு கணங்களில் நடந்த இந்த சம்பவத்துக்குள் தம்மை சுதாரித்துக் கொண்ட சுற்றியிருந்தோர், அவனை விலக்கி விட்டனர்.

அப்போதுதான் தான் உயிர்தப்பி விட்டதை பாரதி சந்தேகத்தோடு ஊர்ஜிதப்படுத்திக் கொண்டாள். இப்போதும்

கூட அவனைக் கண்டபோது தூக்குத்தண்டணைக் கைதியின் அவஸ்தையை உணர்ந்தாள் பாரதி.

பாரதி அந்த ஊருக்கு தொழில் பார்க்கவென வந்து போகிறவள். தூரத்தேயுள்ள ஒரு குக்கிராமத்தில் வசிக்கின்ற அவள் நகரிலுள்ள காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிகின்றாள். எந்த நாளும் அங்கிருந்து பஸ்ஸில் வந்து மாலையில் வேலை முடிந்ததும் பஸ்ஸேறி வீடு போய் சேர்வாள். எவ்வித மனக்கிலேசமுமின்றி வந்து போய் கொண்டிருந்தவளுக்கு, இவன் ஒரு தடைக்கல்லானான். அன்று சௌமி கூட கேட்டாள். "என்ன பாரதி இவன ஒனக்கு தெரியுமா? ஒன்ன தெரிஞ்ச மாதிரியும் ஆனா அவனுக்கும் ஒனக்கும் ஏதோ பகை இருக்கிறமாதிரியும் கதைக்கிறானே....." பாரதி எவ்வளவோ யோசித்தும் பலனில்லாமல் போகவே "ம்ஹும் இவன நா முன்ன பின்ன பாத்ததேயில்ல சௌமி" என்றாள். யோசித்தும் ஒன்றும் புலப்படாததால் 'யாரோ பைத்தியக்காரன் போலிருக்கு' என முடிவு செய்து கொண்டனர்.

அதன் பிறகு அவனைக் காணும் போதெல்லாம் பாரதிக்கு பதற்றம் தொற்றிக் கொள்ளும். பஸ்ஸிலிருந்து இறங்கியதுமே இவள் பார்வை அவனைத் தேடும்.

அவனில்லையெனில் மனம் நிம்மதி கொள்ளும். அவனைக் கண்டுவிட்டாலோ, அவனின் பார்வையிலிருந்து தப்பித்து சென்றுவிட முயற்சிப்பாள். ஆனால் தனியே வீதியில் நடக்கும் போதெல்லாம், மனதுக்குள் ஒரு சஞ்சலம் எட்டிப் பார்த்துக்கொண்டேயிருக்கும்.

அன்றொருநாள் காலை பத்து மணியிருக்கும். காப்புறுதிக் கூட்டுதாபனத்துக்கு வந்தவர்களை கவனித்து அனுப்புவதில் ஈடுபட்டிருந்த பாரதிக்கு, யாரோ பாடும் சத்தம் கேட்டது. அந்த

காலகட்டத்தில் மிகவும் பிரபல்யமாக இருந்த ஒரு பக்திபாடல் அது.! அந்த பாடலால் ஈர்க்கப்பட்டவள், ஜன்னலோரமாக நகர்ந்தாள். என்ன ஆச்சரியம்! கணீர் குரலில் தெளிந்த உச்சரிப்பில் பாடிக்கொண்டிருந்தது அவன்!!! ஒருகடையின் முன் சம்மணமிட்டு அமர்ந்து பாகவதர் ஸ்டைலில் கைகளை உயர்த்தி கண்களை மூடி அனுபவித்து பாடிக்கொண்டிருந்த அவனை பைத்தியக்காரன் என்றால் யார் நம்புவார்கள்? ஒருபாடலை முடித்தவன் கண்களை திறந்து சுற்றி வர ஒரு ராஜபார்வை பார்த்துவிட்டு அடுத்த பாடலை தொடர்ந்தான். பார்த்துக் கொண்டிருக்கும்போதே, பாரதியினுள் அந்த அழுக்குசாரமும், கிழிந்த சேர்ட்டும், பரட்டைத் தலையும் உடைய அவனது உருவம் மறைந்து குரல் மட்டுமே வியாபித்தது. மனேஜர் அருகில் வந்து அழைக்கும்வரை அவள் தன் சுயஉணர்வைப் பெறவில்லை. “இன்னிக்குத்தான் நீ சுந்தரத்தோட பாட்டை கேட்டிருக்கயில்ல? அதுதான் அசந்துபோயிட்ட”

“அட அவன் பேரு சுந்தரமா? இவன ஒங்களுக்குத் தெரியுமா சார்?” பாரதியின் கேள்விக்கு பதில் சொல்லத் தொடங்கினார் அவர்.

“ம் ….தெரியும்மா. இவன் நம்மூர்காரன்தான். நல்லா ஒழச்சுசம்பாதிச்சு வாழ்ந்துக்கிட்டிருந்தான். கல்யாணம் பண்ணி குடியும் குடித்தனமுமாக சந்தோஷமாக இருந்தான். ஒரே ஒரு பெண்குழந்தை அவனுக்கு. அவள சீராட்டி பாராட்டி வளத்தான். அவளும் சின்ன வயசிலயே படிப்பிலயும் பேச்சிலும் கெட்டிக்காரி. அவள பெரீய ஆளாக்கனுமின்னு கனவுகண்டான் சுந்தரம். பஸ் டிரைவரா வேல செஞ்சாலும் மகளுக்காக எவ்வளவுன்னாலும் செலவழிக்கத் தயங்கமாட்டான். அந்த பொண்ணு வயசுக்கு வந்து கொஞ்ச நாளிலேயே சுந்தரத்தோட மனுஷி செத்துட்டா. அதுக்கு பெறகு அவனுக்கு எல்லாமே அந்த பொண்ணுதா.

அவ பேருகூட என்னமோ… ஆ! ராஜி! ஆசையா அவன் ‘ராஜீ’ன்னு கூப்புடறப்ப பாக்கணுமே! படிப்பில மட்டுமில்ல அவ பாக்குறதுக்கும் அசப்பில ஒன்ன மாதிரி அழகா செவப்பா இருப்பா. அவளுக்காக குடிக்காம வேற அநாவசிய செலவுசெய்யாம காசு சேத்து வச்சிருந்தான். அவன் சந்தோஷமா இருக்கிறப்ப விடிய விடிய சத்தமா பாடிக்கிட்டே இருப்பான். அதுவும் ‘ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது’ன்னு அனுபவிச்சுபாடுறப்ப கேக்க ரொம்ப இனிமையா இருக்கும். ஆனா, அந்த பாவிமக அவன்ட ஆசை, கனவு, சந்தோஷம், நம்பிக்கை எல்லாத்தயும் குழி தோண்டி பொதச்சுட்டா பாரதி! தன் மேல அப்பா வச்சிருந்த நம்பிக்கைய தனக்கு சாதகமாக்கிக்கிட்டு சுந்தரம் சேத்து வச்சிருந்த நகை காசுன்னு எல்லாத்தயும் சுருட்டிக்கிட்டு எவன்கூடயோ ஓடிப்போயிட்டா. அன்னிக்கு ஊர் முழுக்க அவள கரிச்சுக் கொட்டிச்சு. சுந்தரம் விஷயம் தெரிஞ்சு கல்லா சமைஞ்சு ஒக்காந்தவன்தான். ஒருகெழமையா சாப்பாடு தண்ணி எதுவுமில்லாம யார்கிட்டயும் எதுவும் பேசாம மொழங்கால கட்டிக்கிட்டு மோட்டுவளய பாத்துக்கிட்டே இருந்தான். எல்லாரும் என்னன்னமோ சொல்லி பாத்தும் அவன் அசையவேயில்ல. ஒரு நா பின்னேரம் பக்கத்து வீட்டு ரேடியோவில ‘ஒளி மயமான எதிர்காலம்’ பாட்டு போச்சு. திடீருன்னு எழும்பி நின்னு இவன் ஒரு சிரிப்பு சிரிச்சான் பாரு! இப்ப நெனச்சாலும் ‘பகீரு’ங்குது. அன்னிக்கு ஆரம்பிச்ச பைத்தியந்தாம்மா இவனுக்கு. ஒருநா தன் மகள மாதிரி இருந்த பொண்ணு ரோட்டுல போறப்ப இவனுக்கு வெறியே வந்துருச்சு! அவள துரத்த ஆரம்பிச்சான். எல்லாருமா சேர்ந்து இவன பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். கொஞ்ச காலத்துல வந்துட்டான். நல்லயிருப்பான். எப்ப அவன் குணம் மாறுமின்னு சொல்லமுடியாது.

அவர் சொல்லி முடிக்கவும் பாரதிக்கு ஏற்பட்ட உணர்வை என்னவென்று விபரிக்க முடியாமலிருந்தது. சுந்தரத்துக்கு ஏற்பட்ட துக்கம், அவன் நிலையினால் உண்டான அனுதாபம், அவனுடைய மகளின் சாயலில் இருக்கிற தன்னை ஏதேனும் செய்துவிடுவானோ என்ற பயம் எல்லாமுமாக சேர்ந்து அவளை ஆட்டிப் படைத்தது. அந்த அனுதாபம், துக்கம், இரக்கம் எல்லாமே அவனைக் காணும் வரையில்தான் சுந்தரத்தைக் கண்டதும் பாரதிக்கு ஏற்படுவது சொல்லி மாளாத பயம் ஒன்றுதான். பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸை விட்டு இறங்கியது முதல் கூட்டுதாபனத்துக்குள் நுழையும் வரை அவளது பார்வை சுழன்று கொண்டேயிருக்கும். மீண்டும் பஸ் ஸ்டாண்டை அடையும்வரை இதே நிலைதான்.ஒருநாள் மாலை வேலைவிட்டு பஸ் ஸ்டாண்டை அடைந்தவள் புறப்படத் தயாராயிருந்த பஸ்ஸில் ஓடிவந்து ஏறிக் கொண்டாள் பின்னால் யாரோ கூக்குரலிடுவது போல் தோன்றியதால், திரும்பிப் பார்த்தவள் திகைத்துப்போனாள். சுந்தரம் இவளிருந்த பஸ்ஸை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தான்! இதையறியாத டிரைவர் பஸ்ஸின் வேகத்தை அதிகரிக்கவே யாருமே எதிர்பாராதவிதத்தில் அவன் ஒரு காரியம் செய்தான். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு பஸ்ஸிலேறி ஸ்டார்ட் பண்ணி பாரதி ஏறிய பஸ்ஸை துரத்த ஆரம்பித்தான். பஸ் ஸ்டாண்டினுள் தறிகெட்டு ஓடிய அந்த பஸ்ஸுக்குப் பயந்து எல்லோரும் கூச்சலிட,அந்த இடமே திமிலோகப்பட்டது.

பஸ் ஸ்டாண்டின் நுழைவாயிலருகே மிக விரைவாக பஸ்ஸை ஒடித்துத் திருப்பியபோது பஸ் பக்கத்திலிருந்த மதிலின் மோதி பலத்த சத்தத்துடன் நின்றது. பஸ்ஸை சுற்றி கூட்டம் சேர்ந்தது. இரத்தம் வடிய ஸ்டியரிங்கில் மயங்கிக்கிடந்தவனை ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் செல்லவும் பஸ்ஸை அப்புறப்படுத்தவும் என அந்த இடம் அல்லோலகல்லோலப்பட்டது.

மீண்டும் அவன் நடமாடத் தொடங்கிவிட்டான். தலையிலும் கையிலும் கட்டுக்களுடனும், சற்றே வாட்டமானத் தோற்றத்துடனும் காணப்பட்டாலும் நடத்தையில் மாத்திரம் அவன் பழைய சுந்தரமேதான். தலையில் அவனுக்கு அடிபட்டதும் சினிமாக்களில் வருகிறமாதிரி இவனுக்கும் குணமாகி விட்டிருந்தால்! என்ற நப்பாசை பாரதிக்குள் இருந்தது. ஆனால் அந்த எண்ணத்தைப் பொய்யாக்கி விட்டு மீண்டும் அதே பைத்தியக்கார சுந்தரமாக,பாரதியைக் கண்டால் தன் மகள் ஞாபகத்தில் அவளை நோக்கிவெறித்தனத்தோடு பாய்கின்ற சுந்தரமாக தன்னை அவன் மீண்டொரு தடவை நிரூபித்துக் காட்டினான்.

அன்று மாலை வேலை விட்டு அவள் கீழிறங்கவும் அந்த கட்டிடத்துக்கு நேரெதிர் கடைவாசலில் அமர்ந்திருந்த சுந்தரம் இவளைப் பார்க்கவும் சரியாக இருந்தது. என்ன செய்வது என பாரதி முடிவெடுக்குமுன் கண்களில் கொலைவெறி கூத்தாட "ஏய்!" என பெரிதாகக் கத்தியபடி,வீதியில் வரும் வாகனங்கள் பற்றிய அக்கறையேதுமின்றி வீதியைக் கடந்து அவன் ஓடி வந்த ஓட்டம் இருக்கிறதே?.. அதிர்ச்சியில் சிலையாகிப்போன பாரதியால்திரும்பிஓடவும்முடியவில்லை. அதற்குள்அவளருகில் வந்தவன், பாரதி எங்குமே நகர முடியாதபடி அவளை சுவரோடு அழுந்தப் பிடித்துக் கொண்டான். "ஏங்கிட்டயிருந்து தப்பலாமுன்னு நெனச்சியா? ஒன்ன எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்கவச்சேன்? ஒம்மேல எவ்வளவு நம்பிக்க வச்சிருந்தேன்? ஏல்லாத்தயும் பாழாக்கிட்டியேடி பாவி நீ உசிரோட இருக்ககூடாது! ஒன்ன நா கொல்லாம விடமாட்டேன்…" என்று கத்தியபடி சுந்தரம் பாரதியின் கழுத்தைப் பிடித்து அழுத்தினான். கத்தவோ அலறவோ திராணியின்றி தான் செத்து விட்டதாக எண்ணிக் கொண்டே மயக்கமானாள் பாரதி!

ஏதோ ஒருகனவு காண்பது போல, தான் வேறோரு உலகில் சஞ்சரிப்பது போன்ற உணர்வுடன் கண்விழித்த பாரதிக்கு தான் ஆஸ்பத்திரியில் இருப்பது புலப்பட, மெதுவாக எழும்பினாள். பக்கத்திலேயே அமர்ந்திருந்த மனேஜர் "எழும்பிட்டியாம்மா.. ஒங்க வீட்டுக்கு சொல்லி அனுப்பியிருக்கேன். பயப்படாதம்மா... நல்லவேள நா அந்த நேரம் பாத்து கீழ வந்தேன். இல்லேன்னா... நா போட்ட கூச்சல்ல எல்லாரும் ஓடிவந்து அவனப் பிடிச்சுக்கிட்டாங்க! அவன பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிட்டோம்மா இனிமே அவனால ஒனக்கு ஒரு தொல்லையுமில்ல" என்றார்.

காலம் நகர்ந்தது. ஒருமாத கால ஓய்வின் பின் மீண்டும் பாரதி வேலைக்கு வரத்தொடங்கி ஒருசில மாதங்களாகி விட்டது. சுந்தரத்தை சற்றே மறக்க ஆரம்பித்திருந்த பாரதியை ஒருநாள் மனேஜர் கூப்பிட்டனுப்பினார். "என்ன சார்?" என்றபடி வந்தமர்ந்தவளை வாஞ்சையோடு பார்த்தவர், கூறத்தொடங்கினார். "நீ எம்மக மாதிரி பாரதி! இனியும் ஒனக்கு ஒரு கஷ்டம் வந்தா அதுக்கு நாந்தா பொறுப்பு சொல்லியாகனும். வேற ஒண்ணுமில்லம்மா சுந்தரம் குணமாகிட்டான்னு ஆஸ்பத்திரியிலிருந்து அனுப்பிட்டாங்க. அவன் முந்திமாதிரியில்ல ரொம்பவும் மாறிட்டான்னும்,பழைய குணங்கள் எதுவுமில்லன்னும் ஆஸ்பத்திரியில சொல்லியிருக்காங்க. ஆனாலும் ஒங்கிட்ட அவன் எப்பிடி நடந்துக்குவான்னு எனக்கு சொல்ல முடியலம்மா! இப்ப நாம என்ன செய்யுறதுன்னு நீயே சொல்லம்மா"

"என்ன சார் இப்பிடி சொல்லுறீங்க? இன்னொரு தடவ சுந்தரத்துக்கிட்ட அகப்பட்டா பயத்துலயே நா செத்து போயிடுவேன். இப்ப நீங்க சொல்லும்போதே எனக்கு நடுங்குது. நா வேணுமின்னா வேலயிலயிருந்து நின்னுக்கிறேன்

சார். எந்த நாளும் பயந்து பயந்து சாகிறத விட அதுமேல்" என்றாள் பாரதி. "சேச்சே அவசரப்பட்டு வேலய விட்டுடாத. ஒண்ணு செய்யலாம். இந்த மாசம் முடிய இன்னும் மூணு நாள்தானே இருக்கு! அதுமட்டும் வேலைக்கு வா. அப்புறம் ரெண்டு மாசத்துக்கு ஒன்னய டிரெய்னிங்குக்கு அனுப்புறேன் பெறகுநடக்கிறத அப்புறமா பாத்துக்கலாம்" என்றார்.

அவரின் முடிவின்படி இந்த மாதம் மட்டும் வருவது என தீர்மானித்துக் கொண்டாள் பாரதி. இந்த மூன்று நாட்களுக்குள் அவனைக் கண்டுவிடக்கூடாதே என்ற பதைபதைப்பு அவளிடம் தொற்றிக்கொண்டது. அவனைக் கண்டு விடுவேனோ என அவள் நினைத்த நேரத்தில் தேவர்கள் "ததாஸ்து" சொன்னார்களோ என்னமோ அன்று மாலையே சுந்தரத்தை அவள் காண நேர்ந்தது! அன்று வேலை முடிந்து பஸ்ஸில் அமர்ந்திருந்தவள், அவனைக் கண்டதும் திகைத்துப் போனாள். ஒரு கடையோரமாக நின்றுகொண்டிருந்த சுந்தரம் அவளைக் காணவில்லை. 'சட்டென்று' திரும்பி பஸ்ஸுக்குள் நோட்டம் விட்டவள் மேலும் குழம்பிப் போனாள். அவளையும் ஒரு வயதான கிழவியையும் தவிர பஸ்ஸுக்குள் வேறு யாருமேயில்லை!. சுந்தரம் இன்னும் தன்னைப் பார்க்கவில்லை என்பது சற்றே ஆறுதலைத் தந்தாலும் அவன் தன்னைக் கண்டுவந்துவிட்டால் தன்னைக் காப்பாற்ற யாருமேயில்லை என்பது மனசுக்குள் சில்லிப்பை ஏற்படுத்தியது. அவன் தன்னைப் பார்த்துவிடுவதற்குள் பஸ் புறப்பட்டுவிடாதா என்ற ஆதங்கம் மேலோங்கி நிற்க, சுற்றும்முற்றும் டிரைவர் வருகிறாரா என பாரத்தாள். அப்படி திரும்பிப் பார்க்கவும் பயமாக இருந்தது பாரதிக்கு. அவன் கண்டுவிட்டால்…? சற்றே கடைக்கண்ணால் பார்த்தபோது அவன் வீதியோரத்தில் இருந்து வீதியைக் கடக்க தயாராகிக்

கொண்டிருந்தான். ஐயோ! அவன் நின்ற இடத்திலிருந்து வீதியைக் கடந்தானானால் நேரே இவளிருக்கும் பஸ்ஸ/க்கு அருகில் தான் வருவான். அவன் தன்னைப் பார்த்துவிட்டுத்தான் வருகிறானா அல்லது, தற்செயலாக வீதியைக் கடக்கிறானா என்பதும் தெரியாததால்என்ன செய்வது என யோசித்தவள் இனி நடப்பது நடக்கட்டும் என்று தீர்மானித்தவளாய் அவனை நேர்பார்வையாய் அவதானிக்கலானாள். வீதியைக் கடந்த சுந்தரம் பஸ்ஸின் அருகே வந்து நின்று சுற்றும்முற்றும் பார்த்தான். பஸ்ஸின் பக்கமாகத் திரும்பினான் மனசு படபடக்க, உடல் குளிர்ந்து கொண்டுவர,தன் விதியை நொந்தபடி, பாரதி தன் கடைசி நேர தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பஸ்ஸின் பக்கமாகத் திரும்பியவன் நிமிர்ந்து பாரதியை ஆழமாகப் பார்த்தான்! அந்த கணத்தில் பாரதி சாகத் தயாரானாள். அவனிலிருந்து பார்வையை விலக்க கூட முடியாமல் சிலையானாள். பாரதியிலிருந்து தன் பார்வையை நிதானமாய் விலக்கிக் கொண்ட சுந்தரம், வேறுபாதையில் நடக்கத் தொடங்கினான்!

இவ்வளவு நேரமும் பாரதியின் மனதில் குடிகொண்டிருந்த படபடப்பு, பயம், சஞ்சலம், தவிப்பு எல்லாமும் ‘சட்டென்று’ வடிந்து போக, அவளுக்குள் நிம்மதிக்கு பதிலாக ஏதோ ஒரு ஏக்கம் படர்ந்தது!!!

**மல்லிகை**

# தங்க வளையல்

முதுகில் சுமந்த சுமையின் காரணமாக வேகமான நடையின் மூலம் உடலை சமப்படுத்தி மேட்டிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த பொன்னுவுக்கு தன் கையிலிருந்த வளையல் கண்ணில்பட்டது. தன்னைச் சுமந்தவளின் சோகங்களை எல்லாம் கூடவே இருந்து அனுபவித்ததாலோ என்னமோ அந்த தங்கவளையல் தன் மெருகிழந்து, தன் சோபையற்று காணப்பட்டது. ஆம்! “தங்க வளையல்” என அடைமொழி இட்டு சொன்னாலும் “ஆஹா அப்படியா?” என ஆச்சரியத்தோடு கேட்டு சந்தேகப் பார்வை பார்க்க வைத்தது அந்த வளையல்! வாழ்க்கையில் அடிபட்டு சிதிலமாகிப் போய் ‘வாழ்கிறேன்’ என வாழ்ந்து கொண்டிருக்கும் பொன்னுவுக்கு அந்த வளையலும் அதனோடு ஒட்டிய கடந்தகால நினைவுகளும், அந்த நினைவுகளோடு கைக்கோர்க்கும் தன் பள்ளிகாலத்து சந்தோஷ ங்களும் மனதை உற்சாகப்படுத்தும் ‘டானிக்’ போன்றவை. அதனால்தான் அந்த வளையலைப் பார்க்கும் போதெல்லாம் தன்னை மறந்துபோவாள்.

பள்ளிப் பருவத்தில் பாடசாலையில் சந்தோஷமாய் திரிந்த அந்த காலம் நிழற்படமாய் மனசுக்குள் ஓடியது. பாடசாலையில் நல்ல பெறுபேற்றைப் பெற்றுத் தரக்கூடியவள் என அனைவரும் கொண்டிருந்த நம்பிக்கையை பொய்யாக்காமல் சிறப்பாக சித்தியெய்தி, உயர்தரம் கற்கத் தகுதி பெற்றாள் பொன்னு. தான் படித்து சிறந்ததொரு உத்தியோகத்தில் சேர்ந்து தன் குடும்பத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் பொன்னுவின்

மனசு பூராவும் நிறைந்து நின்றது. தோட்டத்தில் கவ்வாத்து வெட்டிக்கொண்டிருந்தவேளை மின்னல் தாக்கியதில் கைகால்களின் இயக்கம் குறைந்து பார்வையும் மங்கிப்போன பொன்னுவின் தகப்பன் முத்துவுக்கு மகளின் ஆசை புரிந்தாலும் தன் இயலாமையை வார்த்தைகளால் உறுதிப்படுத்திவிட்டான்

"பொன்னு! நீ வீட்டுக்கு மூத்தவ! ஓனக்குப் பொறவு இன்னும் மூணு பேரு இருக்காங்க. ஒங்க அம்மாவோ சீக்காளி. ஏன் நெலமய நீ பாத்துக்கிட்டுத்தானே இருக்கிற? ஏ ஒத்த சம்பளத்துல கால் வயித்து கஞ்சி குடிக்கவே அல்லாடிக்கிட்டு இருக்கோம். இந்த லெட்சணத்துல ஒன்ன எப்புடி புள்ள நா படிக்க வைப்பேன்? அதுவும் நீ பொட்டப்புள்ள. நாளக்கி கண்ணாலமாகி இன்னொருத்த வீட்டுக்கு போயிடுவ. ஒன்னய படிப்பிச்சு எனக்கென்ன லாபம்? பேசாம இந்த ஆசய தூக்கி ஒடப்புல போடு. அன்னிக்கே கங்காணி அய்யா கைய கால புடிச்சு கொழுந்தெடுக்கிற வேலக்கி பேரு பதிஞ்சுப்புட்டேன். நாளக்கி வேலக்கி போற வழியப்பாரு" அவரது பேச்சில் இருந்த யதார்த்தமான தமது நிலைக்கு ஏற்ற நியாயம் புலப்பட, மறு வார்த்தை பேசாமல் தோட்ட மக்களுக்கே சொந்தமான அந்த பரம்பரைத் தொழிலுக்குத் தயாரானாள் பொன்னு. மனசை நிறைத்திருந்த ஆசைகளை எரித்துவிட்டு கூடையை சுமக்க ஆரம்பித்தாலும்கூட, பாடசாலை செல்லும் பிள்ளைகளை காணும் போதும் பள்ளிக்கூடத்தை கடந்து செல்லும் போதும் மனசுக்குள் முகிழும் ஆதங்கத்தை இன்று வரையிலும் கூட பொன்னுவால் நிறுத்தவே முடியவில்லை!

கொழுந்தெடுத்து கையில் கொஞ்சம் காசு வந்தவுடன் 'வீட்டுக்கு தன்னாலும் உதவ முடிகிறது' என்ற எண்ணம் அவளுக்கு மிகுந்த நிம்மதியைத் தந்தது. நோயாளியாய் பாதிநாள் படுக்கையிலேயே கிடக்கும் தாயிடம் சம்பளத்தை

கொடுத்தபோது தாய் முகத்தில் தெரிந்த சந்தோஷமும், வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டு தம்பி விட்ட ஏப்பமும் தன்னை ஒரு பெரிய மனுஷியாய் எண்ணி புளகாங்கிதம் அடைய வைத்தது. தம்பிகளையாவது “ஸ்கோலுக்கு” அனுப்ப வேணும் எனத் திட்டமிட்டவளை மீண்டும் முடக்கி விட்டான் முத்து.

“ஏம்மா பொன்னு! ஒனக்கு நம்ம வீட்டுலயிருந்து படிச்சானே குமாரு. அவன ஞாபகமிருக்கா? தூரத்து ஒறவு மொறயில அவன் எனக்கு தங்கச்சி மகன் முற வரும்” என்ற தந்தையிடம் “ஆமாம்பா சின்ன வயசுல நாம எல்லாரும் சேந்து வெளயாடுவமே! திடீருன்னு ஒரு நா சொல்லாம கொள்ளாம ஓடி போனானே அந்த குமாருதானேப்பா?” என்றவளை செல்லமாக ஏசினான் முத்து. “அட என்னம்மா நீ! வயசுல பெரியவன். அத்தை பையன் வேற. இப்புடியா அவன் இவன்னு கதைக்கிறது? அன்னிக்கு ஹட்டனுக்கு போனப்ப அவங்கம்மாவ வழியில பாத்தேன். வீட்டுக்கு கூட்டிக்கிட்டு போனாங்க. இப்ப குமாரு பிசினஸ் பண்ணுறானாம். நாளைக்கி அவங்க ரெண்டுபேரும் வாறாங்க. நீபாட்டுக்கு நாளக்கி வேலக்கி கெளம்பிடாத” என்றார்.

“என்னப்பா நீங்க! அநியாயமா ஒருநா சம்பளம் வீணா போகுமில்ல. அம்மா வீட்டுலதானே நிக்கிறாங்க அவங்க கவனிச்சுக்குவாங்க” என்ற பொன்னுவை,“அடிச்சேன்னா பாரு! நாளக்கி அவங்க ஒன்ன பொண்ணு பாக்க வாறாங்கன்னு சொல்லுறேன். நீ என்னடான்னா அம்மாவ நிக்க சொல்லுற?” என்று ஏசியபடி முத்து நகர, விக்கித்துப்போனாள் பொன்னு!

திடீரென நிலைதடுமாறிய பொன்னு தன்னை சுதாகரிக்குமுன் கொழுந்துகூடையுடன் கீழே விழுந்து விட்டாள். “அட, பழைய ஞாபகத்துல ரோட்டுல என்னா கெடக்குன்னு கவனிக்காம சாணியில கால வச்சுப்புட்டனே! நல்லவேள அடிகிடி

ஒண்ணும் படல." ஏன எண்ணியபடி,எழும்பிய பொன்னுவுக்கு, தன் திருமணம் கூட தன்னை வாழ்க்கையிலிருந்து சறுக்கி விழ வைத்தது மட்டுமல்லாது,பலத்த அடியையும் தந்துவிட்டதாகப் பட்டது.

குமார் தன் தாய் சரசுவோடு வந்தான். உற்றமும் சுற்றமும் சேர்ந்து திருமணத்தை பேசி முடித்து வைத்தது. தன்னால் முடிந்தளவு சீர் செனத்தி, நகை என முத்து செய்தாலும் சரசுவுக்கு அதில் திருப்தியில்லை என்பது பொன்னுவுக்கு புரிந்தது. புகுந்த வீட்டுக்குள் அவள் நுழைந்தபோது... பாவம் அவள்! பிறந்த வீட்டிலேயே தன் சந்தோஷத்தையும், நிம்மதியையும் தாரைவார்த்துவிட்டு வந்ததை அறிந்திருக்கவில்லை!!

தன்னை மனைவியாக ஏற்றுக்கொண்டாலும் குமார் கொஞ்சம் வித்தியாசமாக... சற்று ஒதுங்கியே இருந்தது பொன்னுவை யோசிக்க வைத்தாலும், தன் தாயாரோடும் அவன் அதே போக்கைக்கடைப்பிடிப்பதைப்பார்த்ததும் 'அவரது குணமே இதுதான்' என நிம்மதி அடைந்தாள். மாமியாரான சரசுவும் அதிகம் பேசாமல், எதிலும் ஒரு அளவோடு இருந்து கொண்டாள். சீதனம் இல்லாமல் வந்தவள், தன் மகனுக்கு இதைவிட நல்ல சீதனத்தோடு பெண் எடுத்திருக்கலாம் என்ற எண்ணமே தன்னோடு அத்தை அதிகம் பேசாததற்கு காரணம் என்பதை உணர்ந்தபோது, பொன்னுவுக்கு என்னவோ போலிருந்தது. சரசுவின் குத்தல் கதைகளை கேட்க நேரும்போதெல்லாம் அவற்றால் ஏற்படும் மனஉளைச்சலைவிட, அந்த புலம்பலைக் கேட்டும், மௌனியாய் இருக்கும் தன் கணவனை நினைத்தே கலங்குவாள் பொன்னு.வேறு வழியின்றி இந்த குடும்பத்துக்காக ஓடாகத் தேய மட்டுமே தன்னால் முடியும் என்பதை உணர்ந்து எல்லா வேலைகளையும் தானே இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வாள். பொன்னு தன் மனசறிந்து முதன்முதல் சந்தோஷ

த்தில் மூழ்கிப் போனது, தான் ‘உண்டாகி” இருப்பதை தெரிந்து கொண்ட பொழுதில்தான்! விடயம் தெரிந்ததும் ‘ஆ, அப்படியா?’ என ஒரு சேதியாகக் கேட்டுவிட்டு நகர்ந்த கணவனின் செயலைக் கூட மனதில் வாங்காமல் தனக்குள்ளேயே ஆனந்தத்தில் திளைத்துப் போனாள் அவள் விபரம் அறிந்து தன்னைப் பார்க்க வந்த தாயின் மடியில் முகம் கவிழ்ந்து ஏன் அழுகிறேன் என்ற உணர்வேயின்றி அழுதாள். அவர்கள் தனக்காக கொண்டு வந்திருந்த பட்சணங்களை சின்னப்பிள்ளையின் சந்தோஷத்துடன் சாப்பிட்டாள். முகம் கொடுத்து கதைக்காத மருமகனையும், ஒப்புக்கு வரவேற்ற தங்கச்சியையும் எண்ணி உள்ளுக்குள் குமைந்தாலும் மகளின் சந்தோஷம் பெருத்த ஆறுதலாயிருந்தது முத்துவுக்கு.

பொன்னுவின் குழந்தையும் அவளது கனவுகளைப் போலவே வளர்ந்து வந்தது. “பொன்னு ஓங்க அப்பா ஏதாச்சும் சொன்னாரா? இது தலைச்சன்புள்ள. கட்டாயம் வளகாப்பு செய்யணும். இது பொண்ணு வீட்டு விசேஷமில்லயா?’ என்ற மாமியாரிடம் “அப்பா ஒண்ணும் சொல்லலியே அத்தை” என்றாள். “ஆமா! ஓங்க அப்பாவுக்கு இது ஒண்ணும் தெரியாது. வளகாப்பு, புள்ள பெத்த செலவு எல்லாமே பொண்ணு வீட்டுக்காரங்கதா செய்யணும். அதுவும் வளகாப்புக்கு போடுற மொத சோடி வளவி தங்கமா இருக்கனும். வெள்ளி வளவி சோடியும்கூட வாங்கியாகனும். இதப்பாரு! நா சொல்லிப்புட்டேன். வெவரமா ஓங்க அப்பாக்கு சொல்லி அனுப்பிடு. கடைசியில ஒன்னுமே தெரியாதுன்னு கைய விரிச்சுட வேணாம்” என கூறியபடி நகர்ந்த மாமியாரிடம் என்ன சொல்லுவது என புரியாமல் பொன்னு நிலைகுலைந்து போனாள். ‘இப்ப என்னோட சம்பளமும் கெடயாது. தம்பிக வேற படிக்கிறாங்க. கலியாண செலவையே இருந்த நகைகள அடகு வச்சு

செஞ்சு முடிச்சாரு. இப்ப தங்க வளவி, வளகாப்பு செலவுன்னு சொன்னா அப்பா என்ன பண்ணுவாரு?" என யோசித்து தலை சுற்றியது பொன்னுவுக்கு. கடைசியில் வேறு வழியின்றி இதுவரை காலமும் எந்த தேவைகளையும் கணவனிடம் கேட்டறியாத பொன்னு அவனிடம் தன் தந்தையின் நிலையை கூறி மன்றாடினாள். "இதப்பாருங்க, அப்பா ரொம்ப பாவமுங்க!. இந்த செலவுக்கு அப்பா என்ன பண்ணுவாரு? மொதல்ல இத எப்புடி நா போயி அப்பாகிட்ட சொல்லுவேன்? வேணாங்க! அப்பாவ வருத்திக்கிட்டு ஒரு வளகாப்பு வேணாங்க!" என அழுகையோடு கூறிமுடித்தவளை ஒருகணம் பார்த்த குமார் என்ன நினைத்தானோ, "இப்ப இந்த செலவு ஒண்ணும் தேவயில்ல" என்றான். 'அப்பாடா' என்றிருந்தது பொன்னுவுக்கு.

அடுத்து வந்த ஒரு நாளில் "என்ன வளகாப்பு நாளும் நெருங்குது. ஓங்க அப்பா கெணத்துல போட்ட கல்லாட்டம் இருக்காரு. நீ சொன்னியா இல்லியா?" என கேட்டு பொண்டு வந்த அத்தையிடம் பொன்னு பதில் சொல்லுமுன் "என்ன கேட்டீங்க" என்றபடி வந்தான் குமார். "அது இல்லடா…" என மழுப்ப பார்த்த தாயிடம் "அம்மா இந்த பேச்ச இன்னியோட நிப்பாட்டு. மாமாகிட்ட போயி எம்பொண்டாட்டி வளகாப்புக்கு இவ்வளவு பணம் வேணுமின்னு சொல்ல சொல்லுறியா?. வெக்கமாயில்ல.? நீதானே எனக்கு பொண்ணு பாத்து கட்டி வச்ச. நா கலியாணம் பண்ணி வையின்னு கெஞ்சுனேனா? ஒனக்கு வேனுமின்னா நீயே போயி கேளு!." என கோபத்தில் கத்த, அவன் வாயைத் திறந்தால் தனக்குத்தான் ஆபத்து என்பதை உணர்ந்த சரசு வாய் மூடி மௌனியானாள்.

என்ன நினைத்தாளோ தன் செலவிலேயே பொன்னுவுக்கு வளைகாப்பு நடத்த தீர்மானித்தாள் சரசு. பொன்னுவின் குடும்பத்தை அழைத்து விருந்து போட்டு கடைசியில் தன்

கையாலேயே ஒரு சோடி வளையலை பொன்னுவுக்குப் போட்டுவிட்டாள்!. குமார் கூட அதிசயித்துப் போனான். அத்தைக்கு தன் மேல் பாசமிருப்பதை உணர்ந்து பொன்னு கண்கலங்கினாள்.

கையில் ஆண்குழந்தையோடு வந்திறங்கிய பொன்னுவை ஆரத்தி எடுத்து வரவேற்றாள் சரசு. பேரக்குழந்தையை வாங்கி உச்சிமோந்தாள். அந்த குழந்தையும் தாய்க்கும் பாட்டிக்கும் இடையில் ஒரு சுமுகமான பாலத்தை தான் கட்டி விட்டதை அறியாமலே சிரித்தது.

ஆனாலும் சரசுவுக்கு இருந்திருந்து பழைய குணம் தலை தூக்கும். அதுவும் குமார் இல்லாதபோது தன்னை சார்ந்த உறவினர்கள் வந்திருக்கும்போது அங்கு பொன்னுவின் தலை உருளும்! “என்ன செய்ய, நா பெத்தது ஒத்த ஆம்புளப்பய. அவனுக்கு நல்ல சீதனத்தோட பொண்ண எடுத்திருக்கலாம். ம்ஹூம், சொந்தம் பந்தமின்னு பாக்க போயி ஒண்ணுக்கும் வக்கில்லாதவள எம்பையன் தலயில கட்டி வச்சுட்டாங்க. வளகாப்பு, புள்ள பெத்த செலவு எல்லாமே நாமதான் பண்ண வேண்டியிருக்கு! பொன்னு கையில போட்டுருக்கிற வளவி நா செஞ்சு போட்டது. இந்த காலத்துல இப்புடி தங்கவளவி செஞ்சு போடுற அத்தைமாரு யாராச்சும் இருக்காங்களா?” அவளது ஆலாபனையை கேட்பதற்கு கஷ்டமாயிருந்தாலும் அதிலுள்ள நியாயம் புலப்பட, பொன்னு பொறுத்துக் கொள்வாள். “அத்த சொல்லுறது சரிதானே. எங்கயாச்சும் மாமி மருமகளுக்கு வளவி செஞ்சு போடுறாங்களா? அப்பா செய்யாட்டாலும் தானாச்சும் சடங்குகள சரியா செய்யனுமின்னு நெனச்சு, செஞ்சிருக்காங்க. இந்த குணம் யாருக்கு வரும்?” என எண்ணிக் கொள்வாள். அதனால் இற்றைவரை பொன்னு அந்த வளையல்களை தன் கையிலிருந்து கழற்றவே இல்லை.

அடுத்தடுத்து பொன்னு நான்கு குழந்தைகளைப் பெற்று, உருக்குலைந்து போனாள். குமார் உழைத்து கொண்டு வந்து கொடுத்தாலும், அதே ஒட்டாத, விட்டேத்தியான குணத்துடனேயே இருந்தான்.

சரசுவுக்கு வயதாகி விட்டது. நோயில் விழுந்த அவளை தன் தாயைக் கவனிக்குமாப்போல் பராமரித்தாள் பொன்னு. படுக்கையோடு விழுந்து விட்ட சரசுவுக்கு, சகல பணிவிடைகளையும் முகம் கோணாது செய்யும் பொன்னுவைப் பார்க்க கவலையாயிருக்கும்.

ஒருநாள் இரவு எல்லா வேலைகளையும் முடித்து விட்டு களைத்துப் போய் அத்தையின் கட்டிலருகே பாயை விரித்து படுக்கப் போன பொன்னு, அத்தை புரண்டு புரண்டு படுப்பதைப் பார்த்து,"என்ன செய்யுது அத்தை" எனக் கேட்டாள். "வயித்துக்குள்ள என்னமோ செய்யுது." என சொல்லிக் கொண்டே தடுமாறி எழுந்தவள், தன்னை சுதாகரிக்குமுன், வாந்தி வந்து விடவே அப்படியே பொன்னுவின் மேல் எடுத்து விட்டாள்! சரசுவை சுத்தம் செய்து விட்டு இடத்தையும் கழுவி, தானும் உடை மாற்றிக் கொண்டு வந்த பொன்னு,"இஞ்சி போட்டு தேத்தண்ணி குடிக்கிறிங்களா அத்தை? சாப்பாடு செமிக்கல போலயிருக்கு." என்றாள். சரசுவுக்கு அழுகை வந்து விட்டது. எதுவுமே நடக்காத மாதிரி வந்து கேட்கிறாளே என்ற எண்ணம் தலை தூக்க, முகத்தை மூடிக் கொண்டு அழுது விட்டாள் சரசு."ஒனக்கு நா பெரீய அநியாயம் பண்ணிப்பிட்டேம்மா" என கதறி அழுதாள். அந்த சம்பவத்தோடு துயருற்ற நிலையிலிருந்த சரசு இனிமேலும் பொன்னுவுக்கு கஷ்டம் தரக்கூடாது என நினைத்தாளோ என்னமோ ஒரு நாள் காலைப்பொழுதில் கண்மூடினாள்!.

காலம் நகர்ந்தது. குழந்தைகள் வளர வளர செலவும் அதிகரித்தது. தாயின் மறைவின் பின் குமார் மாறிப் போனான். இரவு வீட்டுக்கு வருவது கூட குறைந்து போனது. எந்த நேரம் வருவான் எப்போ போவான் என பொன்னுவுக்கே தெரியாது. வேலையும், குழந்தைகளைக் கவனிப்பதுமாக அவள் பொழுது சரியாக இருந்தது. எனவே கணவனின் மாற்றத்தை அவள் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை. தேவை என்று கேட்டால் பணம் கொடுப்பான். பிள்ளைகள் ஏதேனும் கேட்டால் வாங்கி கொடுப்பான். அதை விடுத்து குடும்பத்துடன் கலகலப்பாக பேசுவதோ எங்கேனும் கூட்டிச்செல்வதோ கிடையாது.

ஒருநாள் பக்கத்துவீட்டு வள்ளி "பொன்னு, பொலிசு நடமாட்டம் கூடவா இருக்கு. ஒம்புருசனுக்கிட்ட சொல்லி வையி" என்றபோது "ஏங்கா அவருகிட்ட சொல்ல சொல்றீங்க" என வெகுளியாய் கேட்டாள். "அட ,என்னம்மா நீ! அநியாயத்துக்கு அப்புராணியாய் இருக்கிறியே. கலியாணம் முடிச்சு நாலு பிள்ளைங்கள பெத்துப்பிட்ட. இன்னும் ஒம்புருசனப் பத்தி தெரிஞ்சுக்காம இருக்கியே! சரசுஅக்கா எவ்வளவோ சொல்லிப் பாத்து குமாரு கேக்காம போனதால தானே ஒரு கலியாணம் பண்ணி வச்சா! இவன பத்தி தெரிஞ்சு ஒத்தரும் பொண்ணு கொடுக்கல. நீ அகப்பட்டுக்கிட்ட. ஆனாலும் கலியாணத்துக்கு அப்புறம் கொஞ்சம் கொறஞ்சி தான் இருந்திச்சு. ஆனா சரசக்கா போனப்பறம் பழயமாதிரி ஆயிப்பிட்டானே!!" என சொல்ல,பொன்னுவுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தாற் போலிருந்தது. "என்னக்கா சொல்றீங்க? எனக்கு ஒண்ணுமே புரியலியே!!" என்று புலம்பினாள் பொன்னு.

அவளின் காதோடு வள்ளி சொன்ன சேதி கூரிய ஈட்டியாய் மூளைக்குள் பாய்ந்து கொல்லாமல் கொன்றது. விறைத்துப் போனாள் பொன்னு.! "அடக்கடவுளே, அதையா

தொழிலாய் செய்யுறாரு! கள்ளசாராயத்த குடிச்சுப்பிட்டு எத்தன பேரு சாவுறாங்க. அத காய்ச்சி வித்து வந்த காசிலயா நாம வயிறு கழுவுறோம்? சாமீ .....எங்கள தண்டிச்சுப்பிடாதய்யா.... அத்தை இதப்பத்தி ஒருநா கூட சொல்லலியே கடவுளே! அவர நா எப்புடி திருத்துவேன்" என மனசுக்குள் புலம்பித் தீர்த்தாள். அப்போதுதான் "நா ஒனக்கு துரோகம் பண்ணிப்பிட்டேன்" என அழுத அத்தையின் அழுகைக்கு அர்த்தம் புரிந்தது.

எல்லாம் எல்லை மீறி விட்டது. அவனைத் திருத்த வழியேயில்லாமல் பொலிஸ் அவனை கைது செய்தது. அவனை வைத்து உழைத்த முதலாளிமார் தப்பித்துக் கொள்ள, கைக்கூலியான குமார் அகப்பட்டுக் கொண்டான். முதலாளியைக் காட்டிக்கொடுக்க மனமின்றி சிறையில் அகப்பட்டான். குழந்தைகளைக் காப்பாற்ற மீண்டும் கொழுந்தெடுக்க ஆரம்பித்தாள் பொன்னு. மூத்தவனையும் அடுத்தவனையும் பாடசாலையில் விட்டுவிட்டு மற்றைய இருவரையும் "புள்ள காம்புறாவில்" விட்டுவிட்டு கொழுந்தெடுக்கப் போகும்போது மனசு இறுகித் தவிக்கும். ஆனாலும் அரை வயிற்றுக் கஞ்சி என்றாலும் உழைத்து சம்பாதித்த காசில் குடிக்கிறோம் என்ற திருப்தி இருந்தது. என்னதான் இறுக்கி செலவழித்தாலும் பிள்ளைகளின் படிப்புசெலவு, சுகயீனம் என திடீர்செலவு வரும்போதெல்லாம் வீட்டிலிருந்த பாத்திர பண்டங்கள் அடகுக் கடைக்கு செல்ல ஆரம்பித்தன. தொடர்ந்து அவளிடமிருந்த நகைகளும் சென்றன. ஆனாலும் பொன்னு அந்த தங்க வளையல்களை மாத்திரம் கழற்றவேயில்லை!

பழைய நினைவுகளை இரை மீட்டியபடி, கொழுந்து நிறுக்கும் இடத்துக்கு வந்து, கொழுந்தை நிறுத்து விட்டு, புள்ளகாம்புறாவில் இருந்து பிள்ளைகளை அழைத்துக் கொண்டு அரக்கப் பரக்க வீட்டுக்கு வந்தாள். அவசர அவசரமாக இரவு

சமையலை முடித்து குழந்தைகளோடு அமர்ந்து கதைத்தபடி சாப்பாட்டை முடித்தாள். இந்த ஒரு நேரம் தான் அவளுக்கு குழந்தைகளோடு அன்பாக கதைக்க கிடைக்கின்ற நேரம். குழந்தைகளை உறங்க பண்ணியபின் நாளையை பற்றிய எண்ணம் விசுவரூபம் எடுத்ததில் பொன்னுவுக்கு தூக்கம் வர மறுத்தது.

விடிகாலையில் யாரோ கதவைத் தட்டுகிற சத்தம் கேட்டு கதவைத் திறந்த பொன்னு ஆச்சரியப்பட்டுப் போனாள். குமாரைக் கூட்டிக் கொண்டு வந்த பொலிஸ் "இவரோட ஒடம்பு நிலை சரியில்லாததால தண்டனைக்காலத்த கொறச்சு விடுதலை பண்ணிட்டாங்க." என்று கூறிச் சென்றான். குமாருக்கு காசநோய் பீடித்திருந்தது.வைத்தியரின் ஆலோசனைப்படி தொடர்ச்சியான மருந்தும், சத்தான உணவும் அவனின நோயைக் குணப்படுத்தும் என்பது புரிய, வீட்டிலிருந்த கொஞ்சநஞ்ச சாமான்களும் விற்கப்பட்டு மருத்துவ செலவுக்கு பயன்பட்டது.

அனைத்துமே விற்கப்பட்டு விட்ட நிலையில், குமாரின் வைத்திய செலவுக்கு இனி என்ன செய்வது என புரியாத நிலையில், வேறொன்றுமே செய்ய வழியில்லாத நிலையில் தன் கையிலிருந்த அந்த ஒரு சோடி தங்க வளையல்களை தீர்க்கமாகப் பார்த்தாள் பொன்னு.

"இத கழட்டுறத நெனச்சாலே ஒடம்பு பதறுது. ஏ உசிரயே கழட்டுற மாதிரி இருக்கு. ஆனா இத போட்ட மகராசி தன் மகனுக்காக போட்டாங்க. அது மட்டுமில்லாம இந்த நோயி கொணமாயிருச்சின்னா அவர நல்லபடியா திருத்தி அந்த மகராசி ஆசப்பட்ட மாதிரி சந்தோஸமா வாழலாம். அத்தை போட்ட வளையல் அவங்க மகனுக்கு பயன்படாம வேற

என்னத்துக்கு?" என தீர்மானித்தவளாய் வளையல்களோடு வங்கிக்குச் சென்றாள்.

அவளது முறை வர, உள்ளே சென்று அமர்ந்தவள், காப்புகளைக் கொடுத்துவிட்டு காத்திருந்தாள். வளையல்களை சோதித்த வங்கி ஊழியர் கோபமாக முறைத்தார். "இப்புடி எத்தன பேரு கௌம்பியிருக்கறீங்க? நாங்க தங்க சாமான்களைத் தான் அடகு எடுப்போம் இப்பிடி "தங்கத்தண்ணி" பூசின பித்தள நகைகள எடுக்க மாட்டோம். எங்கள பாத்தா எளக்காரமா இருக்கா ஒங்களுக்கு? போங்கம்மா போயி பழைய இரும்பு சாமான் விக்கிற கடையில இத போடுங்க" என ஏசியபடி அவள்முன் வளையல்களைத் தூக்கிப் போட்டார். போட்ட வேகத்தில் அந்த "தங்க" வளையல்கள் உருண்டோடி, கீழே விழுந்து சுழன்று ஓய்ந்தன. பொன்னுவின் மனசும் அந்த வளையல்களைப் போலவே…!!

# தீக்குள் விரலை வைத்தால்..

**அ**ன்றைய என் திட்டப்படி காலை பத்து மணிக்கு அந்த இல்லத்தில் நான் நின்றாக வேண்டும். வேலையை முடித்துக் கொண்டு நேரத்தைப் பார்த்தேன். இன்னமும் நேரம் இருக்கிறது. திட்டமிட்டபடி வேலை செய்வது என்பது எனக்கு பழக்கமாகி விட்டது. ஆசிரியராயிருந்து ஓய்வு பெற்று நான்கைந்து வருடங்களுக்கு மேலாகியும் தொட்டிற் பழக்கமாய் என்னில் தொற்றிக் கொண்ட விடயம் இதுவாகும்.

என் எண்ணப்படியே நகரின் மத்தியிலிருந்த அந்த முதியோர் இல்லத்தில் பத்து மணிக்கு “டாணென்று” இறங்கி விட்டேன். வீட்டில் பொழுதைக் கழிக்கத் தொடங்கியபின் ஏற்பட்ட இன்னுமோர் புதுப்பழக்கம் இது. முதியோர் இல்லம், சிறுவர் பராமரிப்பு நிலையம், அனாதைகள் இல்லம், புனர்வாழ்வு இல்லம் போன்ற இடங்களுக்குச் சென்று அவர்களோடு பொழுதைக் கழித்து, நானும் அவர்களுமாய் நிம்மதியை பகிர்ந்து கொள்வது வழக்கம். இயலுமானவரை வீட்டில் ஏதாவது பட்சணம் செய்து கொண்டு போவது வழக்கம். அல்லது பிஸ்கட், பழங்கள் என வாங்கிக் கொண்டு செல்வேன். ஆனால் முதியவர்களாகட்டும், சிறுவர்களாகட்டும் என்னைக் கண்டதும் மகிழ்வோடு வரவேற்பார்களேயன்றி நான் என்ன கொண்டு வருகிறேன் என ஒரு நாளும் எதிர்பார்த்ததேயில்லை. என்னை ஆச்சரியப்பட வைக்கின்ற விடயமிது. அன்புக்காக ஏங்கி தவியாய் தவிக்கும் இவர்களுக்கு உணவும் கூட இரண்டாம்பட்சம் தான்.

உள் நுழைந்த என்னை காலை வெயிலில் முற்றத்தில் நடந்து கொண்டிருந்த பல முகங்கள் இன்முகத்தோடு வரவேற்றன. அவர்களோடு சற்று குசலம் விசாரித்து விட்டு "இருங்கள் தலைவியிடம் கதைத்து விட்டு வருகிறேன்." எனக் கூறியபடி உள்ளே சென்றேன். கோவைகளுக்குள் தலையை நுழைத்தபடி கருமமே கண்ணாயிருந்த தலைவி சாந்தாவிடம் "குட்மோர்னிங் மெடம். என்ன ரொம்ப வேலையோ" என கேட்டபடி அவரின் முன்னால் அமர்ந்தேன்.

"வாங்க, வாங்க" என என்னை வரவேற்றவர்,"நேற்று நம்ம இல்லத்துக்கு புதுசா ரெண்டு பேர் வந்திருக்காங்க. அவங்கள் பத்தின விபரங்களை பதிந்து கொண்டு இருந்தேன்." என்றார்.

"அப்படியா எங்கே இருந்து வந்திருக்காங்க" என்ற என் கேள்விக்கு,"ஒருத்தர் கொழும்புல இருந்தும், மற்றவர் புசல்லாவயில இருந்தும் வந்திருக்காங்க. அதிலயும் புசல்லாவயில இருந்து வந்தவரு, வந்த நேரந் தொட்டு கண்கலங்கி அழுதுகிட்டே இருக்காரு. பார்க்கவே பரிதாபமா இருக்கு. ஆறுதல் சொல்லலாமின்னா எங்க, அவரு கவலய கூட்டி விட்டுடுவமோ என பயமாயிருக்கு," என்றார்.

"நான் போய் பார்க்கலாமில்லயா" என்ற என்னை செல்லமாக முறைத்து "இதுக்கு கூடவா அனுமதி கேக்கனும்? என்றார் அவர். சிரித்தபடியே வெளியே வந்தேன் நான்.

வெளியே வந்து எல்லாரிடமும் நலம் விசாரித்து, அவர்களுடைய கவலைகள், சந்தோஷங்களை பகிர்ந்து அவர்களோடு உணவருந்த தயாரான போது தான் புதிதாக வந்த இருவரும் அந்த கூட்டத்தில் இல்லை என்பது புரிந்தது எனக்கு. சுற்றி இருந்தவர்களிடம் கூறிவிட்டு ஆண்களுக்கென அமைக்கப் பட்டிருந்த அந்த கட்டடத்துக்குள் நுழைந்தேன்.

வரண்டாவில் உட்கார்ந்து கதைத்துக் கொண்டிருந்த அவர்களின் அருகில் நான் போய் நின்றதும் யாரென புரியா பயத்துடன் எழும்ப முனைந்தனர் இருவரும்.

“அடடே, ஒக்காருங்க, நா. அடிக்கடி இங்க உள்ளவங்கள பாக்க வாறது வழக்கம். இன்னிக்கு புதுசா வந்திருக்கீங்கனு தெரிஞ்சதும் பார்க்க வந்தேன், என்றபடி நானும் அமர சங்கோஜம் விலகி அவர்களும் அமர்ந்தனர்.

“ஓங்க பேரு என்னய்யா” என்ற என் கேள்விக்கு “துரைசிங்கம் அம்மா, நா கொழும்புல வேல பாத்தேன். மனைவி போனமாசந்தாங்க தவறிப் போனாங்க. எங்களுக்கு புள்ளைங்க கெடையாது. அவளும் போனப்பறம் எனக்குன்னு யாருமே இல்லன்னு தோணிச்சு. அதான் இங்க வந்து சேந்துட்டேன்.” என எல்லாவற்றையும் கொட்டினார் முதலாமவர்.

“சரியான எடத்துக்குத்தா வந்திருக்கீங்க” என்றபடி மற்றவரைப் பார்த்தேன். தலைகுனிந்து அமர்ந்திருந்தார். “ஓஹோ இது தான் மெடம் சொன்ன ஆளா? என மனசுக்குள் நினைந்தபடி “ஐயா, ஓங்கபேரு என்னன்னு தெரிஞ்சுக்கலாமா” என வினயமாகக் கேட்டேன்.

நிமிர்ந்து பார்த்த அந்த கண்களில் தெரிந்த சோகம் மனசை நெருடியது. அவரைக் கூர்ந்து பார்த்தபோது எங்கேயோ பார்த்த, பழகிய முகஜாடை தெரிய “ஐயா, நீங்க எந்த ஊரு?” என்றேன். குனிந்தபடியே “புசல்லாவ” என்றார். “சொந்த ஊரே அதுதானா” என நான் வினவ,“இல்லீங்க, நா பொறந்தது வளர்ந்தது எல்லாமே நெல்லுமலைங்க, பொழைக்க போன ஊருதா, புசல்லாவ” என பதில் வந்தது.

“ஓங்க பேரு என்னய்யா”

“பாலகிருஷ்ணனுங்க”

“நாங்கூட அந்த பக்கத்து ஸ்கூல்ல படிப்பிச்சு இருக்கே. கிட்டத்தட்ட பத்து வருசமா, அந்த பக்கத்துல கலாபொக்கன்ற எடத்துல பெரிய ஸ்கூல் இருக்கில்லயா. அங்கதா நா வேல செஞ்சேன்” என்றேன் நான்.

சடாரென்று நிமிர்ந்து பார்த்த அவர் “நீங்க... நீங்க சியாமளா டீச்சருதானுங்களே’ என்ன தெரியலியா டீச்சர் ஏம் மக, மகன் எல்லாரு ஓங்ககிட்ட படிச்சாங்களே நா... நா. ஆனந்தி, தியாகுவோட அப்பா”

“அடடா, அதுதா எங்கேயோ பாத்த முகமா இருக்குன்னு யோசிச்சேன். ரொம்ப ஒடஞ்சு போயிட்டீங்கய்யா. அது தா சட்டுனு அடையாளம் தெரியல. ஆமா, இப்ப ஆனந்தி, தியாகு, அவங்கம்மா எல்லாரும் நல்லாருக்காங்க தானே” என கேட்ட எனைப் பார்த்து அழத் தொடங்கினார் அவர்.

“என்னய்யா, என்னாச்சு அவங்களுக்கு நல்லாருக்காங்க தானே” என மீண்டும் பதறியபடி கேட்ட என்னைப் பார்த்து “ஆனந்தியும் தியாகுவும் நல்லாருக்காங்க டீச்சரு. தியாகுவோட அம்மா தான் தவறிட்டாங்க. அது ஆனந்தியோட கவலையிலயே செத்துப் போச்சுங்க” என கூறிவிட்டு குமுறி குமுறி அழுதவரை தேற்ற வழி தெரியாது திணறினேன் நான்.

“ஐயா மனசைத் தேத்திக்குங்க, எனக்கும் நேரமாச்சு. நான் ஒங்கள அப்புறமா வந்து சந்திக்கிறேன். “என்று கூறிவிட்டு வெளியே வந்த நான் தலைவியிடமும் விடைபெற்று கொண்டு நடக்கத் தொடங்கினேன்.

அந்த பாதையோரத்தில் வளர்ந்திருந்த விருட்சங்கள் பாதைக்கு குடைப்பிடித்தபடி நிழலைத்தர ஏகாந்தமான அந்த

வேளையில் மனசும் கூட பழைய நினைவுகளை இரை மீட்டத் தொடங்கியது.

பொதுவாக, தோட்டப்புற பாடசாலைகளில் நிலவும் பெரிய குறை, ஆசிரியர்- பெற்றோருக்கு இடையில் சீரான தொடர்புகளில்லாமை ஆகும். வேலைநாட்களுக்கு மாத்திரமே கூலி என்பதால் “சும்மா வீட்டில் இருப்பது என்பது தோட்டப்புற மக்களைப் பொறுத்தளவில் இயலாத காரியம். அதனால் பாதிப்பு என்னவோ எங்களுக்குத்தான் மாணவரைப் பற்றிய விடயங்களை பெற்றோருக்குத் தெரியப்படுத்த எங்களுக்கு வழியேயிருக்காது. அதனால் பஸ்ஸில் செல்லும் போதோ அல்லது வழியில் காணக்கிடைக்கின்ற சந்தர்ப்பத்திலோ அந்த வாய்ப்பை தவறவிட மனமில்லாது மாணவரின் குறைநிறைகளை அந்தந்த பெற்றோரிடம் கூறுவது ஆசிரியர்களின் வழக்கமாகும். ஆனால் அவர்களுக்கு இருக்கிற அவசரத்திலே “ஏனோதானோ” வென்று கேட்பதும் போகிற போக்கில் “வீட்டிலயும் இப்படித்தாங்க டீச்சரு! கண்ண மட்டும் விட்டுப்புட்டு நல்லா வெளுங்க, நாம என்ன ஏதுன்னு கேக்கவே மாட்டோமுங்க” என்று ‘அசால்டா’ சொல்லிவிட்டுப் போவார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட பெற்றோர் மத்தியில் வித்தியாசமானவராக பாலகிருஷ்ணன் தெரிந்தார். வேலைக்கு நடுவிலும் சாப்பாட்டுக்குப் போகும் போதும் வரும்போதும் தன் பிள்ளைகளின் படிப்புப் பற்றி அக்கறையோடு விசாரிப்பார். வீட்டில், அவர்கள் செய்கின்ற தவறுகளைக் கூறி அவர்களுக்குப் புத்திமதி கூறும்படி சொல்லுவார். ஆனால் என்ன, கொஞ்சம்... இல்லையில்லை தாராளமாகவே முன்கோபக்காரரர்.

ஆனந்தியும் சரி, தியாகுவும் சரி படிப்பில் கெட்டிக்காரர்கள். எழுத்துக்கள் மணிமணியாய் இருக்கும். பாடல், சித்திரம்,

நடனம் என எல்லாவற்றிலும் முன்னணியில் நிற்பார்கள். இதற்கு பெற்றோரின் அக்கறையும் மிக முக்கியமான காரணம் என்பதால் எப்போதும் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பாலகிருஷ்ணனை உதாரணமாக எடுத்து பெற்றோருக்கு புரிய வைப்போம். பாலகிருஷ்ணனுக்கும் அவரது மனைவிக்கும் தம் பிள்ளைகளை எண்ணி மிகுந்த பெருமையும் கர்வமும் இருந்தது.

ஆனந்தி பரீட்சை எழுத தயாரானபோது அதாவது சாதாரண தர வகுப்புக்குள் நுழைந்து ஓரிரு மாதங்களிலே அவளது வயதுக்குரிய உணர்வுகளுக்குள் சிக்கிக் கொண்டாள். தன் பக்கத்து வீட்டுப்பையன் விரித்த காதல் வலையில் வீழ்ந்திட்டாள் இதனை அறிந்து கொண்ட பாலகிருஷ்ணன் திடீரென பாடசாலைக்கு வந்து அவளை விலக்கி வேறு பாடசாலைக்கு விடப்போவதாக கூறினார். நாம் அதிர்ந்து போனோம். “ஐயா! நீங்க சொல்றவரைக்கும் அவ இப்படி ஒரு சிக்கலில இருக்கிறானு நம்ம யாருக்குமே தெரியாது. தன் படிப்பில அவ கொஞ்சமும் கொறையவுமில்ல. அவ விரும்புற பையன் இந்த ஸ்கூலில படிச்சுகிட்டு இருந்தாலாவது நீங்க அவள வெலக்கிறதுல ஒரு நியாயமிருக்கும். அவ இந்த வருஷம் பரீட்சை எழுத போறா, படிப்ப கொளப்பாம பரீட்சையில கவனத்த செலுத்த நம்மால ஆன எல்லா முயற்சியும் எடுப்போம். நாங்க அவளுக்கு சொல்லி புரிய வைக்கிறோம். ஒரு மாசத்துக்கு அப்புறமும் அவள திருத்த முடியாதுன்னு தெரிஞ்சா, அதுக்கப்புறம் ஒங்க விருப்பப்படி செய்யுங்க” என எவ்வளவோ கெஞ்சியதன் பலனாக, மறுக்கமுடியாத காரணத்தால் ஒரு மாசம் தான் பொறுத்துக்குவேன். அதுக்குள்ள அவ அந்த பொடியனோட கதைக்கிறத கண்டனோ… அப்புறம் என்னய நீங்க கொற சொல்லகூடாது. சரியா டீச்சர்” என அதிகாரமாய் கூறி விட்டு போனார் பாலகிருஷ்ணன்.

ஆனந்திக்கு, அன்பாக ஆதரவாக எல்லா டீச்சரும் தனித்தனியே புத்திமதி கூறி படிப்பின் அவசியத்தையும் அவளது தந்தையின் எதிர்பார்ப்பையும், ஏன், முன்கோபத்தையும் கூட தெளிவாக எடுத்து சொல்லி,"இனிமே, எனக்கு படிப்பு மட்டுமே முக்கியம் டீச்சர் வேறு எதையும் நா நெனைக்ககூட மாட்டேன்" என்று அவளாகவே உணர்ந்து கூறுமளவுக்கு கொண்டு வந்தது எங்கள் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை தந்தது.

கிட்டத்தட்ட, ஓரிரு மாதங்கள் சென்றிருக்கும். தியாகுவும் ஆனந்தியும் தொடர்ந்து இருநாட்களாக வரவில்லை. பக்கத்திலிருந்து பாடசாலைக்கு வரும் பையன்களிடம் விசாரித்தபோது வீட்டில் யாருமேயில்லை என தெரியவந்தது. மூன்றாவது நாள், தியாகு மாத்திரம் பாடசாலைக்கு வந்தான். "எங்கே ஆனந்தி" எனக் கேட்ட எங்களுக்கு அவன் கூறிய பதில் நிலைகுலைய வைத்துவிட்டது! "அக்காவ அப்பா, புசல்லவயில உள்ள நம்ம சொந்தக்காரங்க வீட்டுல கொண்டு போயி விட்டுட்டாரு. அங்க உள்ள ஸ்கூல்ல அக்காவ சேத்துட்டாரு அப்பா!" என்றான். என்ன நடந்தது என விசாரித்த போது தான் விடயம் புலப்பட்டது. ஆனந்தி படிப்பில் முழுக்கவனம் செலுத்தி தன்னை உயர்த்த முனைந்து கொண்டிருக்க, அவளது அப்பா இல்லாத சமயமாய், அந்த பையன் இவளோடு பேச முனைந்திருக்கிறான். தன் மனமாற்றத்தைக் கூறி "நான் அப்பா சொன்ன மாதிரி வாழத்தான் ஆசைப்படுகிறேன் என்னை இனி தொந்தரவு செய்யாதீர்கள்" என கெஞ்சி கேட்டுக் கொண்டு அவள் வீட்டுக்குள்ளே நுழையும் போது, அந்த இடத்துக்கு வந்த பாலகிருஷ்ணன் பையனையும் இவளையும் கண்டுவிட்டார், அடுத்த கதை இல்லாமல் ஆனந்தியிடம் ஏதும் விசாரிக்கவும் முனையாமல், அனைவரையும் இழுத்துக் கொண்டு புசல்லாவைக்கு போய், தன் தம்பி வீட்டில் ஆனந்தி

இருக்க வழிசெய்து அங்குள்ள பாடசாலையில் அவளை சேர்த்தும் விட்டார். பரீட்சைக்கு கொஞ்ச நாட்கள் இருக்கும் போது வந்ததாலும் படித்த பாடசாலையிலிருந்து எந்த தரவுகளும் கிடைக்கப் பெறாமையாலும் ஆனந்தியை பரீட்சைக்கு தோற்றும் வகுப்பில் அனுமதிக்காமல் கீழ் வகுப்பில் சேர்த்து இருக்கிறார்கள். பாலகிருஷ்ணனும், தியாகுவும் அம்மாவும் திரும்பி வர தயாராகும் போது ஆனந்தி அழுதபடி தியாகுவிடம் கூறி இருக்கிறாள். "தம்பி, ஸ்கூல்ல எல்லா டீச்சருகிட்டயும் சொல்லிடு. அவங்க சொன்னபடி தான் நான் நடந்தேன். நடப்பேன். அப்பிடீன்னு சொல்லு" தியாகு இதை கூறிவிட்டு தேம்பி தேம்பி அழுதான்.

எல்லாமே கைநழுவிப் போனதில் பாலகிருஷ்ணனைப் பார்க்கவே வெறுப்பாய் இருந்தது எங்களுக்கு எப்படியோ கூடிய அக்கறையையும் காட்டி, தன் அறிவற்ற தன்மையால், பாலகிருஷ்ணனுக்கு தன் மகனையாவது ஒழுங்காக படிக்க வைத்தால் போதும் என மனதுக்குள் நினைத்தும் கொள்வதை விட ஒரு ஆசிரியரால் என்னதான் செய்யமுடியும் சொல்லுங்கள்.

அக்காவுக்கு அப்பா செய்த துரோகத்தை பார்த்ததிலும் எப்போதும் அக்காவுடனே இருந்துவிட்டு இப்போ அந்த பாசம் கைநழுவிப் போனதாலும், அப்பா அடிக்கடி புசல்லாவதற்கு சென்று விடுவதாலும் தியாகுவின் கவனம் படிப்பில் இருந்து நழுவ ஆரம்பித்தது. நண்பர்கள் சகவாசம் கூடியதில் விளையாட்டில் கூடுதல் நேரம் செலவழிய, படிப்பு இரண்டாம் பட்சமானது தியாகுவுக்கு, அதனை பரீட்சைப் புள்ளிகளும் சான்று பகர்ந்தன.

முதல்நாள் வகுப்பில் நடாத்தப்பட்ட, பரீட்சையில் தியாகு ஒழுங்காக பதில் எழுதாமை பற்றி கூற ஒரு ஆசிரியர்

அவனது தந்தையை வந்து காணுமாறு கூறியிருந்தார். என் பாடத்தில் அவனது விடைத்தாளை திருத்த எடுத்த நானும் தடுமாறிப் போனேன். நன்கு தெரிந்த விடையைக் கூட ஏனோதானோவென்று எழுதியிருந்ததை விட அந்த 'கோணல்மாணல்' எழுத்தைப் பார்த்தது தாளைத் திருப்பி மீண்டும் பெயரைப் பார்த்தேன். 'தியாகுவா இப்படி' என யோசித்துக் கொண்டிருந்த வேளை பாலகிருஷ்ணன் எனைக் கடந்துஅடுத்தவகுப்புக்குள்இருந்ததன்னைவரச்சொல்லியிருந்த ஆசிரியரிடம் சென்று கொண்டு இருந்தார். நானும் எழும்பி சென்றேன். குறித்த ஆசிரியர், பாலகிருஷ்ணனிடம் கதைத்து முடித்தபின், அதாவது தியாகுவின் நிலைப்பற்றி சொல்லியதும் நானும் அவனது பரீட்சைத்தாளை அவரிடம் கொடுத்து பார்க்கச் சொன்னேன். "ஆனந்தியின் படிப்புத்தான் அநியாயமா போச்சு. இவனாவது ஒழுங்கா படிக்கணுமில்லையா? படிப்பில் அவனுடைய கவனம் குறைய காரணம் என்னன்னு பாருங்க" நான் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே "தியாகு இங்க வா" டீச்சர் சொல்லுறமாதிரி ஏனிப்படி பதில் எழுதியிருக்க" என்று அவனை உருட்டினார். அவர் அடித்து விடுவாரோ என்ற பயத்தில் "அடிச்சு பிரயோசனமில்ல அவனுக்குப் புத்தி சொல்லித்தான் திருத்தணும்" நான் சொல்லி வாய் மூடவில்லை, தியாகுவை இழுத்துக் கொண்டு போய் சுவரில் மோதி "பளார் பளார்; என அவனது கன்னத்தில் அறைந்தார்.

இப்போ நினைக்கையில் கூட எனக்கு மயிர்கூச் செறிகிறது. அவரது அடிகளை நாங்கள் யாருமே ஏன் தியாகு கூட எதிர்பார்த்திருக்கவில்லை. நிலை தடுமாறி கீழே விழுந்தவனை காலால் மிதித்து, உருட்டி.. "அட ஒரு தந்தையால் தான் பெற்ற பிள்ளையை இப்படியும் அடிக்க முடியுமா? தடுக்க முனைந்த என் மீது விழுந்த ஓரிரு அடிகளை அதன் வலிமையை

என்னாலேயே தாங்க முடியாத போது அந்த பிஞ்சுப்பாலகன் எப்படித் தாங்குவான்? யாராலும் தடுக்க முடியவில்லை அவராக களைத்து ஓய்ந்த போது தியாகு உதடு கிழிந்து ரத்தம் சொட்ட சொட்ட கீழே கிடந்தான்.

அன்றைய நாள் முழுதும் பித்துப் பிடித்தவள் போல் ஆனேன் நான். என்னால் தான் அந்த பாலகன் அடி வாங்கினான் என்ற எண்ணம் மனசுக்குள் மீண்டும் மீண்டும் தோன்ற பயங்கரமாய் உடைந்து போனேன் நான். ஓரிரு நாட்களில் உதடு வீங்கிய நிலையில் பாடசாலைக்கு வந்த தியாகுவைக் காண மனம் கூசியது. மனசு பொறுக்காமல், நான் ஒரு ஆசிரியை என்பதையும் மீறி, மனித நேயம் மிக்கவள் என்ற ரீதியில் அவனிடம் நான் மன்னிப்பு கேட்டேன். இனிமேல் என்னால், எந்தவித தவறும் உனக்கு நிகழாது என உத்தரவாதமும் அளித்தேன்.

அந்த நிகழ்வின் பின் நான் பாலகிருஷ்ணனிடம் முகம் கொடுத்துக் கதைப்பதேயில்லை. அன்று அவர் தியாகுவை அடித்தது "என் பிள்ளையைப் பற்றி என்னிடம் குறை சொல்லாதே" என சொன்னதாகவே எனக்குப்பட்டது. தற்செயலாக ஒருநாள் தியாகுவின் அம்மாவை கண்டபோது என் மன ஆதங்கத்தை அவரிடம் வெளியிட்டேன். "இந்த மாதிரி ஒரு பள்ளிக்கூடத்தில் அத்தனைப் பேரும் பார்த்து கொண்டிருக்க விபரம் தெரிஞ்ச பையனை அவர் அடித்த அடி, அவனை திருத்தாது. இன்னமும் பொல்லாதவனா, வன்மம் கொண்டவனா மாத்திவிடும். நாம முடியாம கஷ்டப்படுற நேரம் கொழைந்தைக நம்ம அன்பா கவனிக்க வேணுமின்னு நீங்களோ, தியாகுவோட அப்பாவோ நெனைச்சா அன்னிக்கு விழுந்த அடி கடைசி அடியா இருக்கட்டும்" அவங்கள புள்ளைகளா நெனைங்க,

அவங்க உணர்வுக்கு மதிப்பு கொடுங்க” என்று கவலையோடு சொன்னேன்.

கொஞ்ச காலத்தின் பின் தியாகு, அவன் குடும்பம் எல்லாமே புசல்லாவைக்கே போய்விட்டார்கள். அதன்பின் இன்றுதான் பாலகிருஷ்ணனை இப்படி ஒரு நிலைமையில் பார்க்கிறேன்.

கிட்டத்தட்ட பத்து பதினைந்து வருடங்கள் இருக்குமா? இருக்கும். பாவம் பாலகிருஷ்ணன். நல்ல வாட்டசாட்டமாக கறுத்த மீசையுடன் ஆஜானுபாகுவாய் இருந்த அவரின் தோற்றம் இந்த கால எல்லைக்குள் எப்படி உருக்குலைந்து போனது.

அடுத்த நாள் நான் சிறுவர் இல்லத்துக்குப் போக வேண்டிய முறை என்றாலும் கூட முதியோரில்லத்துக்குச் செல்ல முடிவு செய்தேன்.

நேற்றுஇரவுபூராவும்துயரம்தோய்ந்தபாலகிருஷ்ணனின் முகம் கண்ணில் தெரிய தூக்கம் தொலைந்து போன நிலையில் இன்று அவரைப் பார்த்தேயாக வேண்டும் என்ற உத்வேகத்துடன் அவ்வில்லத்துக்குள் நுழைந்தேன்.

காலைச் சாப்பாடு முடிந்து இல்லத்தினுள்ளே ஆசுவாசமாய் உலாவிக் கொண்டிருந்தோரில் பாலகிருஷ்ணனை காணவில்லை. தூரத்தில் ஒரு கல்லில் இருந்தபடி வெறித்து நோக்கிக் கொண்டிருந்த பாலகிருஷ்ணனிடம் சென்றேன்.

“என்னய்யா சாப்பிட்டீங்களா, புது எடத்துல தூக்கம் வராம கஷ்டப்பட்டீங்களோ?” என்று கேட்ட என்னைப் பார்த்து சோகமாய் சிரித்தார். “என்ன டீச்சர் நீங்க, இனிமே நா இருக்கபோற எடம் இதுதான்னு ஆனப்புறம் புடிச்சிருந்தா

என்ன புடிக்காட்டித்தா என்ன. எப்படியிருந்தாலும் ஏத்துக்க வேண்டியது தானே." என்றார். "அப்ப இந்த இடம் உங்களுக்குப் புடிக்கவில்லையா ஐயா" என்றேன். "இல்லிங்க நா அந்த அர்த்ததுல சொல்லல, ஆனந்தயோட அம்மா போனப்பறம் எனக்கு எதிலயும் விருப்பமில்லிங்க அதனால தான் அப்படி சொன்னேன்" என்றார் பாலகிருஷ்ணன்.

"அதுசரி ஆனந்தியோட அம்மாவுக்கு என்னாச்சு?" என்ற என் கேள்விக்கு நீளமாய் பதில் சொன்னார் அவர்.

"ஆனந்தி புசல்லாவையில கொண்டு போயிவிட்டதுக்கு அவங்கம்மா ரொம்ப கவலைப்பட்டாங்க. அதுவும் அந்த வருஷம் டெஸ்டு எடுக்க முடியாம புள்ள அழுததும் அவளுக்கு தாங்க முடியல. ஆனந்தியும் படிப்புல ரொம்ப எறங்கிப் போயிட்டா. அடுத்த வருஷம் செய்த டெஸ்டுலயும் அவ நல்லா பாஸ்பண்ணலைங்க. எனக்கு வந்த ஆத்திரத்துல, சொந்தக்கார பையனுக்கு அவள கல்யாணம் முடிச்சுக் கொடுத்தேங்க. ஆனந்திக்கு ரெண்டு குழந்தைக இருக்கிறப்ப அவ புருஷன் இன்னொருத்தியோட போயிட்டான். ஆனந்தி படிச்சிருந்தா ஒழுங்கா ஒரு வேலைக்குப் போயி சம்பாதிச்சிருப்பா. இப்ப புசல்லாவ தோட்டத்துல கொழுந்து எடுக்கிறா. அவள எப்படியெல்லாம் படிப்பிக்கணுமின்னு நானும் அவங்கம்மாவும் ஆசைப்பட்டிருப்போம். பெரிய ஆளாக்கணுமின்னு கனவு கண்டோம்.

புள்ளங்களை எங்ககிட்ட விட்டுப்பிட்டு இடுப்புல படங்கும் தலையில கூடையுமா கொழுந்தெடுக்க ஆனந்தி புறப்பட்ட போது கதறி அழுது கீழே விழுந்தா ஆனந்தியோட அம்மா. பட்டுனு உசிரு போயிருச்சுங்க". என்றபடி முகத்தை மூடிக்கொண்டு

கதறினார் அவர்.

"என்னய்யா செய்யுறது யாரை விதிவிட்டுது. மனதை தேத்திக்குங்க" என்றேன்.

தன்னை ஒருவாறு சுதாகரித்தபடி, என்னோட ஆசைய தியாகுதான் நிறைவேத்தினான் டீச்சர். நல்லா படிச்சான். உயர்தரமும் படிச்சு நல்ல கம்பெனியில வேலக்கி சேர்ந்தான். தொழிலு, கல்யாணம், குழந்தைகன்னு எல்லாமே அவனுக்கு நல்லாவே அமைஞ்சிச்சு. அக்காவையும் தன்னோடு கூப்பிட்டு வைத்துக் கொண்டு அவளோட பிள்ளைகளை தன் பிள்ளையா வளர்க்கிறான். என்னோட மட்டும் நிறைய பேசமாட்டான். ஏதாவது தேவையிருந்தா மாத்திரம் கதைப்பான். மனுசியும் நல்லவ".

"அப்ப ஏனய்யா இங்க வந்தீங்க, மகளோடையும் மகனோடயும் பேரக்குழந்தைகளோடயும் சந்தோஷமா இருக்க வேண்டியது தானே" என்றேன் நான்.

சற்றே மௌனமானார் பாலகிருஷ்ணன். பிறகு சொன்னார்.

"டீச்சர், நா சின்னதுல இருந்த ஏம்புள்ளைங்கள அன்பாதான் வளர்த்தேன். நா படுற கஷ்டம் நம்ம புள்ளைங்க அனுபவிக்க கூடாதுன்னா நல்லா படிச்சு முன்னுக்கு வரனும்னு நெனச்சு நா செய்தது அவங்க நன்மைக்குத்தானே டீச்சர். ஆனந்தியையும் அதனாலதான் கண்டிச்சேன். அவ வாழ்க்கையில நல்லா இருப்பா என்று நம்பித்தான் கல்யாணம் பண்ணி குடுத்தேன். எந்த அப்பனாவது தாம் பெத்து வளத்த புள்ளைட வாழ்க்கைய தானே வீணாக்குவானா? என்ன வார்த்தையெல்லாம் பேசிப்புட்டான் அவன்? ஏம்புள்ளயா இப்புடி பேசுறானு துடிச்சு போயிட்டேன் டீச்சர்"

“ஏன் அப்படி பேசினான் தியாகு”

“அவனோட மகன் ஏதோ தப்பு செய்தான்னு அவன அடிச்சிட்டேன்னு என்ன பேச்சு பேசினான் தெரியுமா? ஆனந்தியோட வாழ்க்கைய நான் தான் நாசமாக்கினேனாம். தன்னய அடிச்சு அவமானப் படுத்தினத தான் இன்னும் மறக்கலயாம், தன் புள்ளைகள் மேல கை வைக்கிற வேலையெல்லா வச்சுக்காதீங்கன்னு சொல்றான்”

மீண்டும் கண்கலங்கினார். அவன் கூறியது எல்லாம் மனப்படத்தில் தோன்றியது போலும்.

“நீங்க எங்களுக்கு பண்ணுன அநியாயத்துக்கு ஒங்கள வச்சு நா பாக்கிறதே பெரிய விஷயம், ஏதோ தட்டுல சோறு விழுதா, சாப்பிட்டமானு வாயை மூடிக்கிட்டு கெடக்க முடிஞ்சா இருங்க. இல்லியா, நீங்க எப்ப வேணாலும் வீட்ட விட்டு போகலாம். ஒங்கள யாரும் தடுக்க மாட்டாங்க, அத விட்டுப்புட்டு ஏம்புள்ளய அடிச்சு அவனோட வாழ்க்கையையும் குட்டிச்சுவராக்கிடாதீங்க” அப்படீன்னு சொல்றாம்மா அதுதா மனசு தாங்க முடியாம இங்க வந்துட்டேன்” என்றார் பாலகிருஷ்ணன்.

“அப்ப ஆனந்தியில்லயா?”

“இல்லிங்க, அவ கடைக்குப் போயிருந்தா. ;

“நீங்க தியாகுவோட போன்நம்பர தாங்க ஐயா, நா அவனோட கதைக்கனும்” என கேட்டு அவரிடமிருந்து அந்த தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்குள் பகீரதப்பிரயத்தனம் செய்ய வேண்டியதாயிற்று.

“ஐயா, நீங்க கவலைப்படாதீங்க, தியாகு அடிப்படையில் நல்லவன். அன்புள்ளவன், நீங்க அவன எல்லாருக்கும்

முன்னால அடிச்சது அவனுடைய மனசிலயும் ஆழமா, பதிஞ்சிருந்து இருக்கு. நா அவனோட கதைக்கிறேன். நாளை அவனோட ஒங்கள பாக்க வாறேன்” என சொல்லி விட்டு வீட்டுக்கு வந்தேன்.

இரவு வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு தியாகுவுடன் தொடர்பு கொள்ள தயாரான போது இல்லத்திலிருந்து அந்த துக்ககரமான சேதி தொலைபேசியினூடாக என்னை வந்தடைந்தது. இப்போ தியாகுவை கட்டாயமாக அழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் நான்!!!

**(2012)**

# பாலரஞ்சனி ஜெயபாலின் பிரதிகள் என் வாசிப்பின் வழியாக.....

**மேமன்கவி**

1

ஈழத்து மலையகத் தமிழ் இலக்கியத்துப் பொறுத்தவரை அரை நூற்றாண்டு மேலான ஒரு வரலாற்றினைக் கொண்டிருக்கிறது, .60களில் மலையகத்தில் ஆத்திரப் பரம்பரை ஒன்று தோற்றம் பெற்றது. ஈழத்து இலக்கியத்திற்கே வளம் சேர்க்கும் வண்ணம் ஈழத்து மலையக இலக்கியத்தில் அந்த ஆத்திரப் பரம்பரையினர் இலக்கியப் பணி செய்தனர். இதை மனம் கொண்டுதான் மலையக இலக்கியமே ஈழத்து இலக்கியத்திற்குப் புது இரத்தம் பாய்ச்சப் போகிறது என்று பேராசிரியர் க.கைலாசபதி அவர்களுக்குச் சொல்ல வைத்தது, அந்த வகையில் மலையகத் தமிழ் இலக்கியம் பின்வரும் விஷயங்களைப் பேசி ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தது.

**1.** முதல் கட்டமாகப் பல நூறு ஆண்டுகள் இங்குக் கொண்டு வரப்பட்ட பொழுது எதிர்கொண்ட அனுபவங்களைச் சித்திரித்த படைப்புகள்.. இதில் வாய்மொழி பாடல்களின் பங்கு கணிசமானது.

**2.** பின்காலனிய சூழலில் மலையக மக்களை நாடற்றவர்களாக ஆக்கிய பிரஜா பறிப்பு தந்த அனுபவங்களைச் சொல்லும். படைப்புகள்.

**3.** அதை தொடர்ந்து அவர்கள் அனுபவித்த, எதிர் கொண்ட பிரச்சினைகள். அவையாவன

(அ) மலையக மக்களின் பல தலைமுறையினர் அனுபவித்து வரும் வறுமை

(ஆ) அதன் காரணமாக முழுமையான கல்வி பெற முடியாத நிலை

(இ) மலையக மக்களின். பொருளாதாரச் சுபீட்சத்திற்குத் தடையாக இருக்கும் குறைந்த சம்பளம், அது சார்ந்த போராட்டம், தொழில் சங்க நடவடிக்கைகள் (இற்றைவரை 1000 சம்பளத்திற்கான போராட்டம் அடங்கும்.)

(ஈ) தோட்டத்துறையின் பல வகையான வீழ்ச்சியும், தோட்டப் பொருளாதாரம் சந்தித்த நெருக்கடி, அதன் காரணமாக மலையக மக்களின் நகரத்தை நோக்கிய நகர்வு அது தந்த அனுபவங்கள்.

(எ) குடிப்பழக்கம்

இங்கு இரண்டாவதாகச் சொல்லப்பட்ட சுதந்திரத்திற்கு பின்னான அதாவது பின்காலனிய காலகட்டத்தில் மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டபொழுது, அதாவது அவர்கள் நாடற்றவராக ஆக்கப்பட்டு, இந்தியா இலங்கை நாடுகளிடையே பரிமாறப்பட்ட பண்டங்களாக மாற்றப்பட்ட பொழுது, அச்சமூகத்தின் பல தலைமுறையினர் இங்குப் பிறந்து இங்கே மரணித்தவர்களின் பரம்பரையினராக இருந்ததன் காரணமாகத் தங்கள் மண்ணுக்கான போராட்டக் குரல்.

அதாவது நிலமிழந்தவர்களின் குரல் மேலோங்கிய பொழுது அந்த நிலவரத்தைச் சித்திரிக்கும் இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.

இவ்விடத்தில் ஒரு குறிப்பு சொல்ல வேண்டும். சில வருடங்களுக்கு முன் சிறுவயதிலே ஜெர்மனுக்குக் குடிபெயர்ந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரசாந்தி சேகர் என்ற பெண்மணி இங்கு வந்து ஜெர்மன் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட தனது மேற்படிப்புக்கான ஆய்வு ஒன்றுக்காக ஈழத்தின் பின்காலனிய இலக்கியம் சம்பந்தமாக உரையாடியபோதுதான், ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் வழியே பின்காலனிய தமிழ் இலக்கியத்தின் ஒரு தன்மையான நிலம் இழந்தவர்களின் குரல் மலையகத் தமிழ் இலக்கியத்தில் ஒலித்திருப்பதை என் போன்றவர்கள் இனங்காண முடிந்தது. அத்தோடு 80களுக்கு பிறகு ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் ஒலித்த நிலமிழந்தவர்களின் குரலுக்குரிய முன்னோடியாக மலையகத் தமிழ் இலக்கியம் அமைந்திருப்பது என்பது புரிந்து கொள்ள முடிந்தது.

அதற்குப் பின்னான காலகட்டத்தில் மலையகத் தமிழ் சமூகம் எதிர்கொண்ட பல பிரச்சினைகளைப் பேசுகின்ற இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.

## 2

மேற்குறித்த கருத்துகளின் பின்னணியில் தான் யாழ் மரபின் வழி வந்தாலும் தந்தையின் பணி காரணமாக மலையகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக் கொண்டு, ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் சிறுகதை கவிதை, ஹைக்கூ மெல்லிசைப் பாடல்கள் எனப் பல வழியிலும் பணியாற்றி

வரும் பாலரஞ்சனி ஜெயபாலின் 12 சிறுகதைகள் கொண்ட 'நெத்திக்காசு' எனும் இத்தொகுப்பில் அமைந்துள்ள சிறுகதைப் பிரதிகளை நோக்க வேண்டி இருக்கிறது.

பாலரஞ்சனியின் பிரதிகளைப் பொறுத்தவரை நீண்ட காலமாக மலையகத் தோட்டப் பகுதியில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் ஆசிரியையாகக் கடமையாற்றியவர் என்ற வகையில் மலையகத் தோட்டப் பாடசாலை ஆசிரியை ஒருவரின் அனுபவ வெளிப்பாடுகளாக இத்தொகுப்பின் பிரதிகள் அமைந்துள்ளன, உதிரியாக இவரது பிரதிகளை வாசித்த பொழுது அக்கருத்து புரிந்து கொள்ளப்பட்டாலும், இத்தொகுப்பில் ஒரு சேர வாசிக்கக் கிடைத்த பொழுது அக்கூற்று மேலும் உறுதியாகிறது.

அந்த வகையில் இக் குறிப்பில் மேலே மலையகப் படைப்பாளியின் உள்ளடக்கங்களைப் பேசுகையில் குறிப்பிட்ட நாலாவது குறிப்பில் குறிப்பிட்ட .மலையக மக்களின் பல தலைமுறையினர் அனுபவித்து வரும் வறுமை, அதன் காரணமாக முழுமையான கல்வி பெற முடியாத நிலை, மலையக மக்களின். பொருளாதாரச் சுபீட்சத்திற்குத் தடையாக இருக்கும் குறைந்த சம்பளம், அது சார்ந்த போராட்டம், தொழில் சங்க நடவடிக்கைகள் (இற்றை வரை 1000 சம்பளம். கிடைக்காமைக்கான போராட்டம் வரை), தோட்டத்துறை சந்தித்த பல வகையான வீழ்ச்சியும், மலையக மக்களின் கல்வித்துறை வளர்ச்சி சமூக அரசியல் காரணமாகத் தோட்டப் பொருளாதாரம் சந்தித்த நெருக்கடி, அதன் காரணமாக மலையக மக்களின் நகரத்தை நோக்கிய நகர்வு அது தந்த அனுபவங்கள்., குடிப்பழக்கம் போன்றவற்றைப் பற்றிப் பேசுகின்ற படைப்புகளாகப் பாலரஞ்சனியின் படைப்புகள் வெளிப்பட்டுள்ளன..

அடுத்து அவரது பிரதிகள் எல்லாமே பெண்களைப் பிரதானப் பாத்திரங்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் மற்ற பிரதேசப் பெண்கள் சந்திக்காத பல பிரச்சனைகளை மலையகப் பெண்கள் சந்தித்திருக்கிறார்கள் என்பதை இவரது எல்லாப் பிரதிகளிலும் வரும் பெண்கள் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் தொடர்ந்து நிலவும் ஆணாதிக்கச் சூழலில் சந்திக்கும் நெருக்கடிகளும் பிரச்சினைகளும், அவற்றுக்கான அவர்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களை அப்பிரதிகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அப்பெண்களில் பலர் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நெருக்கடிகளைக் கடந்து ஏதோ விதத்தில் சாதித்தவர்களாக இருக்கிறார்கள். அதை நேரம் தாங்கள் பிரச்சினைகளை நெருக்கடிகளைக் கடக்க முடியாமல் அடங்கிப் போகின்றவர்களாக இருக்கிறார்கள், பாலாரஞ்சனியின் இப்பிரதிகள் மலையகத்தில் தொடர்ந்து நிலவும் ஆணாதிக்கத்தின் காரணமாகப் பெண்கள் எவ்வாறு தம்மைத் தகவமைத்துக் கொள்கிறார் என்பதைப் பேசுவதன் காரணமாகப் பெண்ணிய நிலை நின்று பேசும் மலையகப் பெண் படைப்பாளியின் பிரதிகள் என்று அடையாளப்படுத்தக் கூடியதாக இருக்கிறது..

அடுத்துப் பாலரஞ்சனியின் பெரும்பாலான பிரதிகளில், மலையகத்தின் கல்வியில் பின் தங்கிய, தங்களின் மண்ணைப் பிரிந்துபோகத்தயார் இல்லாத, பழையதலைமுறையினர்களைப் பிரதானப் பாத்திரங்களாகத் தொடக்கப் பெற்று, அப்பிரதிகள் நிறைவு பெறுவதற்கு முன்னதாகவே அவர்கள் மறைந்து விடுகிறார்கள். அப்படி அவர்கள் மறைந்து விட, மலையகச் சமூகம் என்பது, புதிய தலைமுறையினர் நிறைந்த சமூகமாக மாறுகிறது.. ஆனால் புதியவர்கள் கல்வியையும் தொழிலையும்

அவர்கள் பிறந்து வளர்ந்த மண்ணிலே பெற வேண்டும் என்ற பெரியவர்களின் அபிலாஷைகளை வேண்டுகோள்களை மறுதலித்து, தாங்கள் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டுப் போகிறார்கள், அப்போக்கு காலத்தின் தேவை ஆகிறது. இது பிழையான செயல் என்று சொல்வதற்கில்லை. ஆனால் கல்வி ரீதியாகப் பெறுகின்ற சமூக அந்தஸ்து, தொழில் ரீதியாகப் பெறுகின்ற பொருளாதார அந்தஸ்து. ஆகியவற்றின் காரணமாக அவர்கள் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு அன்னியமாகி விடுவதும், தங்களை ஒரு உயர் குடிகளாகக் கருதிச் சொந்த மண்ணை விட்டுத் தூரமாகி விடுவதையும் பாலரஞ்சனியின் பல பிரதிகள் பேசுகின்றன..

மேலும், மிகச் சிறப்பாக முறையிலும் தாக்கப்பூர்வமான முறையிலும் கட்டமைக்கப்பட்ட சில பிரதிகள் இத்தொகுப்பில் இடம் பிடித்துள்ளன. அதில் முதன்மையான பிரதியாக நெத்திக்காசு எனும் பிரதி அமைந்துள்ளது. மலையகத்தில் தலைமுறை தலைமுறையாக நிலவும் வறுமையை மிக நுண்ணிய முறையில் எடுத்துக் காட்டும் பிரதியாக இப்பிரதி அமைந்துள்ளது. அதன் காரணமாகத்தான் இக்கதை ஜெர்மன் மொழியிலும், சிங்கள மொழியிலும் மொழிபெயர்க்கும் தகமையைப் பெற்று இருக்கிறது. இந்த வரிசையில் தங்க வளையல் எனும் பிரதியும் இடம் பிடிக்கிறது. .தங்க வளையல் மாப்பாஜானின் வைரமாலை கதை கொண்டிருக்கும் விறுவிறுப்புடன் எழுதப்பட்ட ஒன்று என்று சொல்லப்பட்டாலும் அது மறுதலிக்க முடியாத கூற்று என்றாலும், என்னைப் பொறுத்த வரை பாலரஞ்சனி தங்கவளையல் கதையில் தங்க வளையல் என்பது வெறுமனே ஓர் ஆபரணம் என்பதைக் கடந்து அது- மலையக மக்களின் குடும்பக் கலாசாரம், அதன் ஊடான வறுமை என்பதற்கான குறியீடாக இப்பிரதியில் வெளிப்பட்டிருப்பது சிறப்பாக இருக்கிறது.

மேலும் இவரது பெரும்பாலான பிரதிகளில் வரும் சிறுவர்களைப் பாத்திரங்களாகவே வந்து அவர்கள் வளரும் போது ஏற்படுகின்ற மாற்றங்கள் நெருக்கடிகளைப் பற்றி மிக அழகாகச் சொல்லி இருக்கிறார். உதாரணத்திற்கு மாற்றம் போன்ற பிரதிகளைச் சொல்லாம்.

இப்பிரதிகளின் கதைசொல்லி மலையகச் சிறார்களின் நடத்தைகளிலும், அவற்றில் ஏற்படும் மாற்றங்களால் அவர்கள் அவரிடமிருந்து தூரமாகிப் போவதும், நெருங்கி வருவதுமான நடத்தை கதை சொல்லியின் மனதிலும் உணர்வுகளிலும் ஏற்படும் ஊடாட்டங்களை நன்றாகப் பதிவு செய்கிறார். மலையகத்தைப் பின்னணியாகக் கொண்டு அன்றும் சரி, இன்றும் சரி எழுதப்படும் படைப்புகள் அதிகம் கவனம் செலுத்தாத ஓர் அம்சம் என்ற வகையில் மலையகச் சிறுகதையாளர்களிலிருந்து, வேறுபட்டு, அவருக்குரிய தனித்துவமாகப் பாலரஞ்சனி வளர்ந்து சென்று இருக்கிறார் எனத் தெரிகிறது.

எதிர்வரும் காலங்களில் பாலரஞ்சனி படைப்புலக வழியாகக் குறிப்பாக நாவல் போன்ற வடிவங்களில் மேற்குறித்த அவரது தனித்துவத்தின் அடிப்படையில் வெளிப்பட்டார் என்றால் கவனத்திற்குரிய ஒரு மலையகப் பெண் எழுத்தாளராகத் தன்னைத் தக்க வைக்கக் கூடியதாக இருக்கும்.



# பாலரஞ்சனி ஜெயபால்

மலையகத்தை பிறப்பிடமாய் கொண்ட பாலரஞ்சனி ஜெயபால் ஓர் ஆசிரியை. மலையக இலக்கியத்துறையில் இவர் சிறுகதை, கவிதை, ஹைக்கூ, மெல்லிசைப் பாடல் என பல வழிகளிலும் பங்களிப்பு செய்து வரும் ஒரு பெண் படைப்பாளி.

மலையக இளைய தலைமுறையினரின் கல்வித்துறையில் அதிக அக்கறை கொண்டவர். ஆசிரியை தொழில் மூலம் இவர் சந்திக்கும் மலையக சமூகத்தின் பிரச்சினைகள் பெற்றுக்கொடுக்கும் அனுபவங்கள் இவரது படைப்புகளுக்கு மிகவும் உதவி புரிகின்றன. நெத்திக்காசு இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும்.

600/-

Short Stories

ISBN 978-624-00-1212-6

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவட் லிமிடட்
661, 665, 675, மருதானை வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904
godageem@slt.lk www.godage.com

அட்டை வடிவமைப்பு கொடகே புத்தகமாளிகை